











# மீள்பார்வை

මීල්පාර්වෙ

Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/116/NEWS/2019 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 424 • 11 ஒக்டோபர் 2019 வெள்ளிக்கிழமை • ஸபர் 1441 • விலை 40.00




# 62 முஸ்லிம் பயங்கரவாதிகளுக்கும் நிதி உதவி செய்யத் தடை

பயங்கரவாதத்துடன் தொடர்புபட்ட செயற்பாடுகளில் ஈடுபட்டதற்காகவும், பயங்கரவாதத்துக்கு நிதியுதவி அளித்தார்கள் என்பதற்காகவும் 62 முஸ்லிம் பெயர்களை பெயர்குறிக்கப்பட்ட ஆட்களின் நிரலில் சேர்க்கும் வர்த்தமானி அறிவித்தலை அரசாங்கம் வெளியிட்டுள்ளது.

2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 09 ஆம் திகதிய 2140/16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியிலேயே இவர்களின் பெயர்கள் வெளியிடப்பட்டுள்ளன. 2012 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபை ஒழுங்குவிதிகளின் படி ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் 1267 ஆவது ஒழுங்கு விதியை நடைமுறைப்படுத்துவற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நியமிக்கப்பட்டுள்ளதன் அடிப்படையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரினால் இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

ஐ.நா. பாதுகாப்புச் சபையின் ஒழுங்குவிதிகளுக்கு அமைய, தடை செய்யப்பட்ட தாலிபான், அல்கைதா, ஐஎஸ் அமைப்புக்களுடன் தொடர்புடையவர்களாக நிரூபணமாகும் நபர்கள் பெயர் குறிப்பிடப்பட்ட நபர்களாக அல்லது அமைப்புக்களாக (Designated Individuals or Entities) அறிவிக்கப்படுவர். அதனைத் தொடர்ந்து இவர்களுடைய நிதி, சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலங்களை முடக்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். அதேபோல இவர்களுக்கு நிதி வழங்குதல், சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலங்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நபர்களும் அமைப்புக்களும் வர்த்தகங்களும் நிறுவனங்களும் பயங்கரவாதத்துக்கு உதவியதாக கணிக்கப்படுவர்.

(வர்த்தமானியில் பெயர் குறிக்கப்பட்ட நபர்களின் பெயர்கள் 15 ஆம் பக்கத்தில்)

## திகன அறிக்கையை வெளியிடாததேன்?



2018 மார்ச் மாதம் திகனவில் கட்டவிழ்த்து விடப்பட்ட முஸ்லிம்களுக்கெதிரான வன்முறைகள் தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவுக்குக் கிடைத்த முறைப்பாடுகளுக்கமைய மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பிலான அறிக்கையை மனித உரிமைகள் ஆணைக் குழு இதுவரை வெளியிடாமல் இருக்கிறது. (பக். 14)

### 21/4 தாக்குதல் தொடர்பில் முறையிட 14 வரை சந்தர்ப்பம்

## தாக்குதலின் பின்னரான இனவாத வன்முறைகளையும் முறையிட வாய்ப்பு



ஈஸ்டர் தாக்குதலின் பின்புலம் தொடர்ந்து ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவிடம் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளை 14 ஆம் திகதி வரை சமர்ப்பிக்க முடியும் என ஜனாதிபதி விசாரணைக் குழுவின் செயலாளர் எச்.எம்.பி.பி.ஹேரத் அறிவித்துள்ளார்.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டவர்களை கைது செய்வதில், விசாரிப்பதில் நடைபெற்ற அதிகாரத் துஷ்பிரயோகம் அல்லது செய்யத் தவறிய விடயங்கள், இந்தப் பயங்கரவாதச் செயலுடன் சம்பந்தப்பட்ட நபர்கள் மற்றும் அமைப்புக்களை (பக். 14)

## காவியைக் களைந்து விட்டு சண்டித்தனம் காட்டினால் பதிலடி கொடுப்போம்



சைவ சித்தாந்தத்தின் அடிப்படையில் காவி உடை அணிவது புனிதமானது. ஞானசார தேரர் காவி உடையை களைந்து விட்டு சண்டித்தனத்தைக் காட்டினால் நாங்களும் அதற்கான பதிலடி கொடுப்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் சவால் விடுத்துள்ளார்.

முல்லைத்தீவு விகாராதிபதியின் பூதவுடலை தகனம் செய்வது தொடர்பில் நீதிமன்றம் விடுத்த கட்டளையை அவமதித்த ஞானசார தேரரை கைது செய்யுமாறு வலியுறுத்தி யாழ் நகரில் நடைபெற்ற போராட்டத்தின் பின்னரே அவர் இவ்வாறு கருத்து வெளியிட்டார். (பக். 14)

## சஜித்தின் ஊடகப் பேச்சாளராக ஜாதிக ஹெல உருமய முக்கியஸ்தர்



ஐக்கிய தேசிய முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவின் ஊடகப் பேச்சாளராக ஜாதிக ஹெல உருமயவின் முக்கிய புள்ளியான தனுஷ்க ராமநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி சிறிசேனவின் ஊடகப் பிரிவைக் கையாண்ட இவர், மஹரகம பிரதேச சபை உறுப்பினர் என்பதோடு அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் மெகாபொலிஸ் மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் ஊடகச் செயலாளராகவும் பணிபுரிகின்றார்.

## ஒரே நாடு ஒரே சட்டம் என்பது கவனத்தில் எடுக்கப்பட்டுள்ளது



ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற விவகாரம் தொடர்பில் ஜேவிபியின் அங்கத்தவர்களுக்குத் தெளிவுபடுத்தி இருக்கிறோம். இது தொடர்பில் அவர்கள் மிகுந்த புரிந்துணர்வுடன் இருக்கின்றார்கள் என தேசிய மக்கள் சக்தியின் பங்காளியான நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளர் சிராஜ் மஷ்ஹூர் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளரான ஜேவிபியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க ஒரே நாடு ஒரே சட்டம் என்ற கொள்கையில் இருக்கையில், முஸ்லிம் சமூகத்துக்குப் பாதகமான இந்த நிலைப்பாடு (பக். 14)

## தேர்தலில் பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் பற்றி முறையிடலாம்



பொதுச் சொத்துக்கள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்கு TISL அவசர அழைப்புச் சேவையை ஆரம்பித்துள்ளது. பொது அலுவலர்கள் அவதானமாக செயற்படவும்.

தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போது பொதுச் சொத்துக்கள் துஷ்பிர யோகம் செய்தல் தொடர்பாக முறையீடு செய்வதற்கான துரித கதி அழைப்பு தொலைபேசிய சேவையை TISL அறி முகம் செய்துள்ளது. முறைப்பாடானது 076 3223662 மற்றும் 076 3223448 அல்லது pppr@tisrilanka.org என்ற மின்னஞ்சலுக்கு மின்னஞ்சல் செய்ய முடியும்.

பொதுச் சொத்துக்களை பாதுகாத்தல் (Programme Protection for Public Resource) தொடர்பான செயற்திட்டமானது (பக். 14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை ஜனாதிபதி தேர்தல்:
## 10 சுவாரஸ்ய தகவல்கள்

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டு, வேட்பு மனுத் தாக்கல் ஒக்டோபர் 7 உடன் நிறைவு பெற்றுள்ளது. இலங்கையில் ஜனாதிபதித் தேர்தல் முறைமை அறிவிக்கப்பட்ட ஆண்டு முதல் இதுவரை 7 ஜனாதிபதி தேர்தல்கள் நடத்தப்பட்டுள்ளன. பிரதமர் ஆட்சியாகக் காணப்பட்ட இலங்கையின் ஆட்சி முறை, 1978 ஆம் ஆண்டு புதிதாக உருவாக்கப்பட்ட அரசியலமைப்பின் பிரகாரம், நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமை அமுல்படுத்தப்பட்டது. இதன்படி, கடந்த 7 ஜனாதிபதித் தேர்தல்களையும் விட இந்த முறை நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தல் முற்றிலும் மாறுப்பட்ட, பலரும் எதிர்பார்க்காத பல சம்பவங்கள் பதிவாகியுள்ள ஒரு தேர்தலாக மாற்றம் பெற்றுள்ளது.

- ஆட்சியிலுள்ள ஜனாதிபதியொருவர், ஆட்சியிலுள்ள பிரதமர் மற்றும் பதவியிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் போட்டியிடாத ஒரு ஜனாதிபதித் தேர்தல் இது.
- இலங்கை வரலாற்றில் அதிகளவிலான வேட்பாளர்கள் போட்டியிடும் ஜனாதிபதித் தேர்தலாக இது பதிவாகியுள்ளது. (35 வேட்பாளர்கள்)
- அதிகளவிலான வேட்பாளர்கள் வேட்பு மனுவை தாக்கல் செய்த ஜனாதிபதி தேர்தலாக இது பதிவாகியுள்ளது. (41 வேட்பு மனுக்கள்)
- அதிநீளமான வாக்குச்சீட்டை கொண்ட ஜனாதிபதி தேர்தலாக இது பதிவாகின்றது. (2 அடி நீளத்தை விடவும் பெரிதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது)
- இலங்கை வரலாற்றில் அதிக செலவீனத்தை கொண்ட ஜனாதிபதி தேர்தல் இதுவாகும் (400 கோடி ரூபாவிற்கும் அதிக தொகை செலவிடப்படவுள்ளது)
- வாக்குபெட்டிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளன.
- 20 ஆண்டுகளுக்கு பின்னர் முதற் தடவையாக பெண்ணொருவர் ஜனாதிபதித் தேர்தல் களத்தில் இறங்கியுள்ளார். (1999ஆம் ஆண்டு தேர்தலில் இறுதியாக பெண்கள் போட்டியிட்டிருந்தனர்)
- இந்திய வம்சாவளி தமிழர் ஒருவர் போட்டியிடும் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் இதுவாகும். (சுப்ரமணியம் குணரத்னம்)
- ஜனாதிபதி ஆட்சியிலுள்ள பிரதான கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி போட்டியிடாத முதலாவது ஜனாதிபதி தேர்தல்.
- சுயாதீன ஆணைக்குழு அமைக்கப்பட்ட நிலையில், ஆணைக்குழுவின் கீழ் நடத்தப்படும் முதலாவது ஜனாதிபதித் தேர்தல். (இதற்கு முன்னர் தேர்தல் திணைக்களத்தின் கீழ் தேர்தல்கள் நடத்தப்பட்டன,)

-பிபிசி






# இஸ்லாம் ஓ போபியா இப்படியும் எதிர்கொள்ளலாம்

இன்று இஸ்லாம் பல்வேறுபட்ட சவால்களுக்கு முகம் கொடுக்கின்றது. அதில் முக்கியமானது இஸ்லாம் ஓ போபியா எனப்படும், இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பயங்கரவாதமாக பார்ப்பது.

செப்டெம்பர் 11 இற்கு பின்னர் இந்த போபியாவை வளர்த்தவர்கள் அமெரிக்கர்களும், இங்கிலாந்து நாட்டவர்களும்.

★உதைப்பந்தாட்டம்★

இங்கிலாந்து நாட்டில் நடைபெறும் பிரீமியர் லீக் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட போட்டிகள் போபியாவை குறைப்பதற்கு பெரும் பங்காற்றியுள்ளன.

★விளையாட்டில் இஸ்லாமிய முன்மாதிரி★

இங்கிலாந்து உள்நாட்டு விளையாட்டு கழகங்களில் பல நாடுகளைச் சேர்ந்த முஸ்லிம் வீரர்கள் பங்கேற்கின்றனர்.

இந்த வீரர்களின் முன்மாதிரியான செயற்பாடுகளை இங்கிலாந்து மக்கள் பாராட்ட ஆரம்பித்துள்ளனர்.

இந்த மாற்றத்தை ஆரம்பித்து வைத்தவர் லிவர்பூல் அணி வீரரும், எகிப்து தேசிய அணி வீரருமான முஹம்மத் ஸலாஹ்.

★லிவர்பூல்★

1.38 மில்லியன் சனத்தொகை கொண்ட மேஸீஸைட் எனும் பிரதேசம். இது இங்கிலாந்தின் வட மேற்கு பிரதேசத்தில் அமைந்துள்ளது. இப்பிராந்தியத்துக்கு சொந்தமான அணிதான் லிவர்பூல் விளையாட்டுக் கழகம்.

இப்பிராந்தியமும் முழுமையாக முஸ்லிம்களை பயங்கரவாதிகளாக பார்க்கும் பிரதேசம்.

★ஆய்வு முடிவுகள்★

இப்பிராந்தியத்தில் இஸ்லாமிய எதிர்ப்பு வீதம் 50 வீதத்தில் இருந்து 18.9 வீதமாக குறைவடைந்துள்ளது.

மேஸீஸைட் பிராந்தியத்தில் தெரிவு செய்யப்பட்ட 8060 பேரில் 7.2 வீதமாக இருந்த இஸ்லாமிய எதிர்ப்பு 3.4 வீதமாகக் குறைவடைந்துள்ளது.

முஹம்மத் ஸலாஹ்வின் முன்மாதிரிகள் இம்மக்களை இஸ்லாத்தை படிக்க தூண்டியுள்ளன.

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் அமைந்துள்ள ஸ்டைன்போட் ஆய்வு பல்கலைக்கழகம் 'முஹம்மத் ஸலாஹ்வின் வருகை இப்பிராந்தியத்தில் இஸ்லாமிய எதிர்ப்பை 18.9 வீதமாக குறைத்துள்ளது' என்பதனை உறுதிப்படுத்தியுள்ளது.

டுவிட்டர் மூலம் பரிமாற்றப்படும் இஸ்லாமிய எதிர்ப்பு கருத்துக்கள் 3 வீதத்துக்கு குறைவடைந்துள்ளது.

டெய்லி ஸ்டார் பத்திரிகை 'முஹம்மத் ஸலாஹ், அவரின் அணி சக வீரர் செனகல் நாட்டை சேர்ந்த சாடியோ மானி ஆகியோர் கோல் அடித்துவிட்டு ஸுஜூத் செய்து நிலத்தை முத்தமிடும் காட்சியை மேஸீஸைட் மக்கள் உணர்ச்சி பூர்வமாக பார்க்கின்றனர்' என்று எழுதுகின்றது.

பிரான்ஸ் நாட்டின் மாலை நேர பத்திரிகை லீமொண்டி 'விளையாட்டு வீரர் ஸலாஹ் லிவர்பூல் மக்களை இஸ்லாத்தை விரும்புபவர்களாக மாற்றிவிட்டார், அவர்கள் அவரைப் புகழ்கின்றனர்'.

இஸ்லாத்தை அதன் தூய வடிவில் பின்பற்றும் போது எவ்வளவோ மாற்றங்கள் ஏற்படலாம்.

கருத்து முரண்பாடுகள் எம்மை இஸ்லாமிய ஒழுக்கம் - பண்பாடுகளை விட்டும் தூரமாக்கிவிட்டன. ஆடை, அலங்காரங்களை விடவும் உறுதியான ஈமான், முன்மாதிரியானசெயற்பாடுகளே எமது இன்றைய தேவை.

இஸ்லாத்தை சகல வடிவங்களிலும் முன்வைப்போம். இசை, நாடகம், சினிமா, பாடல், விளையாட்டு, கலை நிகழ்ச்சிகள், இது போன்ற இன்னும் பல....

பஹ்ரி அனஸ்
அல்-முஜ்தமா சஞ்சிகை,

# இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றை ஆவணப்படுத்திய முப்பெரும் ஆளுமைகள்

**1.பேராசிரியர் கலாநிதி அல்லாமா தைக்கா சுஜப் ஆலிம்.**

B.A (Hon) ceylone, M.A, PhD (USA)

ஆய்வு நூல் : *Arabic, Arwi and Persian in Sarandib and Tamil Nadu & A study of the Contributions of Sri Lanka and Tamil Nadu to Arabic, Arwi, Persian and Urdu Languages, Literature and Education

★880 பக்கங்கள், இந்த ஆய்வு நூலை எழுத சுமார் 35 வருடங்கள் நூலாசிரியர் ஆய்வு செய்ததாக கலாநிதி சுக்ரி அவர்கள் கூறுகிறார்கள்.

**2.பேராசிரியர் லோனா தேவராஜா அம்மையார்**

B.A, M. A (Ceylone), PhD (London)

ஆய்வு நூல் : *THE MUSLIMS OF SRI LANKA....ONE THOUSAND YEARS OF ETHNIC HARMONY 900 - 1915

**3. கலாநிதி எம் ஏ எம் சுக்ரி**

B.A (ceylone) M. A, PhD (Edinburgh)

தொகுத்த ஆய்வு நூல்: Muslims of Sri Lanka: Avenues to Antiquity

இந்த நூலுக்கு இலங்கையின் புகழ் பெற்ற வரலாற்றுத் துறை அறிஞரும் மலேசியாவின் மலாயா பல் கலைக் கழகத்தின் பேராசிரியரும் புகழ்பெற்ற வரலாற்று ஆய்வாளருமான பேராசிரியர் பாச்சா ஹூஸைமியா உட்பட பல அறிஞர்கள் பங்களிப்பு வழங்கியிருக்கிறார்கள். பல அறிஞர்கள் சமர்ப்பித்த ஆய்வுக் கட்டுரைகள் தொகுப்பாக வெளியிடப்பட்டது. இந்த ஆளுமைகளின் பணிகள் இடம் பெற்றிருக்காவிட்டால் இலங்கை முஸ் லிம்களின் வரலாறு அழிந்து போயிருக்கும் என்று களனிப் பல்கலைக் கழகத்தின் தொல்பொருள் ஆய்வுத் துறையின் தலைவர் பேராசிரியர் ராஜ் சோமதேவ அவர்கள் கூறுகிறார்.

வாழ்வின் பெரும் பகுதியை முஸ்லிம் சமூகத்தின் வரலாற்று இருப்பை உறுதிப்படுத்துவதற்காக அர்ப்பணித்த இவர்களின் சேவையை வல்லநாயன் ஏற்றுக் கொண்டு அவர்களையும் பொருந்திக் கொள்வானாக.

பஸ்ஹான் நவாஸ்

# அவர்களைச் சிறையில் சந்தித்தேன்



'என்ன குற்றம் செய்தீர்கள்'
என்று கேட்டேன்

ஒவ்வொருவராகச்
சொன்னார்கள்.

எங்கள் வீட்டில்
திருடிக்கொண்டு ஒருவன் ஓடினான்.
'திருடன் திருடன்' என்று கத்தினேன்.
அமைதிக்குப் பங்கம் விளைவித்ததாக என்னைக்
கைது செய்து விட்டார்கள்.

'நான் கரிமூட்டை தூக்கும் கூலி'
கூலியாகக் கிடைத்த ரூபாய் நோட்டு
கரி பட்டுக் கருப்பாகிவிட்டது.
'கருப்பு பணம்' வைத்திருந்ததாகக்
கைது செய்துவிட்டார்கள்.

என் வயலுக்கு வரப்பெடுத்துக் கொண்டிருந்தேன்.
'பிரிவினைவாதி' என்று
பிடித்துக் கொண்டு வந்து விட்டார்கள்

'அதிகாரி இலஞ்சம் வாங்கினான்' தடுத்தேன்.
அரசுப் பணியாளரை அவரது 'கடமை'
செய்யவிடாமல் தடுத்தாகத் தண்டித்துவிட்டார்கள்

'வறுமைக் கோட்டை அழிப்போம்' என்று பேசினேன்.
அரசாங்க சொத்தை 'அழிக்கத் தூண்டியதாக
அடைத்துப்போட்டு விட்டார்கள்.

'ஊழல் பேர்வழிகளை நாடு கடத்த வேண்டும்'
என்று எழுதினேன்.
'கடத்தல்காரன்' என்று கைது செய்துவிட்டார்கள்

'அக்கிரமத்தை எதிர்த்து ஆயுதம் ஏந்தச்
சொன்னான் கண்ணன்' என்று யாரோ கதா
காலட்சேபத்தில் சொல்லியிருக்கிறார்கள்.
என் பெயர் கண்ணன் 'பயங்கரவாதி' என்று
என்னைப் பிடித்துக் கொண்டு வந்துவிட்டார்கள்.

கவிக்கோ அப்துர் ரஹ்மான்

# இலங்கை - மாலைதீவு பாராளுமன்றங்களை ஒருங்கிணைத்து செயற்படுவது தொடர்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீம் பேச்சுவார்த்தை





இலங்கை - மாலைதீவு பாராளுமன்றங்களை ஒருங்கிணைத்து செயற்படுவதன் மூலம் ஆலோசனை மற்றும் பங்களிப்பை பகிர்ந்துகொள்வது தொடர்பில் அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்கும் மாலைதீவு சபாநாயகர் முஹம்மட் நசீட்டுக்கும் இடையில் முக்கிய சந்திப்பொன்று மாலைதீவு பாராளுமன்றத்தில் நடைபெற்றது.

சார்க் உயர்கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் கலந்துகொள்வதற்காக மாலைதீவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் நகர திட்டமிடல், நீர் வழங்கல் மற்றும் உயர் கல்வி அமைச்சருமான ரவூப் ஹக்கீம் அங்கு பல்வேறு உயர்மட்ட கலந்துரையாடல்களில் கலந்துகொண்டார்.

மாலைதீவைச் சென்றடைந்த அமைச்சர் ரவூப் ஹக்கீமை அந்நாட்டுக்கான இலங்கைத் தூதுவர் ஏ.பி. தோரதெனிய விமான நிலையில் வரவேற்றார்.

அதன்பின், மாலைதீவு உயர் கல்வி அமைச்சர் கலாநிதி இப்றாஹிம் ஹஸனை சந்தித்து கலந்துரையாடினார். இச்சந்திப்பில் பல்லைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வாவும் கலந்துகொண்டார்.

மருத்துவம், பொறியியல், சட்டம் உள்ளிட்ட துறைகளில் தகுதியான மாலைதீவு மாணவர்களை இலங்கை பல்கலைக்கழங்களில் உள்ளீர்ப்பது குறித்தும், எதிர்காலத்தில் உயர் கல்வி துறையில் மேற்கொள்ள வேண்டிய முன்னேற்றங்கள் குறித்தும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டன.

அதனையடுத்து மாலைதீவின் முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய சபாநாயகருமான முஹம்மட் நசீட்டும் இடையில் பூர்வாங்க கலந்துரையாடலொன்று அந்நாட்டு பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இலங்கை - மாலைதீவு பாராளுமன்றங்களை ஒருங்கிணைத்து செயற்படுவதன் மூலம் ஆலோசனை மற்றும் பங்களிப்பை பகிர்ந்துகொள்வது தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அண்மையில் மாலைதீவுக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது, இரு நாடுகளின் பாராளுமன்றங்களையும் ஒருங்கிணைத்து செயற்படுவது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டது. இதற்கென அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையில் குழுவொன்றும் அமைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேரம் பேசலிலிருந்து சோரம் போவது வரை

• பியாஸ் முஹம்மத்



இலங்கையின் அரசியல் போக்குகள் வித்தியாசமான வடிவமெடுத்திருக்கின்றன. ஜனாதிபதித் தேர்தலில் வரலாற்றில் முதற்தடவையாக இவ்வளவு அதிகமாக 35 பேர் போட்டியிடுகிறார்கள். இரு கட்சி அரசியல் என்ற நிலை 1994 இல் சந்திரிக்கா கூட்டணி அமைத்ததில் இருந்து கூட்டணி அரசியலாகப் பரிணமித்தது. அன்றிலிருந்து கூட்டணிகளையே தேர்தல் களத்தில் காண முடிகின்றது.

கூட்டணி அமைப்பதன் முக்கிய நோக்கம் பிரதான கட்சிகளின் வெற்றியை உறுதிப்படுத்துவதாக அமைகிறது. இந்த வெற்றியை பிரதான கட்சிகளுக்குப் பெற்றுத் தருவதற்காக கூட்டணியில் இணையும் கட்சிகள் நிபந்தனைகளை விதிப்பதும் பகரமாக தமக்குத் தேவையானதைப் பெற்றுக் கொள்ளுவதும் அரசியல் என்ற நிலைக்கு உள்நாட்டு அரசியல் மாறிப் போயிருக்கிறது. தமது வாக்கு வங்கியை வைத்துப் பேரம் பேசும் வல்லமையுள்ள கட்சித் தலைமைகள் இந்தக் கூட்டணி ஊடாக சாதித்துக் கொண்டுள்ளன. மறைந்த தலைவர் அஷ்ரப் இதற்கு சிறந்த் உதாரணம். குறிப்பாக சந்திரிகாவுடைய ஆட்சியில் இந்த ஆயுதத்தை தலைவர் அஷ்ரபினால் சிறப்பாகப் பயன்படுத்திக் கொள்ள முடியுமாகவிருந்தது.

மஹிந்த ராஜபக்ஷ போட்டியிட்ட 2005, 2010 ஆம் ஆண்டுகளில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸுடன் கொண்டிருந்த பகையின் காரணமாக தேசிய காங்கிரஸும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸும் மஹிந்த ராஜபக்ஷவுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்கி முஸ்லிம் சமூகத்தினதும் வாக்குகளைப் பெற்றுக் கொடுத்து தேர்தலில் வெற்றி பெறச் செய்தன. மஹிந்த ராஜபக்ஷவின் காலப்பிரிவில் இருந்து தான் முஸ்லிம்களின் சோதனைக் காலம் கூர்மையடைந்தது. அந்த வேளைகளில் எல்லாம் முஸ்லிம்களைப் பாதுகாப்பதற்கான எந்த நிபந்தனையும் இல்லாத நிலையில் முஸ்லிம் சமூகம் அரசியல் அநாதையாகியது.

2010 தேர்தல் சிங்கள மேலாதிக்க உணர்வு கூடியிருந்த வேளையில் நடத்தப்பட்டதனால் அங்கு நிபந்தனைகளுக்கோ பேரம் பேசுதலுக்கோ இடமிருக்கவில்லை என்பது நியாயமாக இருக்கலாம். ஆனால் தொடர்ந்து வந்த 2015 தேர்தலிலும் முஸ்லிம் கட்சிகள் நிபந்தனையில்லாத ஆதரவையே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வழங்கியது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு முஸ்லிம்கள் வாக்களிக்க விடாமல் செய்த முக்கிய விடயமாக முஸ்லிம்கள் மீதிருந்த பாதுகாப்பு அச்சுறுத்தல் காணப்பட்டது. அதற்குக் காரணமாக இருந்த மேலாதிக்க தீவிரவாதிகளிடமிருந்து முஸ்லிம் சமூகத்தைப் பாதுகாப்பதற்கானதொரு உறுதிமொழியை முஸ்லிம் அரசியற் கட்சிகள் எடுத்திருக்க முடியும். இருந்த போதிலும் நல்லாட்சியில் இதுபோன்ற விடயங்கள் நடைபெறாது என முஸ்லிம் கட்சிகள் தீர்மானித்திருக்கலாம். அல்லது முஸ்லிம் சமூகம் ஏலவே முடிவெடுத்து விட்டதால் நாங்களும் அவ்வழி நடந்தோம் எனக் காரணம் கூறலாம். அல்லது ஆட்சி மாற்றத்துக்குக்கான காரண கர்த்தாக்களுள் ஒருவராக இருந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா, இந்த இனவாதிகளை நாய்க் கூண்டில் அடைப்பதாகவும், கோல்பேஸுக்குக் கொண்டு வந்து தோலுரிப்பதாகவும் சொன்னதை நம்பியிருக்கலாம். நம்பி ஏமாந்திருந்தாலும், சூழ்நிலைக் கைதிகளாக மாறினாலும் முஸ்லிம் சமூகம் பாதிக்கப்பட்ட போது அரசியலை வைத்து முஸ்லிம் சமூகத்தால் எதுவும் செய்ய முடியாமல் போனமை பெரும் துரதிர்ஷ்டமே.

தற்பொழுது மீண்டுமொரு வாய்ப்பு கையருகே வ்ந்திருக்கிறது. முஸ்லிம் அரசியலின் அண்மைக் காலப் போக்குகளில் நிகழ்ந்த சாதகமான மாற்றங்களை வைத்து நோக்கினால் இதனை ஒரு பொன்னான வாய்ப்பாகக் கருத முடியும். இந்த ஜனாதிபதித் தேர்தலில் 2015 தேர்தலைப் போலன்றி வாக்குகள் சிதறிச் செல்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகவே இருக்கின்றன. அதனால் எல்லாக் கட்சிகளுக்கும் சிறுபான்மையினரின் வாக்குகளைப் பெற்றாக வேண்டிய கட்டாயம் இருக்கிறது. முஸ்லிம் சமூகம் இந்த முறை தேர்தலில் பல கட்சிகளுக்கும் வாக்களிப்பதற்கான வியூகத்தை அமைத்திருக்கிறார்கள்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவில் கோத்தாபய நியமிக்கப்பட்டிருப்பதால் மொட்டை நோக்கி பெருவாரியான முஸ்லிம் சமூகம் சார்பு நிலை எடுப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவாகவே இருக்கின்றன. இதனால் நமது அரசியல் தலைமைகள் இந்தப் பக்கமாக சாய்வதில் பெரிய நன்மைகள் விளையப் போவதில்லை. புதிதாக வாய்த்திருக்கும் ஜனாதிபதி அபேட்சகர் அநுர குமார திசாநாயக்கவுக்கு முஸ்லிம் இளைஞர்கள் மத்தியில் செல்வாக்கு இருக்கிறது. என்றாலும் இவர் ஜனாதிபதி ஆவாரா என்பது ஆழமாக சிந்தித்துப் பதில் சொல்லப்பட வேண்டிய கட்டத்தில் இருக்கிறது. எனவே அரசியல் தலைமைகள் என்ற வகையில் அதுவும் சிறுபான்மை அரசியல் என்ற வகையில் வெல்லுகின்ற குதிரைக்குப் பந்தயம் கட்டும் போக்குத் தான் காணப்படுகிறது. இந்த வகையில் அரசியல்ரீதியாக முஸ்லிம் சமூகத்தின் அரசியல் தலைமைகள் எடுத்த முடிவுகளில் பிழை காண்பதற்கில்லை.

ஆனாலும் இந்த முடிவினை வைத்துக் கொண்டு முஸ்லிம் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு என்ன செய்ய முடியும் என்று சிந்திப்பது முக்கியமானது. இம்முறைய தேர்தல் நிபந்தனைகளாலும் வாக்குறுதிகளாலும் நிரப்பப்பட்டிருக்கிறது. ஜனாதிபதி வேட்பாளராக வருபவர்களுக்கு கட்சிகளே நிபந்தனை விதிக்கின்ற சூழலே அரசியல் களத்தில் காணப்படுகிறது.

பிரதான வேட்பாளர்கள் இருவரும் அந்த விதமாக வந்தவர்களே. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கு ஆதரவு வழங்குவதற்கு மொட்டுச் சின்னத்தைத் தவிர்த்து பொதுச் சின்னத்தில் வர வேண்டும் என்றதொரு போலியான நிபந்தனையை விடுத்தது. கோதாபயவுக்கு தாம் ஆதரவளிப்பதற்கான மூன்று நிபந்தனைகள் பற்றி தேசிய காங்கிரஸின் தலைவர் அதாவுல்லா கூறியிருக்கிறார்.

யுத் தத்தை முடிவுக்குக் கொண்டு வருதல், வடக்கையும் கிழக்கையும் பிரித்தல், சகல இன மக்களும் அவரவர்க்குரிய உரிமைகளோடும் சுதந்திரத்தோடும் வாழக் கூடிய சூழலை உருவாக்கல் என்கின்ற 2005 ஆம் ஆண்டு தேர்தலின் போது தான் முன்வைத்த இந்த மூன்று கோரிக்கைகளில் முதலிரண்டும் நிறைவேற்றப்பட்டுள்ளன என அவர் தெரிவித்திருக்கிறார். 15 வருட காலமாக நிறைவேற்றப்படாத அவரது மூன்றாவது கோரிக்கையை நிபந்தனையாக வைத்து கோதாபயவுக்கு ஆதரவளிப்பதாக அவர் தெரிவித்திருக்கிறார்.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்தவரையில் மஹிந்த ஆதரவு சிவாஜிலிங்கம் தனியாக தேர்தலில் குதித்திருப்பதைத் தவிர்த்துப் பார்த்தால் தமிழர்கள் தங்களது பிரச்சினைகளைத் தீர்ப்பதை முன்வைத்து தேர்தலில் யாரை ஆதரிப்பது என்ற முடிவுக்கு வரவிருக்கிறது.

முஸ்லிம் அரசியலுக்கு வந்த எதிர்ப்புக்கள் முஸ்லிம் அரசியலை ஒன்றாக இணைந்து வேலை செய்யும் நிலைக்கு கொண்டு வந்து சேர்த்திருக்கிறது. இணைந்து வேலை செய்வதன் பலத்தை அவர்கள் நாட்டையே காக்கும் அளவுக்குப் பயன்படுத்திக் காட்டியிருக்கிறார்கள். மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக மைத்திரிபால சிறிசேனவுடன் சேர்ந்து கொள்வதற்கு எடுத்த முடிவு, யாப்பு சதிப் புரட்சியின் போது உம்ராவுக்குச் சென்று நீதியின் பக்கம் தலை சாய்ப்பதற்கு எடுத்த முடிவு, நாட்டில் ரணகளம் ஒன்றை உருவாக்குவதற்கு பௌத்த மேலாதிக்கச் சக்திகள் முயன்றபோது தமது அமைச்சுப் பதவிகளைத் துறந்து நாட்டைப் பாதுகாத்த முடிவு அனைத்தும் நாட்டின் வரலாற்றில் எழுதப்பட வேண்டிய முக்கியமான விடயங்கள். இந்த நிலையில் முஸ்லிம் அரசியலின் தீர்க்கமான முடிவுகள் நாட்டில் தாக்கம் செலுத்தும் நிலைக்கு மீளவும் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. முஸ்லிம் அரசியல் தலைமைகளின் விட்டுக் கொடுப்பும் அரப்பணிப்பும் சாணக்கியமும் இதற்குத் துணை போயிருக்கின்றன.

இந்த நிலையில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக நாட்டில் அனைத்து மக்களும் சமாதானமாக வாழ்வதை உறுதி செய்யும் நிபந்தனையொன்றை விதிக்கின்ற யோக்கியதை முஸ்லிம் அரசியலுக்கு இருக்கிறது. அது சமூகம் சார்ந்ததாக மட்டுமன்றி அனைத்து மக்களினதும் நன்மைக்காக, நாட்டின் முன்னேற்றத்துக்காக அமையுமிடத்து அது கூடுதல் பெறுமானத்தைப் பெற்றுத் தரவல்லது. எனவே தேர்தல் விஞ்ஞாபனங்கள் வரையப்படுவதற்கு முன்னர் இந்த விடயத்தில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள கொந்தளிப்பான நிலையை அரசியல்வாதிகளினால் மட்டும் தீர்க்க முடியாது. வெறுமனே அரசியல்வாதிகளிடம் பொறுப்பைச் சுமத்தி விட்டு வாளாவிருப்பதை விட, சமூகங்களுக்கிடையில் நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான சிவில் சமூக செயற்பாடுகளிலும் முஸ்லிம் சமூகம் இறங்க வேண்டும். இது அரசியல்வாதிகளின் பலத்தை மேலும் கூட்டுவதாக அமையும்.

தவறு என்பது மீட்டப்படுமானால் அதன் பெயர் தவறு அல்ல. அது தீர்மானம் - போலோ காலோ

---

# பௌத்தமும் அரசியலும்

## இலங்கையில் உடைந்த கண்ணாடிகள்

• மாஸ் எல். யூசுப்

இந்த நாட்டின் உயிரை அரசியல் வாதிகள் உறிஞ்சிக் குடித்து விட்டார்கள் என்றே பெரும்பாலான பொதுமக்கள் கருதுகிறார்கள். இவர்களில் சிலர் தமது சுயநல இலக்கை அடைந்து கொள்வதற்காக கண்ணியமான புத்த சாசனத்தையே கூட்டிக் கொண்டு களமிறங்கியிருப்பது உண்மையிலேயே மன்னிக்க முடியாதது.

தவறான புரிதல்களாலும், தவறான தகவல்களாலும், புனையப்பட்ட தரவுகளாலும், எதனையும் பற்றிய மோசமான விபரிப்புகளாலும் இந்நாட்களில் நாடு தள்ளாடிக் கொண்டிருக்கிறது. தங்களது கருத்துக்களை வெளியிடுவதில் உண்மையாக நடந்து கொள்ளும் அரசியல்வாதிகளை அரிதாகவே காண முடிகின்றது. பொய்யைக் கக்குவதிலும், பசப்பான வார்த்தைகளை உதிர்ப்பதிலும் அசாதாரண விடயங்களை சகஜமாக்கி விடும் ஏமாற்று வித்தைகளைக் காட்டுவதிலும் உலகின் பெரிய மதங்களில் ஒன்றைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடு களைகட்டிக் கொண்டிருக்கிறது.




எப்படி இருந்த போதிலும் தமது பௌத்த பிக்குகளின் கோபத்துக்குள்ளாகாமல் தமது வாக்கு வங்கியையும் பாதுகாத்துக் கொள்வதில் பலரும் கவனமாகத் தான் இருக்கிறார்கள். தம்மை வெள்ளாடை அணிந்த தூயவர்களாகக் காட்டுவதன் முக்கியத்துவத்தை சிங்கள அரசியல்வாதிகள் உணர்ந்திருக்கிறார்கள். இதனால் பிக்குமாரிடத்தில் மிகுந்த பணிவுடன் நடப்பதாகக் காட்டிக் கொள்வதற்கு அவர்கள் முயற்சிப்பது ஆச்சரியமான ஒன்றல்ல. மதிப்புக்குரிய சில பிக்குமார் இதனால் சங்கடப்பட்டிருக்கவும் கூடும்.

### ஊடகமும் ஏலமும்

ஏலமென்று வந்தால் அங்கே அதிக விலை கூவுபவர்கள் வெற்றியடைவார்கள் என்பது எல்லோருக்கும் தெரியும். பிக்குமாரும் கூட இப்படி அரசியல்வாதிகளால் ஏலத்தில் விடப்படுகிறார்களோ என்றும் சிலவேளை எண்ணத் தோன்றுகின்றது. ஓர் அரசியல்வாதிக்கு அடுத்தவரை ஓரங்கட்ட வேண்டிய தேவை ஏற்பட்டால் அவர் சங்க சபாவுக்கு அதிகம் அர்ப்பணிப்பவராகத் தன்னைக் காட்டிக் கொள்ளத் துணிகிறார். பிக்குகளை பூஜிப்பதில் போட்டி போடுவதாக நினைத்துக் கொண்டு இவர்கள் தங்களைத் தாங்களே அழித்துக் கொள்கிறார்கள். வெளிப்படையில் இவர்கள் இரட்டை வேடமே பூணுகிறார்கள். முதலில் பிக்குகளின் ஆதரவைத் திரட்டுகின்றார்கள். அடுத்ததாக சங்க சபாவுக்கும் புத்த சாசனத்துக்கும் அர்ப்பணமாக இருப்பதாக பொதுமக்களுக்கு காண்பிக்கிறார்கள்.

இவை உண்மையிலேயே தூய்மையான எண்ணத்துடனும் உண்மையாகவும் செய்யப்படுமாக இருந்தால் அவை மகத்தான செயல்களாக இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. இருந்த போதிலும் ஜேவிபி தலைவர் அனுர குமார திசாநாயக்கவுக்கு இதில் மாற்றுக் கருத்து இருக்கிறது. தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் அவர் கேட்ட கேள்வியொன்றில், அரசியல்வாதிகள் பிக்குமாரைத் தரிசிக்கச் செல்லும் போதெல்லாம் ஏன் ஊடகங்களை தங்களுடன் எடுத்துச் செல்கின்றார்கள்? பிக்குமாருக்கு வணக்கம் செலுத்தும் போது அது கட்டாயமாக (தொலைக்காட்சியூடாக) மக்களுக்குக் காண்பிக்கப்பட வேண்டும் என புத்த பெருமான் போதித்திருக்கிறாரா? எனக் கேட்ட அவர், இவர்கள் தொலைக்காட்சி பௌத்தர்கள். இவர்கள் மக்களின் மத உணர்வுகளை ஏமாற்றிப் பிழைக்கிறார்கள் என்று கூறினார். நெறிமுறைக்கு மாற்றமான இந்த நடவடிக்கைகளினால் பிக்குகளின் அந்தஸ்து இழிவடைகிறது. இது பயங்கரமானதொரு விளைவைத் தரக் கூடிய வளர்ச்சியாகும்.

இதனை நாங்கள் சில பிக்குமாரின் நடத்தைகளிலும் கண்டுகொள்ள முடியும். இறுதியில் இந்த அப்பாவிப் பிக்குகள் தமது சுயாதீனத்தை இழந்து சூழ்நிலைகளின் கைதிகளாகி மறக்கடிக்கப்பட்டு மறைந்து போகிறார்கள். உயர்மட்ட பௌத்த பிக்குகளின் பௌத்தத்துக்குப் பொருத்தமில்லாத உரைகள் சிங்கள சமூகத்தின் சமூக உணர்வுள்ளவர்களை சங்கடப்படுத்தும் அளவுக்கு அமைந்திருந்தன. இந்த நாடகத்தினால் தவறாக வழிநடத்தப்பட்ட இளம் பிக்குகள் பௌத்த மதத்தின் மதிப்பை உள்நாட்டில் மட்டுமன்றி சர்வதேசத்திலும் இழக்கச் செய்யும் வகையில் செயற்படுகிறார்கள்.

### பௌத்தம், தர்மம், சங்கம்

மோட்சம் பெறுவதை இலக்காகக் கொண்ட முதிர்ச்சியடைந்த உண்மையான பிக்குகளைப் பொறுத்தவரையில் இந்தக் குறுகிய அலங்காரங்கள் எதுவுமே அவர்களுடைய இலக்கிலிருந்து அவர்களைத் திசை திருப்புபவை அல்ல. அவர்கள் பெற்றுள்ள ஞானத்தின் அடிப்படையில் அவர்கள் அரசியல்வாதிகளின் [illegible] வைத்திருக்கிறார்கள்.

அதேவேளை, பிரபல்யம் இல்லாத, சிறு வயதிலேயே துறவியான, பக்தர்களைத் தவிர பொதுவெளியில் பெரிதும் அறியப்படாத பிக்குகளைப் பொறுத்தவரையில் அவர்களுக்கு அரசியல்வாதிகளின் நெருக்கமோ, தொலைக்காட்சியின் பிரபலமோ நிச்சயம் அவர்கள் ஏன் காவி உடை அணிந்தார்கள் என்பதை மறக்கடிக்கவே செய்யும். இவ்வாறானவர்கள் மும்மணிகளிடம் அடைக்கலம் தேடுவதை விட்டு விட்டு இன மதத் தேசியவாதங்களிலும் வெறுப்புப் பேச்சுக்களைப் பரப்பி 'அடுத்தவர்களை' பாதிப்படையச் செய்வதிலுமே அடைக்கலம் தேடுவார்கள். இது நிச்சயமாக பௌத்த மத போதனைகளுக்கு முரணானதாகும். எல்லாவற்றுக்கும் பின்னர் தங்களை புத்த புத்திரர்களாக அழைத்துக் கொண்டு பௌத்தத்துக்குள்ளால் புகலிடமும் தேடுவார்கள்.

### சங்காவின் உளவியல்

எஸ்.டப்.ஆர்.டி. பண்டாரநாயக்கவின் பஞ்ச மகா பலவேகயவிலிருந்து சங்க சபாவின் உளவியலை கட்டமைப்பதில் சடுதியான அதிகரிப்பு அவதானிக்கப்பட்டது. தொடர்ந்து வந்த அரசாங்கங்களும் அரசியல்வாதிகளும் தங்களது நலனை முற்படுத்தி இதனை வளர்த்தெடுப்பதில் ஆர்வம் காட்டினார்கள். தூய்மையான பௌத்தத்தை பின்பற்றுபவர்களுக்கு இதற்கு முன்னால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. இவர்களும் அரசியல், பொருளாதாரம், வெளிநாட்டுக் கொள்கை, பூகோள அரசியல் போன்ற விடயங்களில் கருத்து வெளியிடத் தொடங்கினார்கள்.

பௌத்த தீவிரவாதமும் இலங்கையில் இன-மத நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் உள்ள சவால்களும் என்ற தலைப்பில் பேராசிரியர் நிர்மால் ரஞ்சித் தேவசிரி செய்த ஆய்வில் ( அரசியல்வாதிகளுக்கும் பிக்குகளுக்கும் இடையிலான ஊடலின் கவலைக்குரிய நிலையை எடுத்துக் காட்டுகிறார்.

"பொது இடங்களில் அவர்கள் செய்த வன்முறைச் செயற்பாடுகளில் அவர்கள் காட்டிய விசுவாசம் அவதானிக்கத்தக்கதாகும். எந்த எதிர் நடவடிக்கையும் எடுக்காத பொலிசாரின் முன்னிலையிலேயே அவர்கள் சட்டத்தை மொத்தமாகவே மீறினார்கள். முன்னைய அரசாங்கத்திடமிருந்து அவர்கள் பெற்ற அரசியல் பாதுகாப்பைத் தாண்டி, காவியுடைக்கு இருந்த மதிப்பையும் அதை அணிந்திருந்தவர்களுக்கு இருந்த அதிகாரத்தையும் அவர்கள் சிதைத்து விட்டார்கள். இதற்குச் சிறந்த உதாரணமாக, அதிவேக நெடுஞ்சாலையில் வாகனத்தை நுழைவிக்கும் போது பொலிசாருக்கும் ஞானசார தேரருக்கும் இடையில் நடந்த வாக்குவாதத்தை எடுத்துக் காட்டலாம்.

எல்லாவற்றையும் செய்து விட்டு சங்க சபாவின் மதக் கிரியைகளில் கலந்து கொள்வதையும் சகிப்புத்தன்மையைப் போதிப்பதையும் இந்த முரட்டுத்தனமான பிக்குகள் முரண்நகையாகக் கருதுவதுமில்லை என தேவசிரி மேலும் குறிப்பிடுகிறார்.

(பக்.15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.,
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

# தேர்தல் எதற்காக?

ஜனாதிபதித் தேர்தலுக்கு இம்முறை வரலாறு காணாத அளவு வேட்பாளர்கள் முன்வந்திருக்கிறார்கள். கடன் நெருக்கடியால் நாடு மூழ்கி இருக்கின்ற வேளையில், பூகோள அரசியலினால் நாடு பந்தாடப்பட்டு வரும் வேளையில், போதைப் பொருட்களின் கூடாரமாக நாடு மாறி வருகின்ற வேளையில் தான் நாட்டின் தலைமைப் பதவியைப் பெறுவதற்கு இவ்வளவு பேர் போட்டியிடுகின்றார்கள்.

இவர்கள் அனைவருமே மக்களுக்காகத் தான் தாம் போட்டியிடுகின்றோம் என்று கூறியிருக்கிறார்கள். மக்கள் இப்பொழுது வேண்டுவது அச்சமின்றி நிம்மதியாக வாழக் கூடிய சூழல். முப்பது வருடங்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்ந்த ஒரு த்லைமுறை இனியும் அந்த நிலை வரக் கூடாது என்பதனையே 2009 க்குப் பின்னரான தேர்தல்களில் வேண்டிக் கொண்டு வருகிறது.

உயிர் வாழும் உரிமை, பாதுகாப்பாக வாழும் உரிமை, சமமாக மதிக்கப்படும் உரிமை என்பன மனிதனின் அடிப்படை உரிமைகளாக உலகம் ஏற்றுக் கொண்டுள்ளது. இவற்றைப் பேணி நடப்பது தான் அரசாங்கங்களின் கடப்பாடாக இருக்க வேண்டும் என பிரகடனப்படுத்தியுள்ளது. இவற்றை மீறி நடக்கும் போது அது மனித உரிமை மீறலாக கணிக்கப்படுகிறது.

அந்த வகையில் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாக்க வேண்டியது அரசாங்கங்களினதும் அரசியல் தலைவர்களினதும் பொறுப்பாக அமைகிறது. தமது அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற ஆர்வத்தின் வெளிப்பாடாகத் தான் மக்கள் முன்வந்து தேர்தலில் வாக்களிப்பது அமைகிறது.

ஆனால் அந்தத் தேர்தல் நடைமுறையே மனித உரிமைகளை மீறுவதாக அமையுமென்றிருந்தால் அந்தத் தேர்தல் எதற்காக ? தேர்தல் கால வன்முறைகள் அண்மைக் காலங்களில் அதிகரித்திருப்பதாகவும், அவற்றைக் கட்டுப்படுத்த முடியாதிருப்பதாகவும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மஹிந்த தேசப்பிரிய குறிப்பிட்டிருந்தார். இது தேர்தல்கள் ஏன் என்ற கேள்வியை இன்னும் பலமாக்குகிறது.

தேர்தல் காலங்களில் மக்கள் தமது உயிரைப் பற்றிப் பயப்படுவதாக இருந்தால், தாம் பாதுகாப்பற்ற சூழலில் வாழ்வதாக உணர்வதாக இருந்தால், நாட்டின் ஏனைய சமூகங்களைப் போல தானும் சமனாக நடத்தப்படுவதில்லை என்று கருதுவதாக இருந்தால் தேர்தலினூடாக மக்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் தேர்தலுக்கு முன்னரேயே பறிக்கப்படுவதாகவே கருத வேண்டியிருக்கிறது.

கிரிந்தவில் நடைபெற்ற சம்பவத்துக்குப் பின்னர் மக்கள் தமது அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு பயப்படுகிறார்கள். பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு நடந்த சம்பவமும் மக்களை தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதிலிருந்து பின்வாங்கச் செய்யும் நடவடிக்கையாக அமைந்திருக்கிறது. வேட்பாளர் ஒருவரது சட்டபூர்வ தன்மை பற்றி நீதிமன்றத்தில் விசாணைக்குட்படுத்திய சமூக செயற்பாட்டாளர் மீது கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் மக்களை தேர்தலில் வாக்களிக்க விடாமல் செய்து பெரும்பான்மை வாக்குகளைப் பெறுவதற்கு சிலர் எத்தனிக்கின்றார்கள் என்பது புரிகின்றது. இவ்வாறான முயற்சிகளை மக்கள் தான் முன்னின்று தோற்கடிக்க வேண்டும். தமது அடிப்படை உரிமைகளைப் பெற்று வாழ்வதற்கான சூழலை அவர்கள் தான் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அரசியல்வாதிகளின் குறுகிய நோக்கங்களுக்கு பலியாகாதவாறு மக்கள் தங்களைக் காத்துக் கொள்ள வேண்டும். மனிதர்களின் உரிமைகளைப் பறிக்கின்ற அளவுக்கு தேர்தல்கள் மாறாமல் இருக்க வேண்டுமாக இருந்தால் மக்கள் தங்களது வாக்குரிமையை அதற்காகப் பயன்படுத்துவது அத்தியாவசியமானது.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

[illegible]

மேலதிக விபரங்களுக்கு

ශ්‍රී ලංකා පුවත්පත් පැමිණිලි කොමිසම
இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல. : 96, கிருல வீதி, கொழும்பு - 05
தொலைபேசி : 011 5353635
தொலைநகல் : 011 5335500
மின்னஞ்சல் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pcc.lk

# நிறைவேற்றதிகார ஜனாதிபதிமுறை ஒழிப்பை மையப்படுத்திய அரசியல் சவால்கள்

• ஹெட்டி ரம்ஸி

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்கப் போவதாக கூறிக்கொண்டு ஆட்சியதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பதவிக் காலம் முடிவடையப்போகிறது. அடுத்த ஜனாதிபதி தேர்தலுக்கான திகதியை தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துவிட்டது. ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு வாக்குறுதியை அளித்துக் கொண்டு பதவிக்கு வந்த சகல ஜனாதிபதிகளையும் போன்று அவரும் வாக்குறுதியை நிறைவேற்றாமலேயே பதவியில் இருந்து இறங்கப் போகிறார்.

அவரின் சுமார் ஐந்து வருட பதவிக் காலத்தின் தொடக்கத்துக்கும் முடிவுக்கும் இடையில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்து தென்னிலங்கை பிரதான அரசியல் சமுதாயத்தின் மத்தியில் ஏற்பட்டிருக்கும் சிந்தனை மாற்றம் குறித்து ஆராய வேண்டிய அவசியத்தை தற்போதைய அரசியல் நிலவரத்துக்கு மத்தியில் மாறிவிட்ட அரசியல் நிகழ்வுப் போக்குகள் ஏற்படுத்தியிருக்கின்றன.

அரசியலமைப்புக்கான 19 ஆவது திருத்தத்தின் மூலமாக ஜனாதிபதியின் மட்டுமீறிய அதிகாரங்கள் ஓரளவுக்கு குறைக்கப்பட்டபோது புதிய அரசியலமைப்பின் மூலமாக ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படும் வரையிலான ஒரு இடைக்கால ஏற்பாடாகவே அவ்வாறு செய்யப்படுவதாகக் கூறப்பட்டது. ஆனால், இரண்டரை வருடங்களுக்கும் கூடுதலான காலமாக அரசியலமைப்பு வரைவுச் செயன்முறைகள் முன்னெடுக்கப்பட்ட போதிலும், நாளடைவில் ஏற்பட்ட அரசியல் கோல மாற்றங்கள் எல்லாவற்றையும் குளறுபடியாக்கிவிட்டன.



இறுதியாக கடந்த ஜனவரியில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அரசியலமைப்புச் சபையின் வழிநடத்தல் குழுவின் நிபுணத்துவக் குழுவினால் தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதற்கு பிறகு அதைப் பற்றிய பேச்சே இல்லை. மாறிவிட்ட அரசியல் சூழ்நிலைக்கு மத்தியில் தங்களால் அரசியலமைப்பு வரைவுச் செயன்முறையை மேற்கொண்டு முன்னெடுக்க முடியாது என்பது அறிக்கையை சமர்ப்பித்த வேளையில் பிரதமருக்கு நன்றாகத் தெரியும்.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை அறிமுகப்படுத்தப்பட்ட தினத்திலிருந்து அதற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்டிருந்த ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி ஜனாதிபதி சிறிசேனவின் தலைமையின் கீழ் ஜனாதிபதி ஆட்சிமுறையை உறுதியாக ஆதரிக்கின்ற கட்சியாக மாறியதைக் காணக்கூடியதாக இருந்தது. அது மாத்திரமல்ல, 19 ஆவது திருத்தத்தின் மூலமாக ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டதை தனது மகத்தான 'சாதனை' என்றும் உலகில் வேறு எந்த அரச தலைவரும் தன்னைப் போன்று அதிகாரங்களைக் குறைப்பதற்கு இணங்கியதில்லை என்றும் பெருமை பாராட்டிய ஜனாதிபதி சிறிசேன, நாளடைவில் அந்த திருத்தத்தைக் கடுமையாக எதிர்க்கின்ற ஒரு அரசியல் தலைவராக மாறினார். பிரதமர் விக்கிரமசிங்கவும் ஐக்கிய தேசிய கட்சியினருமே 19 ஆவது திருத்தத்தை தொடர்ந்தும் உறுதியாக ஆதரிக்கும் நிலைப்பாட்டை இன்னமும் கொண்டிருக்கின்றார்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் முகாமைப் பொறுத்தவரை, ஜனாதிபதி ஆட்சிமுறையை மேலும் வலுப்படுத்துவதிலேயே நாட்டம் கொண்டவர்களாக இருந்து வருகிறார்கள். அதை அவர்கள் தங்களது ஆட்சிக் காலத்தில் நடைமுறையிலும் நிரூபித்துக் காட்டினார்கள். இன்றைய ஆட்சிமுறையின் குழப்பத்துக்கெல்லாம் 19 ஆவது திருத்தமே பிரதான [illegible]

இத்தகையதொரு பின்புலத்தில், தேர்தலில் களமிறங்கும் முக்கிய கட்சிகளின் வேட்பாளர்கள் 19 ஆவது திருத்தம் தொடர்பில் தங்களது நிலைப்பாட்டை உறுதியாக வெளிப்படுத்த வேண்டிய அவசியமும் எழுகிறது. அடுத்த ஜனாதிபதியாக வருபவர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதிலோ அல்லது அதில் சீர்திருத்தங்களைச் செய்வதிலோ அக்கறை காட்டும் சாத்தியமில்லை என்று நினைக்கக்கூடிய அளவுக்கு அண்மைக் காலமாக அந்த ஆட்சிமுறையைத் தொடர வேண்டும் என்று வலியுறுத்தும் கருத்துக்கள் தென்னிலங்கை அரசியல் சமுதாயத்தில் வலுப்பெற்று வந்திருக்கின்றன. உறுதியான, பலம் பொருந்திய ஆட்சியாளர் ஒருவரைப் பற்றிய பிரமையைச் சுற்றியவையாக அந்த கருத்துக்கள் அமைந்திருக்கின்றன

இதனிடையே கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் திடீரென்று ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு குறித்து பிரதமர் விக்கிரமசிங்கவுக்கு அக்கறை பிறந்தது. ஜனாதிபதி சிறிசேனவும் கூட அதில் ஆர்வம் காட்டியதாகக் கூறப்பட்ட நிலையில் அந்த நோக்கத்துக்காக அரசியலமைப்புக்கான 20 ஆவது திருத்தத்தைக் கொண்டுவரும் சாத்தியம் குறித்து ஆராய விஷேட அமைச்சரவைக் கூட்டமும் நடத்தப்பட்டது. ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வருவதற்காக கட்சியின் தலைமைத்துவத்தையும் மீறிக்கொண்டு ஆதரவைத் திரட்டுவதில் இறங்கிய பிரதித் தலைவரும் வீடமைப்பு அமைச்சருமான சஜித் பிரேமதாசவும் அவரை சூழ்ந்து நிற்கும் பெருவாரியான அமைச்சர்களும் ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியிடப்பட்ட நிலையில், ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு பொருத்தமற்றதும் நடைமுறைச் சாத்தியமற்றதுமாகும் என்று கடுமையாக எதிர்த்து நிற்கிறார்கள். பிரேமதாச ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் போது ஜனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பு குறித்து வாக்குறுதியை அளிக்கப் போவதில்லை என்று அவரைச் சார்ந்தவர்கள் வெளிப்படையாக கருத்துச் சொல்லியிருந்தனர்.

இதுவரை காலமும் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு தொடர்பில் கட்சியின் நிலைப்பாட்டை அமைதியாக ஆதரித்து வந்த சஜித் பிரேமதாச இப்போது 'ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்பட வேண்டுமா அல்லது தொடர வேண்டுமா என்பது குறித்து அறிவியல் ரீதியான ஆய்வு எதுவும் செய்யப்படவில்லை' என்று கூறுகின்ற அளவுக்கு ஜனாதிபதி ஆட்சி முறை பற்றிய அவரது நிலைப்பாடு மாறியிருக்கிறது.

தற்போதைய கட்டத்தில் பிரதமருக்கு ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பில் அக்கறை பிறந்ததற்குக் காரணம், தான் ஜனாதிபதி வேட்பாளராகும் சாத்தியத்தை தடுப்பதேயாகும் என்று பிரேமதாச நம்பியிருந்தார் போலும். நீண்டகால அரசியல் அனுபவம் கொண்டவரான பிரதமர் விக்கிரமசிங்க 'சிறுபிள்ளைத் தனமான' தனது அணுகுமுறையினால் இன்று தனது கட்சியின் பெரும்பான்மையான அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஆதரிப்பவர்களாக மாறும் நிலையை ஏற்படுத்திவிட்டார். அவர் அமைச்சரவையைக் கூட்டுமாறு ஜனாதிபதி சிறிசேனதான் கேட்டார் என்று கூறியிருந்தார். அதே போன்று ஜனாதிபதி தரப்பினர் பிரதமர் தான் அந்தக் கூட்டத்தை கூட்டுமாறும் கேட்டார் என்று குற்றஞ்சாட்டியிருந்தனர்.

ஐக்கிய தேசிய கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வரக்கூடிய தலைவர்களின் வரிசையில் பாராளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரியவின் பெயர் நீண்டநாட்களாக அடிபட்டாலும் கூட அவர் தானாகவே அறிக்கையொன்றை வெளியிட்டு ஜனாதிபதி தேர்தலில் தான் எத்தகைய நிபந்தனைகளின் கீழ் களமிறங்கத் தயாராயிருக்கிறார் என்பதைக் கூறியதன் பின்னணியும்கூட சஜித் பிரேமதாசவின் வாய்ப்புக்களைத் [illegible]கான கட்சி தலைமைத்துவத்தின் வியூகத்தின் அடிப்படையிலானதே என்று நம்பப்பட்டது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிப்பதற்காக குரல்கொடுக்கின்ற அனைத்து அரசியல் சக்திகளும் சிவில் சமூக அமைப்புக்களும் ஒன்றிணைந்து தன்னிடம் அந்த பொறுப்பை ஒப்படைத்தால் அதை முழு மனதுடன் ஏற்றுக்கொண்டு ஐக்கிய தேசிய கட்சியின் இணக்கத்துடனான வேட்பாளராக ஜனாதிபதி தேர்தலில் களமிறங்கத் தயாராக இருப்பதாக சபாநாயகர் கூறியிருந்தார்.

ஒட்டுமொத்தமாக நோக்குகையில், இன்று தென்னிலங்கையில் சிவில் சமூக அமைப்புக்களையும் ஜனதா விமுக்தி பெரமுன ( ஜே.வி.பி.) மற்றும் சில இடதுசாரி கட்சிகள், குழுக்களையும் தவிர பிரதான அரசியல் கட்சிகளில் பெரும் பகுதியினர் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை ஆதரிக்கின்றனர் என்றுதான் கூறவேண்டும். கால் நூற்றாண்டு காலத்திற்குள் நடைபெற்ற அனைத்து ஜனாதிபதி தேர்தல்களிலும் பிரதான கட்சிகளின் முக்கியமான வாக்குறுதியாக இருந்து வந்த ஜனாதிபதி ஆட்சிமுறை இத்தடவை தேர்தலில் எந்தளவுக்கு முக்கியத்துவம் பெறக் கூடியதாக இருக்கும் என்ற கேள்வி எழுகிறது.

நான்கு தசாப்தங்களுக்கும் அதிகமான காலமாக நடைமுறையில் இருந்துவரும் ஜனாதிபதி ஆட்சிமுறையை ஒழிக்க முடியாமல் இருப்பதற்கான காரணம் என்ன? அந்த ஆட்சிமுறையை ஒழிப்பதாக வாக்குறுதி அளித்து பதவிக்கு வந்த அரசியல் தலைவர்கள் அதை நிறைவேற்றவில்லை என்பதற்காக அவர்களை மக்கள் வெறுத்தொதுக்கினார்கள் என்று கூறவும் முடியாது. ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு இனிமேலும் வெகுஜன ஆதரவைப் பெறக் கூடிய ஒரு கோரிக்கையாக இல்லை என்று சில அரசியல் அவதானிகள் அபிப்பிராயம் தெரிவிப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

சிவில் சமூக அமைப்புகளும் ஜனநாயக ஆதரவு முற்போக்கு சக்திகளும் மானசீகமாகவே ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக்கான இயக்கத்தை முன்னெடுத்து வந்திருக்கின்றன. ஆனால், அரசியல் கட்சிகளையும் அவற்றின் தலைவர்களையும் பொறுத்தவரை, வெறுமனே அரசியல் சந்தர்ப்பவாத நோக்கில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்பு விவகாரத்தை அணுகியதனாலேயே அதை ஒழிப்பதற்கு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க முடியாமல் இருக்கிறது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி மீதான கோட்பாட்டு அடிப்படையிலான வெறுப்பை விடவும் அதை வகித்தவர்கள் மீதான அரசியல் குரோத உணர்வே இதுவரையில் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிப்புக் கோரிக்கைக்கு பிரதான அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அளித்து வந்திருக்கக்கூடிய ஆதரவுக்கு பெரிதும் காரணமாக இருக்கிறது. அந்த பதவியை அடைய முடியாத அரசியல்வாதிகளுக்கு எட்டாத பழம் புளிக்கிறது. இத்தகைய சந்தர்ப்பவாத அரசியல் அணுகுமுறையே நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு நீடித்த ஆயுளைக் கொடுக்கின்றது.

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறையை அறிமுகப்படுத்திய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் 113 ஆவது பிறந்த தின வைபவத்தில் உரையாற்றிய சபாநாயகர் ஜெயசூரிய, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவிக்கு வருபவர்கள் அதன் அதிகாரங்களை அனுபவிக்கத் தொடங்கியதும் அப்பதவியை ஒழிப்பதற்கு விரும்பமாட்டார்கள் என்பதால் ஜனாதிபதி ஆட்சிமுறை ஒருபோதுமே ஒழிக்கப்படப் போவதில்லை என்ற அபிப்பிராயத்தை காலஞ்சென்ற ஜெயவர்தன கொண்டிருந்தார் என்ற போதிலும், அது என்றாவது ஒரு நாள் ஒழிக்கப்படும்போது அவர் சந்தோசப்படுவார்' என்று குறிப்பிட்டிருந்தார்.

உண்மையில் ஜெயவர்தன தன்னால் அறிமுகப்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகார ஜனாதிபதி ஆட்சிமுறை ஒழிக்கப்படுவது குறித்து அல்ல, அதை ஒழிக்க முடியாமல் இன்றைய அரசியல்வாதிகள் தடுமாறுவது குறித்தே நிச்சயம் சந்தோசப்படுவார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# ஜனாதிபதித் தேர்தல் வெல்லப் போவது யார்?

**60 வீதமான சனத்தொகையைக் கொண்ட வடக்குக் கிழக்கில் வாழும் முஸ்லிம் சிறுபான்மை மக்களின் வாக்குகள் இத்தேர்தலில் தீர்க்கமானவை. முஸ்லிம் காங்கிரஸ் சஜிதை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. ஆனால், வெல்லும் வேட்பாளரின் பக்கம் இறுதித் தருணத்திலேனும் சாயும் சம்பிரதாயம் கொண்டிருக்கும் ரிஷாதின் கட்சி எந்தப் பக்கம் சாயும் என்பதை இப்போதைக்கு ஊகிப்பது கடினமாகும்.**

• இப்னு கல்தூன்

ஒக்டோபர் 07 இல் வேட்புமனு தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தேர்தல் பிரச்சாரங்கள் களைகட்டி வருகின்றன. இம்முறை நடைபெறவுள்ள தேர்தல் சுதந்திரத்திற்குப் பிந்திய அரசியல் வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் பெறுவதற்குப் பல்வேறு காரணங்கள் உள்ளன.

ஜனாதிபதியாக வருபவர் குறித்து சிறுபான்மை மக்களிடையே பல்வேறு அபிப்பிராயங்களும் மாறுபட்ட கருத்துக்களும் நிலவுகின்றன. வேட்பாளர் யார் என்பது முக்கியமானதல்ல. அவர் எத்தகைய அரசியலை கையாளப் போகின்றார் என்பதே முக்கியம் என்று வாதிக்கும் சிலர் மஹிந்தவின் குடும்பப் பிரதிநிதியாகக் களமிறங்கியுள்ள கோத்தாவின் பக்கம் சாய்கின்றனர்.

இம்முறை தேர்தலில் கோத்தாவின் பக்கமும் ஒரு சாரார் இருக்க வேண்டும். தப்பித் தவறி அவர் ஜனாதிபதியானால் முஸ்லிம்கள் மீதான பகை முரண்பாடு ஓரளவு தணிக்கப்படும் என்று வாதிடுவோரும் உளர். இனவாதமே இம்முறை ஜனாதிபதி வேட்பாளரை வெற்றி பெறச் செய்யப் போகின்றது. எனவே, கோத்தாவின் வருகை தவிர்க்க முடியாதது என்று கட்டியம் கூறுவோரும் இருக்கவே செய்கின்றனர்.

சிறுபான்மை கட்சிகளில் பெரும்பான்மையானவர் ஐ.தே.க.வின் வேட்பாளர் சஜித்தை ஆதரிப்பதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ள நிலையில், ஐ.தே.க. தேசியப் பட்டியல் உறுப்பினரான அதுரலிய ரதன தேரர் கோத்தாவுக்கு ஆதரவு வழங்கப் போவதாக அறிவித்து அவரை சந்தித்துமுள்ளார்.

முஸ்லிம் அமைச்சர்கள் பதவி விலக வேண்டும் என்றும் கல்முனை தமிழர்களுக்கு தனிப் பிரதேச செயலகம் வழங்கப்பட வேண்டும் என்றும் உண்ணாவிரதத்தில் ஈடுபட்ட ரதன தேரர் முஸ்லிம்களுக்கு எதிரான பதட்ட நிலையை உருவாக்கியவர். தனது அரசியல் நலன்களுக்காக முஸ்லிம் விரோத மனப்பான்மையை திட்டமிட்டு வளர்த்து வருவதில் ரதன தேரருக்கும் ஞானசாரவுக்கும் இடையில் எவ்வித வேறுபாடுமில்லை.

பிரபலமான மதகுருக்கள், பாதுகாப்பு அதிகாரிகள், மற்றும் மைத்ரிபால தலைமையிலான சிறி லங்கா சுதந்திரக் கட்சியினர் கோத்தபாயவுக்கு ஆதரவளிக்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, விசாரணை செய்யப்படாமலேயே தள்ளுபடி செய்யப்பட்டமை கோத்தா தேர்தலில் வெற்றி பெறுவார் என்பதை உணர்த்துவதாக சில சிங்கள ஊடகங்கள் கருத்து வெளியிட்டுள்ளன.

முஸ்லிம்களின் கொட்டத்தை அடக்க வேண்டுமாயின் கோத்தா வர வேண்டும் என்று கருணா அம்மான் சூளுரைத்துள்ளார். காத்தான்குடி பள்ளிவாயலில் நூற்றுக்கணக்கான முஸ்லிம்களை தொழுகையில் ஈடுபட்டிருந்த வேளை சுட்டுக் கொல்லுமாறு உத்தரவிட்டவர் இவர். பிரபாகரனிலிருந்து பிரிக்கப்பட்டு தமிழர்களின் போராட்டத்தைக் காட்டிக் கொடுத்த கருணா, முஸ்லிம்களுக்கு எதிரான இனவாதத்தைத் தூண்டுவதன் மூலம் மட்டக்களப்பு தமிழர்களின் வாக்குகளை கோத்தாவுக்கு தாரைவார்க்கக் களமிறங்கியுள்ளார். இவர் போன்ற அரசியல் நக்குத் தின்னிகளும் அடிவருடிகளும் பெரும்பாலும் கோத்தாவின் பக்கமே சாய்வது இயல்பானது.

கோத்தா அற ரீதியிலும் சட்ட ரீதியிலும் தேர்தலில் வேட்பாளராக நிற்பதற்குத் தகுதியற்றவர் என்கிறார் ராவய பத்திரிகையின் முன்னாள் ஆசிரியரும் முன்னணி இடதுசாரியுமான சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன். அவர் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட கோத்தா தொடர்பான வழக்கு குறித்து பின்வருமாறு அறிக்கை வெளியிட்டுள்ளார்.

"ஜனாதிபதி வேட்பாளர் கோத்தாபய ராஜபக்ஷவுக்கு எதிராக தொடரப்பட்ட வழக்குகள் மற்றும் காமினி வியன்கொட, பேராசிரியர் தெனுவா ஆகியோரது அடையாள அட்டை மற்றம் கடவுச் சீட்டு ஆகியன சம்பந்தமான விசாரணைகளை நான் நன்றாக ஆராய்ந்தேன். அதன் அடிப்படையில் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட அவருக்கு உரிமையில்லை. ஏனைய வழக்குகளை ஒதுக்கி வைத்துவிட்டு அடையாள அட்டை மற்றும் கடவுச் சீட்டு தொடர்பான பிரச்சினையை மட்டும் எடுத்துக் கொண்டால் கோத்தா செய்துள்ள குற்றம் பாரதூரமானது. அவர் குடியுரிமை சட்டத்தை மீறியுள்ளார். குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தையும் மீறியுள்ளார்.

போலி ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாகியுள்ளது. அவர் 1976 டிசம்பர் 21 இல் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுள்ளார். அதன் இலக்கம் 491724021V கடவுச் சீட்டின் இலக்கம் N5384975. அவருக்கு 2003 ஜனவரி 31 இல் அமெரிக்கக் குடியுரிமை கிடைத்துள்ளது. குடியுரிமைச் சட்டத்தின்படி வெளிநாடு ஒன்றில் குடியுரிமை பெற்ற ஒருவரது இலங்கைக் குடியுரிமை தானாகவே ரத்தாகும். 2005 இல் ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற போது கோத்தா அமெரிக்கப் பிரஜையாக தற்காலிக விசா அனுமதியைப் பெற்றே இலங்கை வந்துள்ளார்.

2005 நவம்பர் 18 இல் மஹிந்த ஜனாதிபதியானார். நவம்பர் 21 இல் கோத்தாவுக்கு இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டது. துறைக்குப் பொறுப்பான அமைச்சர் ஒருவர் கூட நியமிக்கப்படாத நிலையில், துரித கதியில் இரட்டைக் குடியுரிமை வழங்கப்பட்டுள்ளது. இரட்டைக் குடியுரிமைக்கான விண்ணப்பப் பத்திரத்தில் தன்னை ஒரு கணினி பொறியியலாளர் என அவர் குறிப்பிட்டுள்ளார். இதனால், அவ்விண்ணப்பப் படிவத்தில் பொய்யான தகவலை உள்ளடக்கி இருப்பதனால் அதுவும் ஒரு போலி ஆவணமே.

2016 இல் அமெரிக்கக் குடியுரிமை இருக்கம்போதே புதிய அடையாள அட்டையைப் பெற்றுள்ளார். சட்டத்திற்கு முரணான புதிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொண்டிருக்கும் போது 2017, 2018, 2019 ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் செல்லுபடியற்ற அடையாள அட்டையைப் பயன்படுத்தி வாக்காளராகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது. இது வேண்டுமென்றே செய்த பாரதூரமான தவறாகும்.

அமெரிக்கக் குடியுரிமை இருக்கும் போதே தனது இலங்கை கடவுச் சீட்டையும் (N192600594) பெற்றுள்ளார். இவை அனைத்தும் பாரதூரமான குற்றமே. இதற்கமைய அவர் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என விக்டர் ஐவன் குறிப்பிட்டுள்ளார்.

எல்பிடியவில் நடந்த கூட்டத்தில் உரையாற்றிய கோத்தா, தான் ஜனாதிபதியானால் ஒரு வாரத்தினுள் நாட்டின் கடன் தொகையை முழுவதுமாக அடைத்து விடுவேன் என்று கூறியுள்ளார். தமது குடும்பத்திடம் எவ்வளவு சொத்துக்கள் இருக்கும் என்பதை கோத்தா இதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார்.

| ஆண்டு | ஜனாதிபதிகள் | பெற்ற வாக்குகள் வீதம் |
|---|---|---|
| 1982 | ஜே.ஆர். ஜெயவர்தன | 52.91% |
| 1988 | ஆர். பிரேமதாஸ | 50.43% |
| 1994 | சந்திரிக்கா | 62.22% |
| 1999 | சந்திரிக்கா | 51.12% |
| 2005 | மஹிந்த | 50.29% |
| 2011 | மஹிந்த | 57.88% |
| 2015 | மைத்ரி | 51.28% |
| 2019 | ? | |

இம்முறை தேர்தலில் கோத்தா பெரும்பான்மை சிங்கள வாக்குகளால் வெற்றி பெறுவதற்கு சாதகமான சில காரணிகள் உள்ளதென்று அரசியல் அவதானிகள் வாதிக்கின்றனர்.

4/21 குண்டுவெடிப்பு மற்றும் அதை ஒட்டி நாட்டில் இடம்பெற்ற இனக் கலவரங்கள் தொடர்ந்து முஸ்லிம்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் பிரச்சாரங்கள் மற்றம் குற்றச்சாட்டுக்கள் சிங்கள வாக்காளர்களில் பெருந்தொகையினரை கோத்தாவின் பக்கம் சாய்த்து விடும் என்ற ஊகம் பரவலாக உள்ளது.

கடந்த உள்ளூராட்சித் தேர்தலின் பெறுபேறுகளை வைத்து நோக்கும் போது மஹிந்த ஆதரவு வாக்காளர் அலை இம்முறை கோத்தாவின் பக்கம் வீசலாம் என்ற நம்பிக்கை கோத்தா ஆதரவாளர்களுக்கு மத்தியில் உள்ளது.

கடந்த நல்லாட்சியில் நாட்டில் பொதுவாக மக்கள் எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடிகள் மற்றம் இடர்பாடுகள், பாதுகாப்புத் துறையில் ஏற்பட்ட பலவீனங்கள் இவற்றையெல்லாம் தனது பிரச்சாரத்திற்குச் சாதகம்ாகப் பயன்படுத்திக் கொள்வதற்கு மஹிந்த பக்தர்கள் விளைகிறார்கள். இதுவும் குறிப்பிட்ட வாக்காளர் அலைகளை திருப்பக் கூடியதே.

எவ்வாறாயினும், இம்முறை தேர்தலில் யார் வெல்ல வேண்டும் என்ற சிறுபான்மையினரின் எதிர்பார்ப்பு ஒரு புறமிருக்க யார் வெல்லக் கூடும் என்ற கேள்வியும் ஊகங்களாலும் நம்பிக்கைகளாலும் நிரப்பப்படுவதை சமூக ஊடகங்களில் காணலாம்.

21 மில்லியன் மக்களைக் கொண்ட இலங்கையில் நவம்பர் 16 இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் 15.6 மில்லியன் வாக்காளர்கள் தமது வாக்கினை அளிப்பதற்குத் தகுதி பெற்றுள்ளனர். வாக்காளர் தொகை சுமார் ஒரு கோடியே 56 இலட்சம் ஆகும். இவற்றுள் 25 வீதமான வாக்குகள் சிறுபான்மை மக்களுக்கு உரிமையவை. 40 இலட்சம் சிறுபான்மை வாக்குகள் உள்ளன. தேர்தலில் சிங்கள வாக்குகளால் மாத்திரம் வெல்ல நினைக்கும் ஒருவர் சிங்கள வாக்குகளில் 66 வீதமானவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டும். 2010 தேர்தலில் அதாவது, யுத்த வெற்றியின் ஒரு வருடம் கழிந்து இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் மஹிந்த ராஜபக்ஷ பெற்ற வாக்குகள் 57.88% ஆகும். அதிலும் சிறுபான்மை வாக்குகள் [illegible] கின்றது.

இலங்கையின் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் 1994 இல் போட்டியிட்டு வெற்றி பெற்ற சந்திரிக்கா 62.22%மான வாக்குகளைப் பெற்றிருந்தார். 2010 இல் மஹிந்த பெற்ற வாக்குகளும் 1994 சந்திரிக்கா பெற்ற வாக்குகளும் தனிப் பெரும் சிங்கள வாக்குகள் அல்ல. சிறுபான்மைத் தமிழர்கள் மற்றும் முஸ்லிம்களின் வாக்குகளும் அவர்களுக்கு அளிக்கப்பட்டே இந்த வீதாசாரத்தை அவர்கள் பெற முடிந்தது.

நமது தேர்தல் வரலாற்றில் 60 வீதத்திற்கும் அதிகமான வாக்குகளைப் பெற்ற ஒரே நபர் சந்திரிக்காவே (62.24) என்பதில் சந்தேகமில்லை. ஏனெனில், பொதுவாக 51 தொடக்கம் 57 வீதம் வரையான வாக்குகளையே இதுவரை ஜனாதிபதித் தேர்தலில் குதித்தவர்கள் பெற்றிருக்கிறார்கள். இந்நிலையில் தமிழ், முஸ்லிம் வாக்குகளை கணிசமான அளவில் பெறாமல் தனிப் பெரும் சிங்கள வாக்குகளைப் பெற்று தேர்தலில் வெற்றி பெறுதல் என்பது சவால் மிக்கது. எதிரணிக்கு சிறுபான்மை வாக்குகள் சென்று சேராது தடுப்பதற்கான வியூகங்களை கோத்தா தரப்பு வகுத்துச் செயற்பட்டாலும் அதில் முழு வெற்றி பெற முடியாது.



வடக்குக் கிழக்கில் ஹிஸ்புல்லாஹ், கருணா அம்மான், அதாவுல்லாஹ், இன்னும் சில தமிழ் தலைவர்கள் கோத்தாவின் பக்கம் நிற்பதனால் பெருவாரியான சிறுபான்மை வாக்குகள் சஜித் அணிக்குச் செல்லாமல் சிதறடிக்கப்படலாம் என்ற ஒரு வியூகத்தை கோத்தா அணி வகுத்துச் செயல்படுகின்றது. ஆனால், இது வெற்றி பெறும் வியூகம் அல்ல.

இன்னொரு புறம் ஜனாதிபதித் தேர்தல் வரலாற்றில் என்றைக்கும் இல்லாதவாறு அதிகமான வேட்பாளர்கள் களத்தில் இறங்கியுள்ளனர். 20 ஆண்டுகளுக்கு முன்னர் ஜேவிபியின் சார்பாக நந்தன குணதிலக்க தேர்தலில் இறங்கினார். அவர் மக்கள் மயப்பட்டவரோ ஜனரஞ்சகமானவோ அல்ல என்பதால் கணிப்பிட முடியாத சொற்ப வாக்குகளையே அவரால் பெற முடிந்தது.

தற்போது அனுர குமார ஜேவிபி சார்பாக களமிறங்கியுள்ளார். நந்தன குணதிலக்கவை விட கணிசமான வாக்குகள் அனுரவுக்குக் கிடைக்கலாம் என அவரது ஆதரவாளர்கள் எதிர்பார்க்கின்றனர். இதற்கு சில காரணங்கள் உள்ளன. இரு பெரும் கட்சிகளும் ஊழல் மிக்கவை. வாக்குறுதி எதனையும் நிறைவேற்றாதவை என்பதனால் நாட்டிற்கு ஒரு மூன்றாவது அரசியல் சக்தி அவசியம் என உணரும் அறிவுஜீவிகள் மற்றும் நேர்மையாகச் சிந்திக்கும் நடுநிலையாளர்கள் ஜேவிபி தேர்தலில் வெற்றி பெறாவிட்டாலும் மூன்றாவது சக்தி ஒன்றின் தேவையை உணர்த்துவதற்கும் சிங்கள சிவில் சமூகத்தின் உளவியலில் ஒரு பலத்த அடியை உருவாக்குவதற்கும் அனுரவுக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற கருத்தினைக் கொண்டுள்ளனர். இதன் விளைவாக பெரும்பான்மை சிங்கள வாக்குகள் மேலும் சிதறுவதற்கு வாய்ப்புள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் ஓய்வு பெற்ற இராணுவத் தளபதி மகேஷ் சேனாநாயக்க உள்ளிட்ட 30 இற்கும் மேற்பட்ட தனிநபர்கள் சுயேச்சையாகவும் சிறு சிறு கட்சிகள் சார்பிலும் கள மிறங்குகின்றனர். இவர்கள் இறுதித் தருணத்தில் யாருடனும் இணைவார்களா அல்லது தனித்தே நிற்பார்களா என்பதை இப்போதைக்கு ஊகிக்க முடியாது.

எவ்வாறாயினும், மிதக்கும் வாக்காளர்களே இறுதியில் தேர்தல் வெற்றியைத் தீர்மானிக்கப் போகிறார்கள். அவர்கள் தற்போதைய பிரச்சார மேடைகளால் எவ்வாறு கவரப்படப் போகிறார்கள் என்பதைப் பொறுத்து தேர்தல் முடிவும் அமையும் என்பதில் சந்தேகமில்ல. இந்தத் தருணத்திலேயே ஐ.தே.க. வேட்பாளராகக் களமிறங்கியுள்ள சஜித் பிரேமதாஸ வெற்றி பெறுவாரா என்ற கேள்வி எழுகின்றது.

ஐ.தே.க. விலுள்ள யதார்த்தவாதிகள் கடந்த உள்ளூராட்சித் தேர்தல் பெறுபேறை அடியொற்றி சிங்கள வாக்குகளில் தாம் 50 வீதத்தையோ 60 வீதத்தையோ பெறுவது சாத்தியமில்லை எனவும், அதிகபட்சம் 40 வீதத்தைப் பெற்றுக் கொண்டால் சிறுபான்மை மக்களின் வாக்குகளோடு வெற்றி பெற்றுவிட லாம் என்று எதிர்பார்த்துள்ளனர். ஆனால் சிங்களப் பெரும் பான்மை வாக்குகள் எவ்வாறு சிதறப் போகின்றது என்பதைப் பொறுத்தே அவர்களின் எதிர்பார்ப்பு நிறைவேறும் என்பதில் சந்தேகமில்லை.

இத்தகைய இடக்கு முடக்கான தேர்தல் களத்தில் முஸ்லிம் சிறுபான்மை மக்களின் வாக்குகள் ஒருமுகப்படுமா என்பதும் சிக்கலான கேள்வியே. புத்தளம், பேருவலை போன்ற முஸ்லிம் செறிவாக வாழும் பிரதேச பள்ளிவாயல்களுக்கு சமூகமளித்த கோத்தாவுக்கு அமோக ஆதரவளித்துள்ளனர். தென்னிலங்கையில் பெரும்பாலான முஸ்லிம்கள் கோத்தாவை ஆதரிப்பதாக ஒரு விம்பம் கட்டமைக்கப்படுகின்றது. ஆனால் அது விஞ்ஞானபூர்வமானதல்ல.

60 வீதமான சனத்தொகையைக் கொண்ட வடக்குக் கிழக்கில் வாழும் முஸ்லிம் சிறுபான்மை மக்களின் வாக்குகள் இத்தேர்தலில் தீர்க்கமானவை. முஸ்லிம் காங்கிரஸ் சஜிதை ஆதரிக்கும் நிலைப்பாட்டில் உறுதியாக உள்ளது. ஆனால், வெல்லும் வேட்பாளரின் பக்கம் இறுதித் தருணத்திலேனும் சாயும் சம்பிரதாயம் கொண்டிருக்கும் ரிஷாதின் கட்சி எந்தப் பக்கம் சாயும் என்பதை இப்போதைக்கு ஊகிப்பது கடினமாகும்.

அதிகாரத்தில் யாரும் நிலைத்திருப்பதில்லை. இலங்கையில் தேர்தலில் வெல்வதற்கான பலமான ஆயுதமாக இனவாதம் கையாளப்படுவதுதான் மிகுந்த ஆபத்தானது. ஒப்பீட்டு ரீதியில் பெரிய தீமையொன்றைத் தவிர்ப்பதற்கு சிறிய தீமையொன்றை சகித்துக் கொள்ள வேண்டிய நிலைக்கே முஸ்லிம்கள் வர வேண்டும். இது தவிர்க்க முடியாத ஒன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுவது நலம்



இம்தியாஸ் பாக்கீர் மாக்கார்

# நிம்மதியான சூழலே நமக்குத் தேவை

நாட்டில் தற்பொழுது ஜனாதிபதித் தேர்தல் சூடுபிடிக்க ஆரம்பித்திருக்கிறது. பொதுஜன பெரமுன சார்பில் இம்முறை கோட்டாபய ராஜபக்ஷ போட்டியிடுகிறார். ஐ.தே.மு சார்பில் சஜித் பிரேமதாச களமிறக்கப்பட்டுள்ளார். முதலில் நாம் பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி தேர்தலில் களமிறக்கப்பட்டிருப்பவர் யார் என்பதைப் பார்க்க வேண்டும். அவர்களது கொள்கைத் திட்டங்கள் என்ன? கடந்த காலப் பகுதியில் அவர்கள் மேற்கொண்ட நடவடிக்கைகள் என்ன? என்பது குறித்து ஆராய்ந்து பார்க்க வேண்டும். அதுபோன்று இம்முறை ஐ.தே.க. சார்பில் போட்டியிடுபவர் யார்? அவரது கொள்கைகள் என்ன? அவரது கடந்த காலச் செயற்பாடுகள் எவ்வாறிருந்தன? அவர் மேற்கொண்ட பணிகள் என்ன? என்பது குறித்து மக்கள் தெளிவாக அறிந்திருக்க வேண்டியது முக்கியமானது.

எமது நாட்டிலுள்ள தமிழ், சிங்கள, முஸ்லிம், கிறிஸ்தவ மக்கள் எல்லோருக்கும் நிம்மதியாக வாழக் கூடிய சூழல் ஒன்றை உருவாக்கிக் கொள்வதே மிக முக்கியமானது. முதலாவது எமக்கு நிம்மதி வேண்டும். இந்த நிம்மதியை யாரால் பெற்றுத்தர முடியும். மக்களின் இந்த நிம்மதிக்காக வேண்டி உழைத்திருப்பவர் யார்? அந்த நிம்மதியை அடைந்துகொள்வதற்கு மக்கள் யார் மீது நம்பிக்கை வைக்க வேண்டும்?

எனவே இப்பிரதான வேட்பாளர்கள் இருவரில் ஒருவருக்கே மக்கள் அதிகமாக ஆதரவு தெரிவிக்க வேண்டும். என்னைப் பொறுத்தவரையில் ஐக்கிய தேசியக் கட்சி வேட்பாளரின் வெற்றிக்காக வேண்டியே உழைக்கின்றேன். காரணம், சஜித் பிரேமதாச அவர்கள் ஐ.தே.க. பிரதி நிதித்துவப்படுத்துகிறார். ஐ.தே.க.வில் அங்கம் வகிக்கின்ற இதர கட்சிகளின் தலைவர்கள் யார்? அதில் முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் ரவூப் ஹக்கீம் உள்ளார், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பில் ரிஷாத் பதியுதீன் உள்ளார். அதுபோன்று மனோ கனேசன், திகாம்பரம் மற்றும் கிறிஸ்தவ அமைப்பை பிரதிநிதித்துவப் படுத்தக் கூடிய பலர் இருக்கின்றார்கள். நாட்டின் சகல இனங்களையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றவர்கள் ஐ.தே.க.வுடன் கைகோர்த்துள்ளனர்.

யார் இந்த சஜித் பிரேமதாச? அவர் முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் புதல்வர். அவர் ஏழை மக்களுக்கு தலைமை தாங்கிய ஒரு ஜனாதிபதி. ஏழை மக்களோடு நெருக்கமான உறவுகளைப் பேணிய ஒருவர். ஜனசவிய திட்டத்தை ஆரம்பித்தவர். மாதம் 2500 ரூபாவுக்கு குறைந்த வருமானங்களை பெறும் குடும்பங்களை சேர்ந்தவர்களுக்கு தொழில்வாய்ப்புக்களின் போது 25 மேலதிக புள்ளிகளைப் பெற்றுக்கொடுத்தவர். இலவசக் கல்வியின் சலுகைகளை அதிகரித்து பாடசாலை மாணவர்களுக்கு இலவசமாக சீருடைகளை வழங்கும் திட்டத்தைக் கொண்டு வந்தவர். இவ்வாறு மக்களுக்கு இலவசமாக பல்வேறு விடயங்களைப் பெற்றுக் கொடுத்த ஒரு மனிதரின் புதல்வரே இவர். தந்தையின் வழிமுறையில் தற்போது வீடமைப்பு அமைச்சராக பல நூறு வீட்டுத் திட்டங்களை ஆரம்பித்து செயற்படுத்தி வருகின்றார்.

கடந்த 4 வருடங்களை அவதானிக்கின்ற போது சஜித் பிரேமதாச அவர்கள் வடக்கு கிழக்கில் அதிகமான வீடுகளை நிர்மாணித்துள்ளார். அங்குள்ள வறிய மக்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுத்துள்ளார். இப்பேறபட்ட ஒருவர் நாட்டின் ஜனாதிபதியானால் நாட்டு மக்களுக்கு இன்னுமின்னும் பாரிய சேவைகளை முன்னெடுப்பார் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. சஜித் பிரேமதாசவின் கொள்கைத் திட்டத்தை பாருங்கள்! அவர் சமூக ஜனநாயகத்தையே வலியுறுத்துகிறார். அவர் கடும்போக்கு வலதுசாரிச் சிந்தனையை வலியுறுத்தவில்லை. அவர் முற்போக்கான சிந்தனை முகாமில் இருக்கின்றார். இதனாலேயே விக்டர் ஐவன் போன்ற சிரேஷ்ட ஊடகவியலாளர்களும் அவரைப் போற்றி கருத்துக்களை தெரிவித்துள்ளனர்.

அத்துடன் சஜித்தின் கரங்களைப் பலப்படுத்த அவரோடு இணைந்து கொண்ட முன்னாள் பிரதியமைச்சர் அதாவுத செனவிரத்ன் "கோட்டாபய என்பவர் கடும்போக்குவாத சிந்தனை படைத்த ஒருவர், பாசிஸ சிந்தனை படைத்தவர், வெள்ளை வான் கலாசாரத்தை உருவாக்கியவர், சர்வாதிகாரப் போக்குடையவர், இந்நாட்டில் முதற் தடவையாக தமிழ், முஸ்லிம், கிறிஸ்தவ மக்களுக்கு பிரச்சினையை உருவாக்கும் கட்டத்தை ஏற்படுத்தியவர். இதனால் என்னால் அவருக்கு ஒத்துழைப்பு வழங்க முடியாது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இவற்றை நாம் சிந்திக்க வேண்டும். சஜித் பிரேமதாச இளமைத் துடிப்பும் உற்சாகமும் மிக்கவர். ஒருநாளில் அவர் 5 மணித்தியாலமே நித்திரை கொள்வார். அவரிடம் அர்ப்பணிப்பு உள்ளது. தான் அதிகாரத்திற்கு வந்தால் நாடு முழுவதிலும் உள்ள ஜனாதிபதி செயலகங்களை தொழிற் பயிற்சி நிலையங்களாக மாற்றப் போவதாகத் தெரிவித்துள்ளார். நாட்டின் அபிவிருத்தி தொடர்பில் தனிநபர் வருமானத்தை மாத்திரம் பார்த்து சந்தோசப்பட முடியாது, நாட்டின் பெரும்பான்மை மக்களின் சிறப்பான வாழ்வாதாரம், அவர்களின் நிம்மதியைப் பார்த்தே நாம் சந்தோசப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.


தெற்காசியாவில் மற்றுமொரு இம்ரான் கானாக இவர் வருவார் என்பதில் சந்தேகமில்லை. இம்ரான் கான் அரச வாகனங்களைப் பயன்படுத்துவதில்லை. சுகபோகங்களை அனுபவிப்பதில்லை. எனவே இவற்றைப் புரிந்து செயற்பட வேண்டும். நாம் சிந்தித்து செயற்பட வேண்டும். திரைமறைவுக்கு பின்னால் உள்ள இந்த யதார்த்தங்களை சிந்தித்து செயற்பட வேண்டும். தந்தையாரின் காலத்தில் இவர் அரசியலில் குதிக்கவில்லை. தனது 20 வயதிலேயே அரசியலில் பிரவேசித்தார். நாட்டின் எதிர்காலம் தொடர்பில் நன்கு புரிதலுள்ள இப்பேர்பட்ட மனிதரொருவரை தெரிவுசெய்வது எம் எல்லோரினதும் தலையாய கடமையாகும்.

# நாட்டின் சிக்கல்களைத் தீர்ப்பதில் முஸ்லிம் சமூகத்தினதும் பங்கு முக்கியமானது

**(தேர்தலில் சிவில் சமூகத்தின் செயற்பாடு என்ற தலைப்பில் ஸலாமா சொசைட்டி ஏற்பாடு செய்திருந்த உரை நிகழ்ச்சியில் சிரேஷ்ட ஊடகவியலாளர் விக்டர் ஐவன் ஆற்றிய உரையின் தொகுப்பு)**

இலங்கைச் சமூகத்தில் பெரும் சிக்கல்கள் இருக்கின்றன. அதில் ஒரு முனையில் இனம் இருக்கிறது. இன்னொரு முனையில் மதம் இருக்கிறது. முஸ்லிம் சமூகத்துடன் சம்பந்தப்படா விட்டாலும் மற்றுமொரு முனையில் குலம் இருக்கிறது. இந்தச் சிக்கல்கள் எல்லாம் இப்பொழுது அழுகி, விகாரமடைந்து, வெடித்துச் சிதறக் கூடிய நிலையில் இருக்கின்றன. இது சிங்கள, முஸ்லிம், தமிழ் சமூகங்களுக்கோ அல்லது பௌத்த, இந்து, இஸ்லாம், கிறிஸ்தவ சமயத்தினருக்கோ எவருக்குமே நல்லதல்ல. மொத்தத்தில் இது நாட்டுக்கே நல்லதல்ல.

இந்தச் சிக்கல்களின் ஒரு தரப்பாக முஸ்லிம்கள் இருக்கிறார்கள். முஸ்லிம்கள் ஒரே மதத்தைப் பின்பற்றுகிறார்கள் என்பது முஸ்லிம் சமூகத்திடம் காணப்படக்கூடிய விஷேடமான அம்சம். சிங்கள சமூகம் பௌத்தர்களையும் கிறிஸ்தவர்களையும் கொண்டமைந்திருக்கிறது. தமிழ் சமூகமும் இந்துக்களையும் கிறிஸ்தவர்களையும் உள்ளடக்கியிருக்கிறது. ஆனால் முஸ்லிம் சமூகத்தில் இஸ்லாமியர்கள் மட்டுமே இருக்கிறார்கள். இந்த வகையில் முஸ்லிம் சமூகம் ஜனாதிபதித் தேர்தலில் யாரைத் தெரிவு செய்வது என்பதை விட முக்கியமானதொரு விடயத்தில் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது.




இந்தச் சிக்கல்களை வைத்துக் கொண்டு முன்னோக்கிப் பயணிப்பது அபாயகரமானது மட்டுமல்ல அது உறுதியுமற்றது. ஈஸ்டர் தாக்குதல்களுக்குப் பின்னால் நடந்தவைகளை வைத்து முஸ்லிம் சமூகம் இதனைப் புரிந்து கொள்ள முடியும். முஸ்லிம்களுடைய பிரச்சினைகள் வெளித் தெரிய முன்னர் தமிழ் - சிங்கள பிரச்சினையே நமது கண் முன்னால் விரிந்திருந்தது. தீவிரவாத மோதல்கள் இந்த இரு சமூகங்களுக்கிடையிலேயே நடைபெற்றது. ஆனால் உள்நாட்டு யுத்தம் முடிந்ததன் பின்னர், அது சிங்கள - முஸ்லிம் பிரச்சினையாக வடிவெடுத்தது.

சமூ கங்களுக்கிடையிலான இந்த மோதல்கள் எந்த நேரத்திலும் எந்தப் பக்கத்துக்கும் திரும்பலாம் என்பதை ஈஸ்டர் தாக்குதல்களின் பின்னர் நடக்கின்ற சம்பவங்கள் எடுத்துக் காட்டுகின்றன. முல்லைத்தீவு விகாராதிபதியின் இறுதிக் கிரியைகளின் போது அது சிங்கள - தமிழ் அல்லது பௌத்த - இந்து மோதல்களாக தலையெடுத்தன. சிக்கல்களைத் தீர்க்காமல் நாம் முன்னோக்கிப் பயணித்துக் கொண்டிருக்கிறோம் என்பதையே இந்த நிகழ்வு காட்டுகிறது.

காலனித்துவத்தின் கீழிருந்து சுதந்திரம் பெறும் நாடுகள் அந்த நாட்டின் சமூகங்களுக்கிடையே நிலவுகின்ற இன, மத, குல பேதங்களை மட்டுப்படுத்தி நவீன சமூகமொன்றைக் கட்டியெழுப்புவதில் கவனம் செலுத்துகின்றன. இவற்றுக்கான அங்கீகாரம் காலனித்துவத்துடன் அழிந்து போகிறது. பேதங்களின்றி அனைத்து மக்களும் சமமான அங்கீகாரத்தையும் உரிமைகளையும் பெற்றுக் கொள்கின்ற வார்ப்பொன்றை வடிவமைப்பது தான் நவீன சமூகத்தைக் கட்டியெழுப்புவது என்பதன் அர்த்தமாகும்.

பக்கத்து நாடான இந்தியா இந்தப் பணியைச் செய்தது. அங்கும் இரத்தம் ஓட்டப்பட்டு பிளவுகள் ஏற்பட்டு பாகிஸ்தான் பிரிந்து செல்லும் அளவுக்கு சிக்கல்கள் விரிந்தன. பிளவின் பின்னர் பாகிஸ்தானுடன் இணைந்து கொண்ட முஸ்லிம்களை விட பெரிய எண்ணிக்கையிலான முஸ்லிம்களை தம்முடன் வைத்துக் கொள்வதற்கு இந்தியாவால் முடிந்தது. சுதந்திரத்தின் பின்னரும் அங்கு சிக்கல்கள் இல்லாமலிருக்கவில்லை. ஜாதி, குல பேதங்களுக்கு எதிராக பெரும் போராட்டமொன்றை மகாத்மா காந்தி நிகழ்த்தினார். இழிந்த குலத்தினரின் மத்தியிலே அவர் [illegible] உயர் குல[illegible] அங்கே வார் செய்தார். இந்து-முஸ்லிம் பிரச்சினை தலை தூக்கியபோது அவர் தனது ஆசிரமத்தை முஸ்லிம் பகுதியில் அமைத்துக் கொண்டார்.

தனது உரைகளில் குர்ஆனிய, விவிலிய வசனங்களையும் சேர்த்துக் கொண்டார். கடைசியில் பாகிஸ்தான் உருவாக்கப்பட்டு முஸ்லிம்கள் மீது வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த வேளையிலேயே இந்துத்துவ தீவிரவாதியினால் அவர் சுட்டுக் கொல்லப்பட்டார். அவரது உயிரிழப்புடன் இந்த மோதல்களையும் தகனம் செய்யும் வகையில் இந்திய அரசியலமைப்பு தேசியத்தைக் கட்டியெழுப்பும் விதமாக வரையப்பட்டது.

எங்களுக்கு சுதந்திரம் இயல்பாகக் கிடைத்ததனால் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான கலந்துரையாடல்கள் சுதந்திரத்தின் போது நடைபெற வேண்டியிருக்கவில்லை. சுதந்திரம் கிடைத்து 71 ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட நாங்கள் அதைப் பற்றிக் கதைக்கவில்லை. இதனால் நாடு சிங்களத் தரப்பிலிருந்து இரண்டு கிளர்ச்சிகளை சந்தித்தது. தமிழ்த் தரப்பிலிருந்து நீண்டதொரு போராட்டம் நிகழ்ந்தது. இறுதியில் சொற்ப எண்ணிக்கையினராயினும் முஸ்லிம் தரப்பிலிருந்தும் வன்முறைகள் வெடித்திருக்கின்றன. நவீன யுகத்துக்கு வந்த பின்னர் 1915 இல் சிங்கள - முஸ்லிம் மோதல் நடந்தது. 1870 இல் கொட்டாஞ்சேனையில் பௌத்த - கிறிஸ்தவ மோதல் பாரிய அளவில் நடந்தது. 1958 இல் சிங்கள - தமிழ் மோதல் நிகழ்ந்தது. 1983 இல் தமிழருக்கெதிரான இனக்கலவரம் நடைபெற்றது. சோம தேரர் இறந்த போதும் கூட பொய்யால் புனையப்பட்ட காரணங்களை வைத்து மோதலொன்று உருவாக்கப்பட முயற்சிக்கப்பட்டது. நாட்டில் நடந்த இவ்வாறான பிரச்சினைகளின் போது கூட இவற்றுக்கான அடிப்படைத் தீர்வு பற்றிப் பேசப்படவில்லை. உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்த வேளை இதற்கான பொன்னான தருணமாக இருந்தாலும் அதனைப் பயன்படுத்திக் கொள்ளும் அளவுக்குப் புத்தியில்லாத தலைவர்கள் அந்த வாய்ப்பையும் தவற விட்டு விட்டார்கள். அவர்களுக்குப் பின் நல்லாட்சி கோஷத்துடன் வந்தவர்களும் இதனைச் செய்யவில்லை.

இன்று பிரபாகரனோ விஜேவீரயோ இல்லா விட்டாலும் கூட அவர்களது காலத்தை விட பெரியதொரு நெருக்கடியில் நாடு இருக்கிறது. உள்நாட்டு யுத்தத்துக்குப் பின்னர் வந்த எந்த ஜனாதிபதிகளும் இந்த விடயத்தில் கவனமெடுக்கவில்லை. அந்தவகையில் அடுத்த ஜனாதிபதி யார் என்பதைத் தீர்மானிப்பதை விட, இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பது தொடர்பாகவே தேர்தல் காலங்களில் சிந்திக்க வேண்டும். அறிவையும் உழைப்பையும் பிரயோகித்து முஸ்லிம் சமூகத்துக்கும் சமூகத் தலைவர்களுக்கும் இது தொடர்பில் தெளிவுபடுத்துவதற்கான வழிகளைத் தேட வேண்டும்.

இந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கான சிறந்த வழி மக்கள் மைய யாப்பு உருவாக்க செயற்பாட்டுக்குச் செல்லுவதாகும். இதனூடாக எம்மைப் பற்றி விரிவாக மீள்பார்வை செய்யப்பட வேண்டும். சிக்கல்களுடன் தொடர்புபட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடல்கள் நடத்தப்பட வேண்டும். இதனடியாக வருகின்ற இணக்கப் பாடுகளை வைத்து யாப்பு தயாரிக்கப்பட [illegible] இதனை வைத்து [illegible] யுத்தமின்றி மாற்றத்தை ஏற்படுத்த முடியும். இதற்கான அவகாசத்தைப் பெற்றுத் தருமாறு முஸ்லிம் சமூகமும் தமது தலைவர்களுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அவர்கள் ஆதரவு வழங்குகின்ற வேட்பாளரிடம் இதனை ஒரு நிபந்தனையாக முன்வைக்குமாறு வேண்டிக் கொள்ள வேண்டும்.

முல்லைத்தீவு பிரச்சினையின் போது நீதிமன்ற உத்தரவை சில மதத் தலைவர்கள் மதிக்கவில்லை. பொலிசாரும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கவில்லை. பொலிசார் ஞானசார தேரரின் உத்தரவை விட நீதிமன்ற உத்தரவுக்கே மதிப்பளித்திருக்க வேண்டும். நாட்டில் சட்டத்தின் ஆதிக்கம் இல்லை என்பதையே இது எடுத்துக் காட்டுகிறது. தீவிரவாதச் சிந்தனையும் தீவிரவாதச் செயற்பாடுகளும் எமது பின்னடைவையே காட்டுகின்றன. திறந்த கலந்துரையாடல்கள் மூலமே இதனைக் களைய முடியும்.

ஈஸ்டர் தாக்குதல் போல அட்டகாசமாக எல்ரிரிஈயோ ஜேவிபியோ கூட தாக்குதல்களை ஆரம்பிக்கவில்லை. இந்தத் தாக்குதல்களினால் முஸ்லிம் சமூகம் பலவிதமான நெருக்குவாரங்களுக்கு உட்பட்டது. ஆனாலும் இது நாடுதழுவிய ரீதியில் பரவலான ஒன்றாக வியாபிக்கவில்லை. கிறிஸ்தவ சமூகத்திலிருந்து மட்டுமன்றி சிங்கள சமூகத்திலிருந்தும் முஸ்லிம்கள் மீதான எதிர்ப்பலைகளைக் கட்டுப்படுத்துவதற்கான ஏற்பாடுகள் நடந்தன. சிங்கள சமூகம் இற்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்பிருந்த சமூகத்தை விட மாற்றத்துக்கு உட்பட்டு வருகின்றது என்பதை முஸ்லிம் சமூகம் புரிந்து கொள்ள வேண்டும். இவ்வாறு நாங்கள் அனைவரும் மாற்றத்துக்கு உட்பட வேண்டும். தற்போதைய பிரச்சினைகளை முற்றுவதற்கு முன்னர் அவற்றுக்குத் தீர்வு காண வேண்டும்.

பாராளுமன்ற அங்கத்தவராகி ஆட்சியைக் கைப்பற்றி இந்தப் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என சிலர் கருதுகிறார்கள். இப்படி எத்தனை பேர் ஆட்சி பீடம் ஏறியிருப்பார்கள்? ஆட்சி அதிகாரம் கிடைத்த பின்னரும் கூட அவர்கள் பிரச்சினைகளைத் தீர்க்க முற்படவில்லை. முல்லைத்தீவு பிரச்சினையைப் பற்றி எத்தனை ஜனாதிபதி வேட்பாளர்கள் பேசியிருப்பார்கள்? அவர்கள் பேசமாட்டார்கள். அதனால் தான் சர்வதேச அளவில் அங்கீகாரம் பெற்றுள்ள பல நாடுகள் வெற்றிகரமாகப் பின்பற்றுகின்ற மக்கள் மைய யாப்பு உருவாக்கத்தின் தேவை பற்றி நாங்கள் பேசுகிறோம். இது பற்றி முஸ்லிம் சமூகமும் பேச வேண்டும். தமது மக்களிடம் இதனுடைய முக்கியத்துவத்தை எடுத்துச் சொல்ல வேண்டும். இந்தச் சிக்கல்களில் இருந்து நாட்டை விடுவிக்க வேண்டுமாக இருந்தால் இதைத் தவிர வேறு வழியில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# “முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டு தீர்மானம் எடுக்க வேண்டிய கட்டத்தில் உள்ளது”

## சட்ட முதுமாணியும் அரசியல் ஆய்வாளருமான வை.எல்.எஸ். ஹமீட்

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

**இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பு முறை எப்படி நடைபெறும்?**

ஜனாதிபதித் தேர்தலில் மூவருக்கு மேல் போட்டியிடும் போது ஒருவர் ஆகக் கூடியது மூன்று வேட்பாளர்களுக்கு 1,2,3 என இலக்கமிடலாம். விரும்பினால் முதலாவது தெரிவுக்கு புள்ளடியும் ஏனையவற்றிற்கு இலக்கங்களும் இடலாம். (X,2,3). 1,2,3 இலக்கமிட வேண்டுமென்பது ஒரு வழிகாட்டி மட்டும்தான் என ஜனாதிபதி தேர்தல்கள் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோன்றுதான் வாக்களிக்க வேண்டுமென்று கட்டாயமில்லை.

அதேநேரம் பிரிவு 51(2) இன்படி ஒரு வாக்காளர் தாம் யாருக்கு வாக்களிக்க விரும்புகிறார் என்ற எண்ணத்தை அவரது வாக்குச் சீட்டில் கீறப்பட்ட அடையாளம் பிரதிபலிக்கின்றது என்று திருப்தி கண்டால் அதனை ஏற்க வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனாலும் 1,2,3 என எழுதுவது சிறந்தது. அதேபோல், விரும்பினால் ஒருவருக்கு மட்டும் வாக்களித்து விட்டு ஏனைய இலக்கங்களை விட்டுவிடலாம். அல்லது இருவருக்கும் வாக்களிக்கலாம். மூவருக்கு வாக்களிக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை.

ஒருவர் முதலாம் இலக்கத்தை எழுதாமல் அல்லது புள்ளடி இடாமல் 2 என்றோ அல்லது 3 என்றோ அல்லது 2,3 என்றோ எழுதினால் வாக்கு நிராகரிக்கப்படும். இவ்விடயம் பிரிவு 51(1)(ந)(111) இல் குறிப்பிடப்பட்டுள்ளது. முதலாவது வாக்கு மாத்திரமே வாக்காகும் என்பதே இதன் மூலம் புரிந்துகொள்ளப்படுகிறது. ஏனையவை விருப்பத் தெரிவு வாக்குகளா? என்ற கேள்வியை எழுப்பினால் பதில் 'இல்லை' என்பதாகும். ஏனெனில் அவை நேரடியாக எண்ணப்படுவதில்லை. பதிலீடாகத்தான் எண்ணப்படுகின்றன. அதாவது பாராளுமன்றத் தேர்தலில் அளிக்கப்படுகின்ற மூன்று விருப்பத் தெரிவு வாக்குகளும் எண்ணப்படுகின்றன. இங்கு அவ்வாறு இல்லை. ஆனால் சில நேரம் இரண்டாவது அல்லது மூன்றாவது தெரிவு, வாக்காக எண்ணப்படலாம், விருப்பத் தெரிவு வாக்காக அல்ல.

சுருக்கமாகச் சொல்வதானால் ஒவ்வொருவருக்கும் முதலாவது தெரிவு மட்டுமே வாக்கு. சில நேரம் அவருடைய முதலாவது வாக்குக்குப் பதிலாக இரண்டாவது அல்லது மூன்றாவது தெரிவு, வாக்காக மாறலாம். சுருங்கக் கூறின் ஒருவருக்கு முதலாவது தெரிவு, வாக்காக இருக்கலாம், இன்னொருவருக்கு இரண்டாவது தெரிவு, வாக்காக இருக்கலாம், இன்னொருவருக்கு மூன்றாவது தெரிவு வாக்காக இருக்கலாம். ஆனால் ஒரு போதும் மூன்று தெரிவும் அல்லது இரண்டு தெரிவுகள் வாக்காக அமைய முடியாது. ஒரு வருக்கு ஒரு வாக்கு மட்டுமே.

**விருப்பு வாக்கு முறை இந்தத் தேர்தலில் எவ்வாறு முக்கியத்துவம் பெறப்போகின்றது என்பது பற்றி சற்று தெளிவுபடுத்த முடியுமா?**

முதலாவது சுற்றில் முதலாவது வாக்கு எண்ணப்படும். ஒருவர் 50 வீதத்தை தாண்டினால் அவர் ஜனாதிபதி. யாரும் 50 வீதத்தை தாண்டாத போது இரண்டாம் சுற்று எண்ணிக்கை நடைபெறும். மூன்றாம் சுற்று எண்ணிக்கை என்ற ஒன்று இல்லை. சிலர் நினைக்கிறார்கள் இரண்டாம் சுற்றில் இரண்டாம் வாக்கு எண்ணப்பட்டு அதிலும் யாரும் 50 வீதத்தைப் பெறாவிட்டால் மூன்றாவது சுற்றில் மூன்றாம் வாக்கு எண்ணப்படுமென்று. இது பிழையாகும். முதலாவது சுற்றில் முதலாம் வாக்கின் அடிப்படையில் ஒவ்வொருவரும் பெற்ற வாக்குகள் கூட்டப்படுவதோடு அவர்களது வாக்குச் சீட்டுக்கள் வெவ்வேறாக கட்டப்படும்.

இப்பொழுது முதல் இரு வேட்பாளர்களைத் தவிர ஏனைய வேட்பாளர்கள் போட்டியிலிருந்து நீக்கப்படுவார்கள். உதாரணமாக A,B,C,D,E என்ற ஐந்து வேட்பாளர்களில் C,D,E போட்டியிலிருந்து நீக்கப்பட்ட பின் மீண்டும் அவர்களது கட்டப்பட்ட வாக்குகள் அவிழ்க்கப்பட்டு அவற்றில் A அல்லது B இற்கு இரண்டாவது வாக்குகளை யாரும் வழங்கியிருந்தால் அவை A அல்லது B யின் வாக்குகளோடு கூட்டப்படுவதுடன் அந்த வாக்குச் சீட்டுக்களும் A அல்லது B யின் வாக்குச் சீட்டுக்களுடன் கட்டப்படும்.

அதன் பின் C,D,Eயின் எஞ்சிய வாக்குகளில் A அல்லது B யிற்கு யாரா வது தமது மூன்றாவது வாக்கை அளித்திருந்தால் நான் மேலே சொன்னது போன்று அவையும் கூட்டப்பட்டு உரியவரின் வாக்குகளுடன் கட்டப்படும். இப்பொழுது யார் அதிகூடிய வாக்குப் பெற்றிருக்கின்றாரோ அவரே வெற்றியாளர்.

**2015 இல் நடைபெற்ற தேர்தலில் போன்று முஸ்லிம்கள் மொத்தமாக முடிவெடுப்பது நல்லதா? அல்லது தனித்தனியாக முடிவெடுப்பது நல்லதா?**

இன்றைய காலகட்டத்தில் ஜனாதிபதித் தேர்தல் என்பது 'கரணம் தப்பினால் மரணம்' என்பது போன்ற ஒரு முக்கியமான தேர்தல் என்பதை எத்தனை பேர் புரிந்திருக்கின்றோம்? ஆளுக்கொரு திசையில் 'யானை பார்த்த குருடர்கள் போல்' இவர்தான் சிறந்தவர், அவர்தான் சிறந்தவர் என பிரிந்து நின்று வாக்களிக்க முடியுமா? என்பது நம்மை நாமே கேட்க வேண்டிய கேள்வியாகும்.

நாம் ஒரு வேட்பாளரை தெரிவுசெய்யும் போது சில முக்கியமான விடயங்களை கவனத்திற் கொள்ள வேண்டும். ஒன்று பிரதானமாக வேட்பாளர், அவரது கட்சி மற்றும் அவரது பிரதானிகளின் தன்மை. இரண்டு, அவரது வெற்றி வாய்ப்பின் சாத்தியம் என்பதாகும். இவற்றை விரிவாக ஆராய்ந்தால், ஒரு வேட்பாளர் ஏனையவர்களை விட சிறுபான்மையை அரவணைக்கக் கூடியவர். அவருக்கு வெற்றி வாய்ப்பும் பிரகாசமாக இருக்கின்றது. அல்லது முஸ்லிம்கள் ஒன்றுபட்டு வாக்களித்தால் அவரை வெற்றி பெற வைக்கலாம் என்றால் அவர்தான் நமது வேட்பாளர். ஒட்டு மொத்த முஸ்லிம்களும் அவருக்கே வாக்களிக்க வேண்டும்.

அவ்வாறான வேட்பாளர் யாரும் இருக்கின்றனரா? அவர் நல்லவராக இருந்தும் ஒட்டுமொத்த முஸ்லிம்களும் வாக்களித்தாலும் அவருக்கு வெற்றி பெற வாய்ப்பில்லை எனில், அவர் நமது வேட்பாளரல்ல. எல்லோரும் நல்லவர்களே! எனில் பிரிந்து வாக்களிக்கலாம். ஆபத்து இல்லை. எல்லோரும் பாதிப்பானவர்களே எனில் இங்கு இரண்டு இலக்குகள் எய்தப்பட முயற்சிக்க வேண்டும். ஆகக் கூடிய பாதிப்பானவர் தோற்கடிக்கப்பட வேண்டும். குறைந்த பாதிப்பானவர் வெற்றி பெறச் செய்யப்பட வேண்டும்.

பாதிப்பானவரின் வெற்றியை நாம் நூறு வீதம் ஒன்றுபட்டு மாற்றுதிசையில் வாக்களித்தாலும் தடுக்க முடியாது என்பது தான் கள யதார்த்தமானால் நாமும் அவருக்கே வாக்களிப்பதைத் தவிர வேறுவழியில்லை. அதன்மூலம் அவரது கடும்போக்கை சற்றுக்குறைக்க முடியுமா? என்பதற்கான ஒரு முயற்சியே அது. எனவே, இவை தொடர்பாக தெளிவான தேடல்களை நாம் செய்தாக வேண்டும். அவசரப்பட்டு முடிவுகளை எடுக்க முடியாது.

**இம்முறை ஜனாதிபதித் தேர்தலில் எந்தத் தரப்புக்கு வெற்றிவாய்ப்பு சாத்தியங்கள் அதிகம் என்பது பற்றிய கண்ணோட்டமொன்றை வழங்க முடியுமா?**

2012 ஆம் அண்டு சனத்தொகை மதிப்பீட்டின் படி சிங்களவர்: 74.9% (இவர்களில் பௌத்தர்கள் 70.2% எனவே 4.7% வீதமானோர் பிரதானமாக சிங்கள கிறிஸ்தவர்களாகும்) இலங்கைத் தமிழர்: 11.2% சோனகர்: 9.2% (ஆனால் முஸ்லிம்கள் 9.7%) மலையகத் தமிழர்: 4.2%. எனவே இதன் சுருக்கம்: பௌத்தர்கள் 70.2% ஏனைய சிறுபான்மையினர் 29.8% இவர்களுள் தமிழ் பேசும் சிறுபான்மையினர் 25.1% ஆகும்.

கடந்த ஜனாதிபதித் தேர்தல் முடிவுகளின் படி, மைத்திரிபால சிறிசேன 51.28% வாக்குகளை பெற்றார். மஹிந்த ராஜபக்ஷ 47.58% வாக்குகளை பெற்றார். இவற்றில் மஹிந்தவுக்கு சிறுபான்மை வாக்குகள் மிகச் சிறிய விகிதமே கிடைத்தது. அண்ணளவாக 43% தனி பௌத்த வாக்குகளாக இருக்கலாம். நிச்சயமாக கூறமுடியாவிட்டாலும் ஆகக் குறைந்தது 40% பௌத்த வாக்குகள் என்று ஓரளவு திட்டமாகக் கூறலாம்.

மைத்திரிக்கு கிடைத்த வாக்குகளில் சுமார் 25% அல்லது அதைவிட சற்றுக் குறைவான வாக்குகள் சிறுபான்மை வாக்குகளாக இருக்கலாம். எனவே, மைத்திரிக்கு கிடைத்த பௌத்த வாக்குகள் 25-27% ஆக இருக்கலாம். இது ஜேவிபியின் வாக்குகளையும் உள்ளடக்குகிறது. இதன் சுருக்கம் என்னவென்றால் 70% பௌத்த வாக்குகளில் சுமார் 40% மஹிந்தவின் வாக்குகளாக இருக்க மைத்திரிக்கு கிடைத்த பௌத்த வாக்குகளில் ஜேவிபியின் வாக்குகளை கழித்தால் சுமார் 20% பௌத்த வாக்குகளே மைத்திரிக்கு மிஞ்சியது. இதில் சுமார் 90% வாக்குகள் ஐதேக இற்கு உரியது.

மஹிந்தவின் பௌத்த வாக்கு வங்கி 2015இல் 40% இருக்க ஐதேகயின் பௌத்த வாக்கு வங்கி 20% இற்கு உட்பட்டதாகவே இருந்தது. ஏனைய 10% பௌத்த வாக்குகள் ஜேவிபி மற்றும் மைத்திரிக்காக அல்லது சிவில் அமைப்புக்களுக்காக அளிக்கப்பட்ட வாக்குகளாக இருக்கலாம். இது வோர் அண்ணளவான கணிப்பீடு மாத்திரமாகும்.

மக்கள் விடுதலை முன்னணி கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் பெற்ற சுமார் 6% மும் பெரும்பான்மையாக பௌத்த வாக்குகளாகும். 70% பௌத்த வாக்குகளில் சுமார் 10% பௌத்த வாக்கு களை ஜேவிபி இம்முறை கவரலாம். அவ்வாறாயின் எஞ்சுவது 60% பௌத்த வாக்குகள். ஐ.தே.க. சார்பில் சஜித் களமிறங்கியிருப்பதால் இம்முறை 22 வீத பௌத்த வாக்குகளையேனும் பெறுவார் என்பது நிச்சயம். கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மஹிந்த பெற்ற 40.47% வீதத்தில் சிறு பான்மை வாக்குகளும் ஒரு சிறிய விகிதாசாரம் இருக்கின்றது. எனவே, பௌத்த வாக்குகள் 40% விடக் குறைவாகும். கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மைத்திரி பெற்ற 12% வாக்குகளிலும் கணிசமான சிறுபான்மை வாக்குகள் உண்டு.

சுருக்கமாகச் சொல்வதானால் ஐ.தே.க.யின் சுமார் 22% பௌத்த வாக்குகளை கழித்தால் எஞ்சுகின்ற 48% வாக்குகளில் ஜேவிபி கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெற்ற சுமார் 5.5% (5.75 இல் 0.25% சிறுபான்மை என்று வைத்துக் கொள் வோம்) ஐக் கழித்தால் 42.5% வீத பௌத்த வாக்குகளே மஹிந்த மற்றும் மைத்திரியிடம் இருக்கின்றது. இரண்டொரு வீதம் வித்தியாசப்படலாம். எனவே தற்போதுள்ள களநிலவரத்தில் மஹிந்த - மைத்திரி கூட்டு 40% இற்கு குறைவான பௌத்த வாக்குகளையே பெறக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது.

மொத்த சிறுபான்மை வாக்ககள் 30%. அவற்றில் தமிழ் பேசும் வாக்குகள் 25%. இவற்றில் எத்தனை வீதத்தை ஐதேக 22% அடிப்படை பௌத்த வாக்குகளுடன் இணைக்கலாம்? இது தான் வெற்றியாளரைத் தீர்மானிக்கப் போகும் கேள்வியாகும். சிறுபான்மைகள் மீண்டுமொரு முறை ஒன்றுபட்டு எதிராக வாக்களித்தால் மஹிந்த தரப்பு வேட்பாளர் தோல்வியடைவது உறுதி. இந்நிலையில் மீண்டுமொரு முறை ஜனாதிபதியை தீர்மானிக்கும் வாய்ப்பு சிறுபான்மைகளின் கைகளில் இருக்கிறது.

**அதிகப்படியான பௌத்த வாக்குகளை கைகளில் வைத்திருக்கும் மஹிந்த தரப்பு மீண்டுமொரு முறை சிறுபான்மை வாக்குகளை இழக்காமல் இருப்பதற்கு மேற்கொண்டு வரும் உத்திகளை சற்று விளக்க முடியுமா?**

சிறுபான்மை வாக்குத் தொடர்பாக மஹிந்த தரப்பு இரு உத்திகளை கையாள்கிறது. ஒன்று தங்களுக்கு சிறுபான்மை வாக்குகள் கிடைக்காது என்ற மனோநிலையை உடைத்து சிறுபான்மை வாக்கு கிடைக்கும் என்று பெரும்பான்மை மக்களுக்குக் காட்டுவதற்காக முடிந்தளவு முஸ்லிம் கட்சிகள் (பதிவு செய்யப்பட்டதோ, பதிவுசெய்யப்படாததோ மற்றும் அமைப்புகள், புத்திஜீவிகளை இணைத்து அவர்களுடன் ஏதாவது ஒப்பந்தம் செய்வது போல் ஏதோ ஒன்றைச் செய்து சிறுபான்மை வாக்குகள் எங்களுக்கு கிடைக்கும் என்று பெரும்பான்மை சமூகத்தை நம்ப வைக்க முயற்சி நடைபெறுகிறது.

இரண்டு மறுபுறம் ஒரு முஸ்லிம் வேட்பாளரையும் ஒரு தமிழ் வேட்பாளரையும் தனியாக இறக்குதல். இதிலும் வெற்றி பெற்றுள்ளார்கள். இதன் நோக்கம் முடிந்தால் இரண்டாவது வாக்கினூடாக சிறுபான்மை வாக்குகளை முடிந்த அளவு பெற்றுக்கொள்ளல். அல்லது ஆகக் குறைந்தது அடுத்த தரப்புக்கு செல்லும் சிறுபான்மை வாக்குகளைக் குறைத்தல். தமிழ் பேசும் வாக்குகள் 25% இனை ஐ.தே.க.வின் அண்ணளவான பௌத்த வாக்குகள் 22% உடன் இணைத்தால் 47 வீதம் ஆகிவிடும். சிங்கள கிறிஸ்தவ வாக்குகளும் இருக்கின்றன. இந்நிலையில் ஒரு ஒரு 8% சிறுபான்மை வாக்குகள் ஐ.தே.கட்சிக்குத்

(பக்.14)



# எழுவாய், பயமிலை

## பல்லி கொல்லும் பள்ளிகள்

அபூ ஷாமில்

என்னதான் சொன்னாலும் நம்மில் ஜும்ஆ முஸ்லிம்கள் பெருவாரியாக இருப்பது மறுக்க முடியாத விடயம் தான். இரண்டு மாடிப் பள்ளியிலும் இரண்டு ஸப்பு தாண்டாத நிலையில் ஜும்ஆவுக்கு மட்டும் நிரம்பி வழிவதென்றால் ஜும்ஆ முஸ்லிம்களின் பெருக்கத்தை அதிலிருந்து அறிந்து கொள்ளலாம். ஜும்ஆவுக்கு வருபவர்கள் சிலர் கடமையைக் கழிப்பதற்காக வந்தாலும் குத்பாவைக் காது தாழ்த்திக் கேட்பதற்கென்று ஜும்ஆவுக்கு வருபவர்கள் அனேகமானோர் இருக்கிறார்கள்.

குத்பாவுக்கு நேரகாலத்துடன் அனுப்பி தமது பிள்ளைகளைக் குத்பாவைக் கவனமாகக் கேட்க வைக்கும் பெற்றோர்கள் நம்மில் இருக்கிறார்கள் என்பதை சமீபத்தில் பார்க்கக் கிடைத்த முகநூல் பதிவொன்று எடுத்துக் காட்டியது. தனது பிள்ளைகளுக்கு குத்பாவைக் குறிப்பெடுக்கச் சொல்லி வீட்டுக்கு வந்தபின் வீட்டில் உள்ளவர்களுக்கு அதனை எடுத்தோதச் செய்யும் பழக்கம் தனது வீட்டில் இருப்பதாக அவர் அதிலே குறிப்பிட்டிருந்தார்.

பிள்ளைகள் தற்போது தமது பெற்றோர்கள் சொல்வதை விட அடுத்தவர்கள் சொல்வதில் தான் அதிக அக்கறை எடுக்கிறார்கள் என்ற வகையில் தாம் பிள்ளைகளுக்குச் சொல்ல வருகின்ற விடயங்களை அடுத்தவர்கள் வாயிலாகக் கேட்க வைப்பது வெற்றிகரமானதொரு அணுகுமுறைதான். ஆனால் இந்த அவதானம் குத்பா ஓதுபவர்களுக்கு இருக்கிறதா ?

கணவனுக்கும் மனைவிக்கும் சொல்ல வேண்டிய விடயங்களை சிறுவர்களும் கலந்து கொள்ளும் குத்பாக்களில் கொட்டி வைப்பவர்களும் இருக்கிறார்கள். இன்னும் சிலர் தமக்குத் தெரியாத விடயங்களில் எல்லாம், அடுத்தவர்களுக்கும் எதுவும் தெரியாது என்ற பாணியில் உளறிக் கொட்டுகிறார்கள். தாம் கிதாபுகளில் இருந்து அறிந்து கொண்டதையும் பெரியவர்கள் சொன்னதில் அவர்கள் கேட்டதையும் முன்வைப்பவர்களும் நம்மில் இருக்கிறார்கள். சிலர் காலத்துக்குப் பொருந்தாத, சிறுவர்களின் அறிவிலேயே அது பொய்யானது என்று விளங்கக் கூடிய விடயங்களை எத்தி வைக்கிறார்கள்.

சமீபத்தில் சந்தித்த ஒரு பெரியவர் ஜும்ஆவுக்குரிய நேரமாகியும் கதைத்துக் கொண்டிருந்த போது ஜும்ஆவுக்குப் போக வேண்டுமல்லவா என்று கேட்டேன். அதற்கு அவர் நாங்களெல்லாம் நேர காலத்துடன் ஜும்ஆவுக்குப் போவதை விட்டு விட்டோம். அங்கு மிம்பரில் சொல்லுகின்ற பொய்களைக் கேட்க முடியாமல் எனது பிள்ளைகளையும் காலம் தாழ்த்தியே நான் ஜும்ஆவுக்கு அழைத்துச் செல்கிறேன் என்றார். ஏன், என்ன விஷயம் என்று கேட்டதற்கு, பல்லிகளைக் கண்டால் கொல்லும் படி நபிகளார் ஏவியிருப்பதாக கதீப் சொல்கிறார். இப்ராஹிம் நபியை நெருப்பில் போட்டபோது இந்தப் பல்லி நெருப்பை மூட்டுவதற்காக ஊதியதாம். அதனால் நெருப்பு இன்னும் பலமாக எரிந்ததாம். இது சாத்தியமா ? அப்படியே நடந்திருந்தாலும் அந்தப் பல்லியைக் கொல்லுவதை விட்டு விட்டு இன்றுவரையுள்ள எல்லாப் பல்லிகளையும் கொல்வது நியாயமா ? இப்படிக் குத்பாக்களையெல்லாம் நாமும் நமது பிள்ளைகளும் கேட்க வேண்டியதில்லை என்று குத்பாவுக்குப் போகாமல் ஜும்ஆ தொழுகையில் மட்டும் கலந்து கொள்கிறேன் என்று கூறி முடித்தார்.

குத்பாக்களை காது தாழ்த்திக் கேட்பது மட்டுமே சிலருக்கு நல்லுபதேசங்களைக் கேட்பதற்கான வாய்ப்பாக சில சமயங்களில் அமைவதுண்டு. அதனை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு நமது வழிகாட்டிகள் தவறுவார்களானால் பின்னர் சமூகம் கெட்டுக் கிடக்கிறதே என்று கவலைப்படுவது நியாயமில்லை. சில மௌலவிமார்கள் அறியாமையினால் நிகழ்த்துகின்ற குத்பாக்கள் மக்களை குறிப்பாக இளைய தலைமுறையை குத்பாக்களை விட்டும் தூரமாக்கி விடுகின்றன. இது தான் அவர்கள் சன்மார்க்கத்திலிருந்தே தூரமாவதற்கும் காரணமாக அமைந்து விடுகின்றன.

அறிவில் முன்னேறிய நாட்டில் அடுத்த சமூகங்களை அறிவியல் ரீதியாக எதிர்கொள்ள வேண்டிய சிக்கலான சந்தர்ப்பங்கள் பெரும்பாலும் இளைய சமூகத்தினருக்கே வாய்க்கிறது. வெறுமனே மார்க்கக் கடமை என்று சொல்வதற்கப்பால் தர்க்க ரீதியாக மார்க்கத்தின் போதனைகளை முன்வைக்க வேண்டிய நிர்ப்பந்தம் அவர்களுக்கு இருக்கிறது. அறிவியலுக்கான வாயில்கள் எல்லாம் திறந்து விடப்பட்டுள்ள சூழலில் இவற்றுக்கான பதில்களை எங்கிருந்தாவது தேடிப் பெற்றுக் கொள்வதற்கு முயற்சிக்கின்ற இளைஞர்கள் இருக்கிறார்கள். இவர்களின் பார்வையில் இந்த மௌலவிமார்களின் குத்பாக்கள் காலாவதியான பண்டமாகத் தான் தெரிகிறது.

சுமக்க முடியாத வேலைப்பளுக்களுடன் அவசரமாக இயங்கும் இந்த உலகில் இளைஞர்களை ஓரிடத்தில் உட்காரச் செய்து உபந்நியாசமொன்றைக் கேட்க வைப்பதே, ஜும்ஆ கடமை என்ற வகையில் மட்டும் தான் சாத்தியமாகிறது. இந்த வாய்ப்பை சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்வதற்கு நமது வழிகாட்டிகள் தவறினால் அவர்கள் அடுத்த தலைமுறையை தவறாக வழிகாட்டியதற்கு அது சமனாகிறது.

குத்பாக்களுக்கென மிம்பருக்கு வருமுன்னர், தாம் எதனைப் பேசப் போகிறோம் என்பதிலும் பேசப் போகும் விடயத்தில் தனக்குப் போதுமான தகவல்களைத் திரட்டிக் கொள்ள வேண்டும் என்பதிலும் இந்த மௌலவிமார்கள் கட்டாயம் கவனம் செலுத்த வேண்டும். குத்பாக்கள் தொடர்பில் இளைஞர்களிடம் ஏற்பட்டிருக்கின்ற மோசமன பதிவை இனிவரும் மௌலவிமார்களாவது மாற்ற வேண்டும். ஆன்மீகத்துக்கு இஸ்லாத்தையும் அறிவுக்கு நவீன உலகையும் இளைஞர்கள் நம்பியிருக்கும் நிலையை மாற்றி அறிவையும் ஆன்மீகத்தையும் இணைக்கும் வகையில் மௌலவிமார் தங்களைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

அல்லாத பட்சத்தில் குத்பாவுக்கு கதீப் மிம்பருக்கு ஏற முன்னர் மஹ்ஷர் மொழியும் போது சொல்லப்படும் வீண் பேச்சுக்களில் ஒன்றாக குத்பாவும் மாற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கொசோவோ தேர்தலில் சுயநிர்ணயக் கட்சி வெற்றி

2008 இல் சேர்பியாவிலிருந்து பிரிந்து சுதந்திரக் குடியரசாக மாறிய கொசோவோவில் இடம்பெற்ற தேர்தலில் இடதுசாரி சுயநிர்ணயக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. 25 வீதமான வாக்குகளை அக்கட்சி பெற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. ஐரோப்பாவிலுள்ள இளம் நாடான கொசோவோவின் குறுகிய வரலாற்றில் இது நான்காவது தேர்தல் என்பது குறிப்பிடத்தக்கது.

1.7 மில்லியன் மக்களைக் கொண்ட கொசோவோவில் ஒரு மில்லியன் கொசோவோ அல்பேனியர்கள் செல்வாக்குள்ளவர்களாகத் திகழ்கின்றனர். அவர்களே புதிய இடதுசாரி தேசியவாதக் கட்சிக்கு ஆதரவளித்துள்ளனர். அக்கட்சியின் ஸ்தாபகரான 44 வயது மிக்க அல்பின் குர்தி பிரதமராகக் கூடிய வாய்ப்பு உள்ளது.

2005 இல் ஸ்தாபிக்கப்பட்ட இக்கட்சி 2010 ஆம் ஆண்டு முதல் தேர்தல்களில் ஈடுபட்டு வருகின்றது. 2007 இலிருந்து ஒரு கூட்டணி அரசாங்கமே அதிகாரத்தில் இருந்து வந்தது. அதற்கு கொசோவோ ஜனநாயகக் கட்சி தலைமை வகித்து வந்தது. தற்பொது சுயநிர்ணயக் கட்சியே ஆகக் கூடுதலான வாக்குகளைப் பெற்றுள்ளதால் புதியதோர் கூட்டணிக்கு அது தலைமை வகிக்கும் என எதிர்பார்க்கப் படுகிறது.

கிழக்கு ஐரோப்பாவிலுள்ள மிகச் சிறிய முஸ்லிம் நாடாக கொசோவோ விளங்குகின்றது.

# சவூதியின் அவசர CCG கூட்டத்தில் கட்டார் பங்கேற்பு



பயங்கரவாதத்தை எதிர்த்தல் மற்றும் பாதுகாப்புக் கூட்டுறவு என்பன தொடர்பாக அவசரமாக ஏற்பாடு செய்யப்பட்ட வளைகுடா கூட்டமைப்பு சபையின் விசேட கூட்டத்தில் கட்டார் பங்கேற்றது. இக்கூட்டம் சவூதி அறேபியாவில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் எந்தவொரு பாதுகாப்பு அச்சுறுத்தலையும் பயங்கரவாதத் தாக்குதல்களையும் எதிர்கொள்வதற்கு வளைகுடா கூட்டமைப்பு சபையின் இராணுவம் தயாரா உள்ளது என்று கூட்டாக அறிக்கை விட்டுள்ளன.

ரியாதில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கட்டார் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் கலந்துகொண்டமை முக்கிய அம்சமாகும். வ்ளைகுடா கூட்டமைப்பு சபையில் இடம்பெறும் அங்கத்துவ நாடொன்றின் மீது பிற நாடொன்று தாக்குதல் மேற்கொள்ளும்போது அதைக் கூட்டாக எதிர்கொள்வதற்குத் தாம் தயாராக உள்ளோம் என இந்நாடுகள் அறிவித்துள்ளன.

# சர்வதேசப் பார்வை

# உய்குர் முஸ்லிம்கள் தொடர்பில் வொஷிங்டன் கவனம்



சீனாவில் மிகப் பெரும் சிறுபான்மையினராக விளங்கும் உய்குர் முஸ்லிம்களை சீன அரசாங்கம் நடத்தி வரும் முறை குறித்து 28 சீனக் கம்பனிகள் மற்றும் பாதுகாப்பு நிறுவனங்கள் மீது அமெரிக்கா தடை விதித்துள்ளது. அமெரிக்காவின் கறுப்புப் பட்டியலில் இக்கம்பனிகள் சேர்க்கப்பட்டுள்ளன.

அரச நிறுவனங்களும் மேலும் 8 வணிகக் கம்பனிகளும் இப்பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளதாக அமெரிக்க வணிகத் திணைக்களம் அறிவித்துள்ளது. இதில் சீனாவுக்குரிய சில தொழில்நுட்ப நிறுவனங்களும், தொடர்பாடல் கம்பனிகளும் உள்ளடங்குகின்றன. உய்குர் சிறுபான்மை சமூகத்திற்கு எதிராக கடந்த சில ஆண்டுகளாக சீனா அரசாங்கம் மேற்கொண்டு வரும் மனித உரிமை மீறல்களுக்குக் கண்டனம் தெரிவிக்கும் முகமாகவே அமெரிக்க வணிகத் திணைக்களம் இந்நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# ஹொங்கொங்கில் தொடர்ந்தும் வன்முறைசார் ஆர்ப்பாட்டங்கள்




ஹொங்கொங் அரசாங்கத்திற்கு எதிராக சிவிலியன்கள் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் ஆர்ப்பாட்டங்களும் மறியல் போராட்டங்களும் நிறைவடைந்துள்ளதாக அரசாங்கம் தெரிவிக்கின்ற போதும் கடந்த சில நாட்களாக ஆர்ப்பாட்டங்கள் வன்முறை வடிவம் பெற்று வருவதாக அந்நாட்டின் தனியார் ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஹொங்கொங் பிரதமர், நாட்டில் தற்போது அமைதி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்து சில மணித்தியாலங்களில் அவசரகாலச் சட்டம் பிறப்பிக்கும் அளவுக்கு வன்முறைகள் வெடித்தன. ஹொங்கொங் அரசாங்கம் சீனாவில் உதவியைக் கோரும் அளவுக்கு நிலைமை கட்டுக்கடங்காமல் எல்லை மீறிச் சென்றதாக வெளிநாட்டுச் செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

ஹொங்கொங்கில் கொண்டுவரப்பட்ட சட்டங்களை எதிர்த்தே மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

# மாலாவி ஜனாதிபதித் தேர்தல் குளறுபடிகளை நிராகரிக்கிறார்



சமீபத்தில் மாலாவியின் ஜனாதிபதியாகத் தெரிவான பீட்டர் முதாரிக்கா தேர்தலின் பொழுது நிகழ்ந்த வாக்கு மோசடிகள் மற்றும் ஆள்மாறாட்டங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை நிராகரித்துள்ளார். 2014 ஆம் ஆண்டிலிருந்து மிகச் சிறிய ஆபிரிக்க நாடான மாலாவியின் ஜனாதிபதியாக பீட்டர் முதாரிக்கா இருந்து வருகின்றார்.

சட்டத்தரணியாககவும் பேராசியரியராகவும் விளங்கும் முதாரிக்கா, இரண்டாவது தடவையும் இவ்வருட ஆரம்பத்தில் ஜனாதிபதித் தேர்தலில் குதித்து வெற்றி பெற்றார். ஆயினும் தேர்தல் வாக்கு மோசடி நடந்தே முதாரிக்கா ஜனாதிபதி ஆனார் என எதிர்க்கட்சிகள் கூறி வருகின்றன. இதனால் உயர் நீதிமன்றம் தேர்தல் முடிவுகள் வெளியிடப்படுவதை தற்காலிகமாக நிறுத்தியிருந்தது.

ஏற்கனவே தேர்தல் ஆணைக்குழு 79 வயதான பீட்டர் முதாரிக்காவே தேர்தலில் வெற்றி பெற்றதாக அறிவித்திருந்த போதும் தேர்தல் ஆணைக்குழுவின் முடிவை எதிர்த்து மக்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வந்தனர். உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்கு பொலிசார் கண்ணீர் தாரையையும் கண்ணீர்ப் புகையையும் பயன்படுத்தியமை நாட்டில் மிகப் பெரிய அரசியல் கொந்தளிப்பைத் தோற்றுவித்தது.

தற்போது நீதிமன்ற ஆணையின்படி முதாரிக்கா இரண்டாவது பதவிக் காலத்தை ஆரம்பித்துள்ள போதும் ஊழல், வறுமை மற்றும் சுகாதாரத் துறை தொடர்பான பல்வேறு சவால்களை அவர் எதிர்நோக்கியிருப்பதாகக் கூறப்படுகின்றது.

சமீபத்தில் அல் ஜஸீராவின் நேர்காணல் ஒன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிட்ட அவர், அவரது அரசாங்கத்திற்கு எதிராக உள்ள அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் மறுத்துள்ளார்.

# ஈராக்கிய ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது காவல் துறையினர் தாக்குதல்



ஈராக்கில் கடந்த ஒரு வாரமாக அதிகாரத்திலுள்ள அரசாங்கம் எதிர்க்கட்சிகளை அங்கீகரிக்க வேண்டும் எனக் கோரி ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. அரசியல் அமைப்பில் மாற்றங்கள் வேண்டும் என்று அரசியல் கட்சிகளும் பொதுமக்களும் இணைந்து கலகம் விளைவித்து வருகின்றனர்.

ஆர்ப்பாட்டங்காரர்கள் மீது இராணுவம் மேற்கொண்ட தாக்குதலில் பலர் கொல்லப்பட்டுள்ளனர். தலைநகர் பக்தாதிலும் புறநகர்ப் பகுதியிலும் ஒரு வாரத்திற்கு மேலாக நடைபெற்ற வரும் ஆர்ப்பாட்டங்களில் கலந்துகொள்வோர் தொகை அன்றாடம் அதிகரித்து வருகின்றது. நாட்டிலுள்ள சர்வதிகார ஆட்சி நீக்கப்பட வேண்டும் என்பதே ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கையாகும். இதனால், ஈராக்கின் பாதுகாப்புச் சூழல் பின்னடைந்துள்ளது.

அரசியலமைப்பு மற்றும் தேர்தல் முறைமைகளில் நிலவிய கோளாறுகள் இதுவரை சீர்செய்யப்படவில்லை. சர்வதிகாரம் தலைதூக்கியுள்ளது. வழமை நிலை படிப்படியாகத் திரும்பி வந்தபோதும் மக்களின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சி கண்டுள்ளது. சத்தாமின் சர்வதிகார ஆட்சியை ஒத்த புதியதொரு சர்வதிகாரம் நாட்டில் தலைதுாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஐசிஸ் பயங்கரவாதம், சிவில் யுத்தம், குற்றச் செயல்கள் என்பன பெருமளவு ஒழிக்கப்பட்டுள்ளபோதும் ஈராக்கில் ஜனநாயக ஆட்சி முறையொன்று மலரவில்லை என எதிர்ப்பாளர்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

# மாணவர் கொலைக்கு எதிராக பங்களாதேஷில் மக்கள் கிளர்வு



பல்கலைக்கழக மாணவர் ஒருவர் ஆளுங் கட்சி அரசாங்கத்தினால் திட்டமிட்டுக் கொல்லப்பட்டதை அடுத்து அந்நாட்டில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டுள்ளது. தலைநகர் டாக்காவிலும் ராஜாஷியிலும், பல்லாயிரக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் ஆளும் அரசாங்கத்திற்கு எதிராகவே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

21 வயதான அப்ரார் பஹாத், பங்களாதேஷின் எந்திரவியல் மற்றும் பொறியியல் பல்கலைக்கழகத்தில் கற்று வந்தவர். இந்தியாவுடன் பங்களாதேஷ் அரசு சமீபத்தில் மேற்கொண்ட நீர்ப் பகிரும் உடன்படிக்கைக்கு எதிராக முகநூலில் விமர்சனங்களை வெளியிட்டார் என்பதற்காக ஷெக் ஹஸீனாவின் அதிகாரிகளால் திட்டமிட்டு கொலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வாரம் பிரதமர் ஹஸீனா இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டபோது பல்வேறு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. நீர்ப் பகிரும் உடன்படிக்கையும் ஒன்றாகும். நதி நீரைப் பகிர்ந்துகொள்வது தொடர்பில் இரு நாடுகளுக்கும் இடையில் நீண்டகாலமாக பிணக்குகள் நிலவி வந்தன. ஆனால் இது தொடர் பான விமர்சனம் வெளியிட்டமைக்காக தனது அப்பாவி மகன் கொல்லப்பட் டமை முற்றிலும் அநியாயமானது என பஹாதின் தந்தை பரகதுல்லாஹ் தெரி வித்தார்.

''எனது மகன் ஒரு அப்பாவி. அவன் ஹஸீனாவின் கொள்கைகளை எதிர்க்கின்றவன். அதனால்தான் அவன் திட்டமிட்டுக் கொல்லப்பட்டுள்ளான்'' எனத் தெரிவித்துள்ளார். ஷெய்க் ஹஸீனா நவீன பங்களாதேஷின் சர்வதியாரியாகவே தன்னை மாற்றியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரிய நெருக்கடியில் குர்திஷ் பரிமாணம்

• கலாநிதி றவூப் ஸெய்ன்

வடகிழக்கு சிரியாவிலிருந்து அமெரிக்கத் துருப்பினர் கடந்த வாரம் வெளியேறியமை அப்பிராந்தியத்தின் மீது துருக்கியின் இராணுவ நடவடிக்கைகளுக்கு வழிகோலியுள்ளது. தற்போது YPG என அழைக்கப்படும் குர்திஷ் படையினரின் கட்டுப்பாட்டில் இருக்கும் கிழக்கு யூப்ரடீஸ் பகுதியிலேயே அமெரிக்கப் படையினர் நிலைகொண்டிருந்தனர். இப்போது அமெரிக்கப் படையினர் வெளியேறியுள்ளதால் இப்பிராந்தியத்தின் மீது திட்டமிட்டவாறு இராணுவ நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும் என்று துருக்கி ஜனாதிபதி அர்துகான் தெரிவித்துள்ளார்.

YPG படையினர் ஐ.எஸ்ஸிற்கு எதிராகப் போராடி வருவதாக அறிவித்த வொஷிங்டன், குர்திஷ் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவளித்து களத்தில் இறங்கியது. யூப்ரடீஸ் நதியை அண்டியுள்ள மன்பிஜ் நகரிலிருந்து அமெரிக்கப் படையினர் வெளியேறுவது குறித்து வொஷிங்டன் மற்றும் அங்காராவுக்கு இடையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளை அடுத்தே அமெரிக்கப் படை வெளியேறியுள்ளது.

சிரிய -துருக்கி எல்லையில் வடகிழக்கு சிரியாவை அண்டி 32 கி.மீ. பரப்பளவான பாதுகாப்பு வலயமொன்றை உருவாக்கப் போவதாக துருக்கி அறிவித்துள்ளது. இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளதாகவும் அங்காரா கூறுகின்றது. குர்திஷ் மக்கள் பாதுகாப்பு அமைப்பு என அர்த்தப்படும் YPG ஆயுத இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதற்கு துருக்கியப் படையினருக்கு இதன் மூலம் வாய்ப்பு வழங்கப்படுகின்றது. அதேவேளை, சிரிய அகதிகள் மீளத் திரும்புவதற்கான சூழ்நிலைகளை உருவாக்குவதும் இரண்டாவது நோக்கம் என்று அங்காரா அறிவித்துள்ளது.

2011 ஆம் ஆண்டிலிருந்து சிரியாவில் ஏற்பட்ட அறபு வசந்தத்தைத் தொடர்ந்து சிரியா பல்வேறு இராணுவக் குழுக்களின் ஆடுகளமாக மாற்றப்பட்டது. சுதந்திர சிரிய இராணும் (Free Syrian Army) என்பதே பஷ்ஷார் அல் அஸதுக்கு எதிராக ஆயுதம் தரித்த முதல் விடுதலை இயக்கமாகும். இதற்கு அங்காரா ஆதரவளித்து வருகின்றது. இவர்களை எதிர்த்து ஈரானின் ஆதரவுடனும் ஹிஸ்புல்லாஹ்வின் ஆதரவுடனும் அஸதின் அரசாங்கப் படையினர் போராடி வருகின்றனர்.

இதேவேளை, சிரிய ஜனநாயகப் படை எனப்படும் ஓர் இயக்கத்திற்கு வொஷிங்டன் ஆதரவளித்து வருகின்றது. இதன் இராணுவப் பிரிவே YPG என அழைக்கப்படுகின்றது. Kurdish People's Protection Units என்பதன் குர்திஷ் மொழியிலான சுருக்க வடிவமே YPG எனப்படுகின்றது. இந்த இராணுவ அமைப்பு குர்திஷ் தொழிலாளர் கட்சியின் கிளை என்று அங்காரா கருதுகின்றது.

குர்திஷ் தொழிலாளர் கட்சி 40 வருடங்களுக்கு மேலாக குர்திஷ் மக்களுக்கு சுதந்திர குர்திஷ்தான் ஒன்றை வேண்டி ஆயுதமேந்திப் போராடி வருகின்றது. இதற்கு அப்துல்லாஹ் ஒகலான் என்பவர் தலைமை வகிக்கின்றார். துருக்கி இவ்வமைப்பை கடுமையாக எதிர்த்து நிற்கின்றது. துருக்கியின் ஒரு பகுதியை வடகிழக்கு சிரியாவுடன் இணைத்து குர்திஷ் நாடொன்றை உருவாக்கிக் கொள்ள ஆயுத முனையில் போராடி வரும் YPG இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதே அர்துகானின் நோக்கமாக உள்ளது. இவ்வியக்கத்தை அங்காரா 'பிரிவினைவாதப் பயங்கரவாதிகள்' என்று வர்ணித்து வருகின்றது.

சிரியாவில் அரசியல் நெருக்கடி 2011 இல் மக்கள் புரட்சியாக வெடித்தது. அரசுககு எதிராக ஆயுதம் தரித்தவர்கள் ஆட்சி மாற்றமொன்றை வேண்டி நிற்கின்றனர். இப்போராட்டத்தில் அரசாங்கத்துடன் ஈரானிய அரச படையினரும் லெபனானின் ஹிஸ்புல்லாஹ் இயக்கமும் கைகோர்த்துள்ளது. எதிர்த்துப் போராடுகின்றவர்களின் அணியில் சிரிய சுதந்திர இராணுவமும், ஜப்ஹதுந் நுஸ்ரா போன்றனவும் இயங்குகின்றன.

இதற்கு அப்பால் ஐசிஸ் எனப்படும் பயங்கரவாத அமைப்பு வடக்கு கிழக்கு சிரியாவிலே தோற்றம் பெற்றது. அது மறைமுகமாக சிரிய அரசாங்கத்திற்கு ஆதரவாகவே போராடி வருவதால் இஸ்லாமியவாதிகளை ஒழித்துக் கட்டுவதற்குப் பயன்படுத்தப்படுகின்றது.

இன்னொரு புறம் சிரியாவின் இந்த பல்முனை நெருக்கடிகளையும் ஆயுதப் போராட்டங்களையும் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள விரும்பிய, அந்நாட்டில் சிறுபான்மையாக வாழும் குர்திஷ்கள் ஐசிஸ் பயங்கரவாதத்திற்கு எதிராக ஆயுதம்' தூக்கினோம் என்ற போர்வையில் அவர்களின் நீண்டநாள் கனவாக உள்ள சுதந்திர குர்திஷ்தானுக்கான போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர். இவர்களுக்கு வொஷிங்டன் ஆயுத மற்றும் நிதி ஆதரவு வழங்குவதன் மூலம் அவர்களது பிரிவினைவாதப் போராட்டத்தை ஊக்குவிக்கின்றது.

வடகிழக்கு சிரியாவில் அமெரிக்க இராணுவம் நிலைகொண்டபோது ஐசிஸ் பயங்கரவாதத்திற்கு எதிரான YPG இன் இராணுவ நடவடிக்கைகளுக்கு பக்க பலமாகவே தமது படைகள் அங்கு நிறுத்தப்பட்டுள்ளன என்று ட்ரம்ப் நியாயப்படுத்தினார். ஆனால், அவரது உள் நோக்கமோ வேறு. இதனைப் புரிந்து கொண்ட அங்காரா ராஜாதந்திர ரீதியில் வொஷிங்டனுடன் பேச்சுவார்த்தை நடத்தி, யூப்ரடீஸ் நதியை அண்டியிலுள்ள கிழக்குப் பகுதியிலிருந்து அமெரிக்கத் துருப்பினர் வெளியேறுவதற்கான அழுத்தங்களைக் கொடுத்தது. தற்போது அமெரிக்கப் படை வெளியேறியுள்ளதால் YPG ஐ இலக்கு வைக்கும் அங்காராவின் இராணுவ நடவடிக்கை சாத்தியமாகியுள்ளது. ஆனால், இதன் பொருளாதார, அரசியல் மற்றும் மனிதாபிமான விளைவுகள் என்னவாகப் போகின்றன என்பது சிக்கலான கேள்வியாகும்.

ஏலவே, 7 வருட சிவில் யுத்தத்தினால் சிரியாவின் மக்கள் தொகையில் 6 இலட்சம் சிவிலியன்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர். நாட்டின் கீழ்க் கட்டுமானம் முழுவதும் சிதைந்து போயுள்ளது. இஸ்லாமிய நாகரிக, வரலாற்று முதுசங்கள் திட்டமிட்டு அழிக்கப்பட்டுள்ளன. மக்களில் கணிசமான தொகையினர் உள்நாட்டில் அகதிகளாய் இடம்பெயர்ந்துள்ளனர். மில்லியன் கணக்கானோர் நாட்டை விட்டு அகதிகளாய் வெளியேறியுள்ளனர். எஞ்சியுள்ளவர்கள் பட்டினியையும் பசியையும் எதிர்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் போர் முனை ஒன்று புதிதாக உருவாக்கப்படுவதால் வடகிழக்கு சிரியாவில் மிகப் பெரும் மனிதாபிமான நெருக்கடியொன்று தலைதூக்கலாம் என்று எச்சரிக்கப்படுகின்றது. ஆயினும், துருக்கி தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருப்பதற்குக் காரணம் என்ன? YPG யின் இராணுவ முன்னேற்றத்தை துருக்கி அச்சுறுத்தலாகக் கருதுவது ஏன்? சிரிய-துருக்கி எல்லைப் பகுதியில் போரில்லாத வலயமொன்றை உருவாக்க விளைவதேன்? துருக்கிக்கும் சிரியாவுக்கும் குர்திஷ்களுக்கும் இடையிலான அரசியல் வரலாற்று உறவு எத்தகையது? குர்திஷ்கள் யார்? அவர்கள் கோருவது என்ன? இந்தக் கேள்விகள் மிக விரிவான ஒரு கட்டுரையை வேண்டி நிற்கின்றது. எனினும் சிரியாவின் குர்திஷ் பரிமாணத்தை விளக்க இக்கட்டுரை முயல்கின்றது.

குர்திஷ்கள் சமயத்தில் இஸ்லாமியர்கள். எனினும், பல நூற்றாண்டு கால பூர்வீகத்தையும் வரலாற்றையும் கொண்டவர்கள். அவர்களுக்கு தனித்துவமான மொழியும் பண்பாடும் உள்ளது. நீண்ட காலமாக மத்தியாசிய மற்றும் கவ்காசிய பிராந்தியங்களில் ஒருங்கிணைந்த ஒரு சுதந்திரக் குடியரசை குர்திஷ்கள் கொண்டிருந்ததாக சில வரலாற்றாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். இப்பிராந்தியங்களில் உள்ள ஈரான், ஈராக், சிரியா, துருக்கி ஆகிய நான்கு நாடுகளின் எல்லைப் புறங்களிலேயே இன்று குர்திஷ் மக்கள் செறிவாக வாழ்கின்றனர். அவற்றை தனியே பிரித்தெடுத்து, ஒரு சுதந்திர குர்திஷ் தேசத்தை உருவாக்க வேண்டும் என்ற கோரிக்கை முன்வைக்கப்பட்டு ஐந்து தசாப்தங்கள் கடந்து விட்டன.

கவ்காஸஸை அண்டியுள்ள ஆர்மேனியா, ஜியோஜியா, ரஷ்யா ஆகிய நாடுகளிலும் குர்திஷ்கள் குறிப்பிட்ட தொகையில் வாழ்கின்றனர். ஆர்மேனியாவில் 37,470 குர்திஷ்களும் ஜியோஜியாவில் 20,743 பேரும் ரஷ்யாவில் 63,818 குர்திஷ்களும் உள்ளனர். இது தவிர ஐரோப்பிய ஒன்றிய நாடுகளிலும் வட அமெரிக்காவிலும் அவுஸ்திரேலியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளிலும் குர்திஷ்கள் சிறுபான்மையாக உள்ளனர். மேலே குறிப்பிட்ட ஈரான், ஈராக், சரியா, துருக்கி தவிர லெபானில் 124,000 குர்திஷ்களும் ஆப்கானிஸ்தானில் 50,000 இற்கும் அதிகமான குர்திஷ்களும் வாழ்கின்றனர்.

ஷா பஹ்லவியின் ஆட்சிக் காலத்தில் அதிகாரப் பரவலாக்கத்தை வேண்டி நின்ற குர்திஷ் மக்கள் கடுமையாக ஒடுக்கப்பட்டு அமைதிப்படுத்தப்பட்டனர். அதன் பின்னர் குர்திஷ்கள் ஈரானில் கிளரவில்லை. சத்தாம் அதிகாரத்தில் இருந்த 23 ஆண்டுகளில் ஈராக்கிய குர்திஷ்கள் மீது பல்வகையான அடக்கு முறைகள் கட்டவிழ்க்கப்பட்டன. குர்திஷ் மொழியையும் கலாசாரத்தையும் இல்லாதொழிப்பதற்கு சத்தாம் மிகப் பெரும் அரசியல் வேலைத்திட்டமொன்றை முன்னெடுத்தார். அதில் அறபு மயமாக்கல் முக்கியமானது. குர்திஷ்களின் மொழியை அறபாக்கிவிட்டால் தனித்துவ அடையாளம் இல்லாமல் போய்விடும் என சத்தாம் கருதியிருக்கலாம். குர்திஷ்களின் சுதந்திர விடுதலைக் குரல் ஓங்கி ஒலித்த போது சத்தாம் அவர்கள் மீது இரசாயன ஆயுதங்களைப் பிரயோகித்தார். பல்லாயிரக்கணக்கான குர்திஷ் அப்பாவி மக்கள் இவ்வாறு கொன்று தீர்க்கப்பட்டனர். ஆனால், அவர்களின் சுதந்திரத் தாகம் தணியவில்லை.

ஈராக்கின் மொத்த சனத்தொகையில் 17%மானவர்கள் குர்திஷ்கள். வடக்கு ஈராக்கின் 3 மாகாணங்களில் அவர்களே பெரும்பான்மையினர். அதை அவர்கள் ஈராக்கிய குர்திஷ்தான் என்றே அழைக்கின்றனர். கிர்குக், மொஸூல் கனாஜின் என்பவற்றில் செறிவாக உள்ளனர். 10 ஆண்டுகால அமெரிக்க இராணுவ பிரசன்னத்தின் பின்னர் வடக்கு ஈராக்கில் கிர்குக்கை தலைநகராகக் கொண்ட குர்திஷ்தான் சுயாட்சிப் பிராந்தியம் உருவாக்கப்பட்டது.

ஜலால் தலபானி, மஸ்ஊத் பர்ஸானி ஆகிய மதச்சார் பற்ற தலைவர்களின் கைகளில் இந்த சுயாட்சி வழங்கப்பட்டு இன்று ஈராக்கின் செறிவான எண்ணெய் வயல்கள் நிறைந்த வடக்குப் பிராந்தியம் சுமாராக ஒரு சுதந்திர குர்திஷ்தானாகவே இயங்குகின்றது. வொஷிங்டனும் டெல்அவிவ்வும் இந்த ஆட்சியாளர்களைக் கட்டுப்படுத்தி வருகின்றன.

குர்திஷ்கள் வாழும் இன்னொரு முக்கிய நாடு துருக்கி. துருக்கியின் 73 மில்லியன் மக்களில் 11.4 மில்லியன் மக்கள் குர்திஷ்கள் என கணிக்கப்பட்டுள்ளது. இன்னொரு தகவலின் படி அவர்களின் வீதாசாரம் 14 ஆகும். ஆயினும், குர்திஷ் சமூகம் தாம் துருக்கியில் 15 வீதம் என வாதிக்கின்றனர்.

'கிழக்கு அனடோலியா, தென்கிழக்குப் பிராந்தியம், மற்றும் வடக்கு குர்திஷ்தான் எனப்படும் துருக்கிய பிராந்தியங்களில் குர்திஷ்கள் செறிவாக வாழ்கின்றனர். இவர்களின் ஆயுதம் தரித்த ஓர் இயக்கமே குர்திஷ் தொழிலாளர் கட்சியாகும். கடந்த 4 தசாப்தங்களாக அரசியல் ரீதியிலும் ஆயுத ரீதியிலும் இவர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்துப் போராடி வருகின்றனர்.

அரசியல் ரீதியிலும் அபிவிருத்தி ரீதியிலும் தாம் ஒடுக்கப்படுவதாக குற்றம் சாட்டி வரும் இவர்கள், முன்னாள் பிரதமர் நஜ்முதீன் அர்பகானின் ஆட்சிக் காலத்தில் அரசியல் பேச்சுவார்த்தை மேசைக்கு அழைக்கப்பட்டனர். அர்பகான் குர்திஷ்களின் கோரிக்கையை கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டார். இராணுவ மோதலைத் தவிர்த்து சமாதான அடிப்படையில் குர்திஷ்களுக்கு அதிகாரத்தைப் பரவலாக்கும் செயல்முறையை அர்பகான் ஆரம்பித்து வைத்தார். ஆனால் அவர் எதிர்கொண்ட உள்ளூர் அரசியல் நெருக்குவாரங்களும் பின்னர் அவரது மரணமும் இம்முயற்சிகளை முடக்கி விட்டன.

தற்போது துருக்கியின் தொழிலாளர் கட்சியுடன் சிரியாவின் YPG இயக்கமும் இணைந்து பலம் பெற்று வருவதானது துருக்கியின் ஆள்புல ஒருமைப்பாட்டிற்கும் தேசிய இறைமைக்கும் விடுக்கப்படும் அச்சுறுத்தலாகவே அர்துகானால் பார்க்கப்படடுகின்றது. துருக்கி போன்றே சிரியாவும் குர்திஷ்கள் குறிப்பிட்டளவு சிறுபான்மையாக வாழும் நாடாகும். அங்கு மொத்த சனத்தொகையில் அவர்கள் 9 வீதம் எனக் கூறப்படுகின்றது. துருக்கி போன்று அரசாங்கத்தினால் புறக்கணிக்கப்படுகின்ற, பாகுபாட்டிற்கு உட்படுகின்ற சிறுபான்மைச் சமூகமே குர்திஷ்கள் என அவர்க்ள் கருதுகின்றனர்.

சிரியாவில் வடக்கு, வடகிழக்குப் பிராந்தியங்களில் குர்திஷ்கள் செறிவாக வாழ்கின்றனர். ஹஸாகா மாகாணத்தில் பெரும்பாலான பகுதி குர்திஷ்களைக் கொண்ட மாகாணமாகும். அதில் ஐனுல் அறப், கமீஷி, ஹஸாகா, அப்ரின் போன்ற நகரங்களில் வாழ்கின்றனர். ஈராக்கிலுள்ள குர்திஷ்கள் சுயாட்சி பெற்றது போன்று சிரியாவிலுள்ள குர்திஷ்களும் அரசியல் சுயாட்சியை கோரி வருகின்றனர். YPG இயக்கம் இக்கோரிக்கையை முன்னிறுத்தியே ஆயுதப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றது. சிரியாவின் சிவில் யுத்தத்தைத் தொடர்ந்து உருவாகியுள்ள நெருக்கடியான நிலைமையை குர்திஷ்கள் தமக்கு சாதகமாகப் பயன்படுத்த முனைகின்றனர். அங்காராவின் கருத்தில் ஈராக்கிய குர்திஷ்கள் சுயாட்சியுடன் திருப்பதியடைந்து விட்டனர். ஈரானில் கொரஸான் மற்றும் ஹமதான் பகுதிகளில் உள்ள 7 மில்லியன் குர்திஷ்கள் அமைதியாக உள்ளனர்.

துருக்கியிலும் சிரியாவிலும் உள்ள குர்திஷ்களே தற்போது அதிகாரப் பரவலாக்கத்தையும் சுயாட்சியையும் முன்னிறுத்தி அரசியல் மற்றும் ஆயுதப் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அங்காரா குர்திஷ்களின் இந்த எழுச்சியை பெரும் அச்சுறுத்தலாகப் பார்க்கின்றது. அதன் விளைவாகவே வட கிழக்கு சிரியா மீது YPG நிலைகொண்டுள்ள பகுதிகளில் இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப் போவதாகச் சூளுரைத்துள்ளது.

துருக்கியின் நகர்வு குறித்து வொஷிங்டன் எச்சரிக்கை விடுத்துள்ளது. ஏற்கனவே கைதுசெய்யப்பட்ட ஐசிஸ் பயங்கரவாதிகள் YPG யின் கட்டுப்பாட்டில் உள்ளனர் என்றும் அவர்கள் விடுதலை செய்யப்படக் கூடாது எனவும் அங்காரா இராணுவ நடவடிக்கைகளுக்கான எல்லைகளை வகுத்துக் கொள்ள வேண்டும் எனவும் ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

எவ்வாறாயினும், வடகிழக்கு சிரியா மீது அங்காரா மேற்கொள்ளும் தாக்குதல்களுக்கு ஒரு மோசமான அரசியல், பொருளாதார விளைவு இருக்கவே செய்கின்றது.












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "பொதுவான சட்ட ஒழுங்கே நாட்டிற்கு தேவைப்படுகின்றது"



**சட்டத்தரணி லயனல் பெரேரா**

வெவ்வேறான சட்ட திட்டங்கள் நீக்கப்பட்டு அதற்குப்பகரமாக எல்லோருக்கும் பொதுவான சட்ட ஒழுங்கே நாட்டிற்கு தேவைப்படுகின்றது. ஒரே நாடு ஒரே சட்டம் என்னும் கொள்கையுடன் செயற்படுவோமேயானால் எந்தவொரு பயங்கரவாதச் செயற்பாட்டிற்கும் நாட்டில் தலைவிரித்தாட முடியாமல் போகும். பெரும்பாலான மக்களின் விருப்பமாக இருப்பதும் இந்தச் சட்டமாகும்.

நாம் மலைநாட்டைச் சேர்ந்தவராக இருக்க முடியும். கீழ்நாட்டை சேர்ந்தவராகவும் இருக்க முடியும். நாம் தேசவழமைச் சட்டத்தால் பிரிந்திருக்க முடியும். முஸ்லிம் தனியார் சட்டத்தின் மூலம் பிரிந்திருக்கவும் முடியும். இவ்வெல்லாச் சட்டங்களையும் ஒருபுறம் தள்ளிவிட்டு இலங்கையர்கள் என்ற வகையில் கதைக்க முடியுமான வகையில் அரசியலமைப்பொன்றை உருவாக்கி அந்தச் சட்ட ஒழுங்கின் கீழ் செயற்பட்டால் மாத்திரமே எம் முன்னால் உள்ள பிரச்சினைகள் பலவற்றுக்கு தீர்வு காண முடியும்.

நாம் 30 வருடகால யுத்தத்திற்கு முகம் கொடுத்தோம். நாம் எமது வளங்களை சரியாக பயன்படுத்தாமல் அதிகார மோகம் படைத்த அரசியல்வாதிகள் சிங்கள மொழி மாத்திரம் தான் என்னும் சட்டத்தை நிறைவேற்றி இனவாத யுத்தத்திற்கு வழி சமைத்து வந்தோம். நாம் அவ்வாறு ஏற்படுத்திய சூழலே இன்றைய 21/4 தாக்குதலும் நாட்டில் உருவாகக் காரணமாய் அமைந்தது. நாம் நாட்டை முதன்மைப்படுத்தி சிந்திக்க வேண்டும். ஒவ்வொரு இனத்தவர்களும் திருமணம் முடிக்கும் போது வெவ்வேறு வயதுகளில் திருமணம் முடிப்பதையும் காணிச் சட்டங்களின் போது வேறுபாடுகள் பேணுவதையும் நிறுத்துவோம். திருமணத்திற்கு பொதுவான வயதை நிர்ணயிப்போம்.

ஒவ்வொரு மதத்தவர்களுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட உடைகளுக்கு பதிலாக இலங்கையர்கள் என்கின்ற அடையாளத்துடன் கூடிய ஆடைகளை உருவாக்கிக் கொள்வோம். நாம் இலங்கையர்கள் என்னும் கலாசாரத்தை முன்கொண்டு செல்ல வேண்டும். அதற்கான சட்டங்களையே நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும். இது தொடர்பில் மக்களுக்கு மத்தியிலும் விழிப்புணர்வு ஏற்பட்டிருக்கிறது. மக்களுடைய இந்தத் தேவையை நாம் பயன்படுத்தா விட்டால் நாம் இந்த நாட்டிற்கு மிகப் பெரும் அழிவையே செய்கின்றோம்.

## "வேறுபட்ட சட்ட ஒழுங்கை கொண்டிருப்பது ஒரு நாடு, ஒரு சட்டம் என்ற கருத்திற்கு எதிரானது எனக்கொள்ளத் தேவையில்லை."

**சட்டத்தரணி சம்முகம் சிதம்பரம்,**
மேல் நீதிமன்றம், யாழ்ப்பாணம்

ஒரு நாடு ஒரு சட்டம் என்பது நல்லதொரு அழகான கோஷம் என்பதில் சந்தேகமில்லை. ஒரு நாட்டின் அனைத்து சமூகங்களும் இணக்கப்பாட்டுடன் வாழ்வதில் அதற்கு ஒரு பங்களிப்பு இருக்கிறது என்பதிலும் சந்தேகமில்லை.

இலங்கையின் சகல சமூகங்களும் இவ்



வாறான தொரு ஒருமைப்பாட்டுக்கு வர வேண்டும் என்பது ஒரு பெரிய எதிர்பார்ப்பாகும். எனினும் ஒவ்வொரு சமூகத்திற்கும் சில விஷேட கலாசார, மார்க்க ஒழுங்குகள் உள்ளன என்பதையும் யாரும் மறுப்பதில்லை. பல சமூகங்களும் நாடுகளும் இந்த உண்மையை ஏற்று அங்கீகரிக்கின்றன. இந்தப் பின்னணியில் பல்வேறு விஷேட சட்ட நகல்கள் நோக்கப்பட வேண்டும்.

இந்தவகையில் கண்டியச் சட்டம், தேசவழமைச் சட்டம், முஸ்லிம் விவாக விவாகரத்துச் சட்டம் என்ற சில விஷேட சட்ட ஒழுங்குகள் இலங்கையில் காணப்படுகின்றன. நிறைய நாடுகள் சமூகங்களின் விஷேட மத கலாசார ஒழுங்குகளைக் கவனத்திற் கொண்டு த்னிச் சட்டங்களை ஆக்கிக்கொடுத்துள்ளன.

''தனியார் சட்ட ஒழுங்கிற்கேற்ப கிறிஸ்தவர்களின் உரிமைகளும் கடமைகளும்'' என்ற நூலை ஆக்கிய கலாநிதி பஸ்ஸாம் ஷஹாதீத் என்ற கிறிஸ்தவ ஆய்வாளரின் நூல் அறபுலகின் கிறிஸ்தவ சட்ட ஒழுங்குகளை ஆராய்கிறது.

இந்தியாவில் முஸ்லிம்களுக்கென தனியான முஸ்லிம் தனியார் சட்ட ஒழுங்கு காணப்படுகிறது. அவ்வாறே பிலிப்பைன்ஸிலும் முஸ்லிம் தனியார் சட்ட ஒழுங்குக்கு இடமளிக்கப்பட்டுள்ளதாக 1973 பிலிப்பைன்ஸ் அரசியலமைப்பு கூறுகிறது. இந்நிலையில் இலங்கையும் அவ்வாறானதொரு சட்ட ஒழுங்கைக் கொண்டிருப்பது ஒரு நாடு, ஒரு சட்டம் என்ற கருத்திற்கு எதிரானது எனக் கொள்ளத் தேவையில்லை. அது அடுத்த சமூகங்களின் தனித்துவங்களை அனுமதித்த சிறியதொரு விதிவிலக்கு என்றே கொள்ளப்பட வேண்டும்.

# ஒரே நாடு, ஒரே சட்டம்

# பற்றிய எண்ணக்கருக்கள்

தொகுப்பு: ஹெட்டி ரம்ஸி

ஒரே நாடு, ஒரே சட்டம் என்ற கோஷம் நாட்டில் தற்பொழுது பரவலாகப் பேசப்பட்டு வருகிறது. பல்லின மக்கள் வாழும் நாட்டில் ஒவ்வொரு சமூகமும் தனித்தனியாக தமது உரிமைகளை அனுபவித்து வந்த நிலை இதனால் இல்லாமல் போகிறது என்ற வாதம் ஒரு புறமும், நாட்டின் நலனுக்கு ஒரே சட்டம் இருப்பதே பொருத்தமானது என்ற வாதம் ஒருபுறமுமாக இந்த விவகாரம் அலசப்படுகிறது.

முஸ்லிம் சமூகத்தைப் பொறுத்தவரை ஒரே நாடு ஒரே சட்டம் என்பது தம்மீது விழுந்த பேரிடியாகப் பார்க்கின்றனர். இந்தக் கருத்துக்கு எதிராக முஸ்லிம் அல்லாத சமூகங்களில் இருந்தும் கருத்துக்கள் வந்தவண்ணமுள்ளன.

இவ்வாறான கருத்துக்களை இம்முறை இங்கு தொகுத்து வெளியிடுன்றோம்

## "சிறுபான்மை மக்களின் சுதந்திரங்கள் நசுக்கப்பட்டு விடக்கூடாது"

**சட்டத்தரணி சம்பிகா த சில்வா,**
மேல் நீதிமன்றம், கொழும்பு

''ஒரே தேசம் ஒரே குரல்'' என்ற தொனிப்பொருளில் நாடு முழுவதற்கும் ஒரே சட்ட முறைமையைக் கொண்டு வரல், நாட்டில் தற்போது காணப்படும் இன, மத, மொழியினை பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியலை இல்லாதொழித்து புதிய அரசியல் கலாசாரத்தை உருவாக்குதல், தேசிய பாதுகாப்பை பிரதானமாகக் கொண்டு தேசிய கொள்கைகளை உருவாக்குதல், இதே விடயத்தை அடிப்படையாகக் கொண்டு சாதாரண மக்கள் மீது கவனம் செலுத்தும் பொதுவான நெறிமுறை மற்றும் நடத்தை விதிகளை அறிமுகம் செய்தல் போன்ற விடயங்களுக்காக மக்கள் ஆணையை பெறும் ஒரு திட்டம் தற்போது அரசாங்கத்தால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பான விடயங்களை ஊடகங்களில் பிரசுரித்து மக்களின் கையொப்பங்களை பெறும் திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எமது நாடு பயங்கரவாத நடவடிக்கைகளிலிருந்து பாதுகாக்கப்படல் அவசியம் என்றாலும் அதில் சிறுபான்மை மக்களின் சில சுதந்திரங்கள் நசுக்கப்பட்டு விடக்கூடாது என்பதில் அரசாங்கம் அக்கறை செலுத்துதல் அவசியம்.

## "இருக்கின்ற சட்டங்களை இன்னும் மேம்படுத்துவதே சிறந்தது"



**சட்டத்தரணி பவானி பொன்சேகா**

இலங்கையில் உள்ள எல்லா மக்களுக்கும் அரசியலமைப்பின் பிரகாரம் சமவுரிமை வழங்கப்பட வேண்டும். அரசியலமைப்பின் 15ஆவது உறுப்புரையில் தேசவழமை மற்றும் முஸ்லிம் தனியார் சட்டங்கள் செல்லுபடியானது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு சட்டம் கொண்டு வரப்பட்டால் சிறுபான்மை மக்களது பிரச்சினைகள் கவனத்திற் கொள்ளப்படாமல் மறக்கடிக்கப்படும் நிலை உருவாகிவிடும். எனது கருத்தின் படி வேறு சட்டங்களுக்குப் பதிலாக இருக்கின்ற சட்டங்களை இன்னும் மேம்படுத்துவதே சிறந்தது. சட்டங்கள் எத்தனை இருந்தாலும் பரவாயில்லை அவற்றால் பெண்களுக்கு அநீகள் இடம்பெறக் கூடாது. அவர்களும் சமமாக மதிக்கப்பட வேண்டும். அவர்களது விடயங்களில் சட்டம் மீறப்படுமாயின் எந்தச் சட்டங்கள் இருந்தும் பிரயோசனமில்லை.

எனவே அரசியல் யாப்பின் படி தற்போது புலக்கத்தில் உள்ள சட்டங்களை இன்னும் மேம்படுத்துவதே சிறந்தது. அதுவே காலத்தின் தேவையாகும். அது வல்லாமல் ஒரே நாடு ஒரே சட்டம் என்கின்ற அரசியல் உள்நோக்கம் படைத்த கோஷங்களை முன்வைப்பதில் எவ்வித அர்த்தமும் இல்லை.

## எல்லோருக்கும் ஒரு சட்டம் இருப்பது ஏராளமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிசமைக்கிறது



**சட்டத்தரணி ஹேரத் -** மேல்நீதிமன்றம், கொழும்பு

எந்தவொரு நாட்டிற்கும் ஒரு சட்டம் இருக்க வேண்டும் என்பதை விரும்புகிறேன். எமது நாடு பல்லின சமூக கலாசாரங்களை கொண்ட நாடாகும். எனவே இந்த நாட்டில் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சட்டம் வழங்கப்படுகின்ற போது வேறுபாடுகள் ஏற்படுகின்றன.

குறிப்பிட்ட அந்த சமூகம் தனித்துவமாக, மற்ற சமூகங்களை விட்டும் தூரமாகி வாழும் நிலை காணப்படுகின்றது. இதனால் தேவையற்ற பிரச்சினைகள் ஏற்படுகின்றன. இனங்களுக்கிடையிலான ஐக்கியமும் இதனால் சிதைவடைகிறது. எனவே எல்லோருக்கும் ஒரு சட்டம் இருப்பது ஏராளமான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வழிசமைக்கிறது.

தனித்துவமான சட்டங்களுக்குப் பதிலாக ஒரே நாடு ஒரே சட்டம் அதாவது நாம் இலங்கையர்கள் என்ற இடத்திற்கு வரும் போது நாட்டில் தேவையற்ற பிரச்சினைகள் இடம்பெறாது. நாடு துரித அபிவிருத்தியை அடைந்துகொள்ளும்.

எனவே நாம் இலங்கையர்கள் என்ற சிந்தனையில் எல்லோருக்கும் ஒரு சட்டம் இருப்பதையே நான் விரும்புகின்றேன். இது எல்லோருக்கும் இலகுவாகவும் ஒரு சமூகத்தை பார்த்து மற்ற சமூகம் சந்தேகப்படும் நிலையும் அற்றுப்போகும்.

## "இனவாதக் கோணத்திலேயே இக்கருத்து முன்வைக்கப்படுகின்றது."



**சட்டத்தரணி ஜீவனி காரியவசம்,**
அரசியல் மற்றும் சமூக செயற்பாட்டாளர்

'ஒரே நாடு ஒரே சட்டம்' இருந்தால் ஒரு பிரச்சினையும் இல்லை. ஆனால் இவ் வசனத்திற்கு உள்ளால் அரசியல் அர்த்தம் உட்பொதிந்துள்ளது. அவ்வர்த்தம் மிகவும் இனவாதத்தன்மை மிக்கது. அதாவது, இனவாதக் கோணத்திலேயே இக்கருத்து முன்வைக்கப்படுகின்றது. இது ஒரு விடயம். அடுத்தது, எமது நாட்டின் தனியார் சட்டங்களை எடுத்துக் கொண்டால் அதாவது முஸ்லிம் தனியார் சட்டம், தேசவழமைச் சட்டம், மேல்நாட்டுச் சட்டம், பொதுவான் சட்டம் என்பதாக உள்ளது. எமது நாட்டின் பொதுவான சட்டத்தில் உரோம டச்சு சட்டம், ஆங்கிலேயச் சட்டம், தென்னாபிரிக்க சட்டங்கள் பெரும்பாலும் தாக்கம் செலுத்தியிருக்கிறது.

விஷேடமாக தென்னாபிரிக்கச் சட்டத்தை ஒருபுறம் தள்ளினாலும் உரோம டச்சு சட்டத்தினையும் ஆங்கிலேயச் சட்டத்தையும் அடிப்படையாகக் கொண்டு எமது நாட்டின் சட்டதிட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. பிற்பட்ட காலத்தில் அமெரிக்கா உள்ளிட்ட வெளிநாடுகளின் சட்டங்களும் இங்கு ஒத்திகை பார்க்கப்பட்டுள்ளன.

தற்போது இலங்கையின் ஏதேனும் ஒரு தனியார் சட்டம் இலங்கையின் குற்றவியல் சட்டத்துடன் முரண்படுமாயின் அது மிகப்பெரும் பிரச்சினையாகும். உதாரணமாக இலங்கையின் குற்றவியல் சட்டத்தின் பிரகாரம் நியதிச்சட்ட பாலியல் துஷ்பிரயோகத்தின் படி 16 வயதுக்குக் குறைந்த பெண் பிள்ளையுடன் விருப்பத்தின் பேரில் அல்லது விருப்பத்தின் பேரில் அல்லாமல் அப்பெண்ணுடன் உடலுறவு கொள்வது பாலியல் துஷ்பிரயோகம் எனப்படும். எனவே இது இலங்கையின் ஏதாவது தனியார் சட்டத்துடன் முரண்படுமாயின் அங்கு பாரிய சிக்கல் ஏற்படும்.

இதனை நான் இலங்கையின் மிக முக்கியமான குற்றம் என்கின்ற ஸ்தானத்திலிருந்து நோக்குகிறேன். இலங்கையின் சாதாரண சட்டத்தின் படி ஒரு ஆணுக்கு அல்லது பெண்ணுக்கு 18 வயது பூர்த்தியானதும் திருமணம் முடிக்க முடியும். ஆனால் குற்றவியல் சட்டத்தில் 16 வயதுக்கு குறைந்த பெண் பிள்ளைக்கு உடலுறவில் ஈடுபட அனுமதி வழங்க முடியாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

ஆனால் 17 வயது பிள்ளைக்கு அதாவது 16 பூர்த்தியான பிள்ளைக்கு அனுமதி வழங்க முடியும். ஆனால் அவளுக்கு திருமணம் முடிப்பதற்கு 18 வயதாகும் வரை காத்திருக்க வேண்டும். இதனால் இங்கும் பிரச்சினையுள்ளது. அப்படியானால் இந்தச் சட்டமும் உடனடியாக மாற்றப்பட வேண்டும். அதுபோன்று இலங்கையில் ஒரே நாடு ஒரே சட்டம் என்று சொல்வதற்குப் பதிலாக இந்நாட்டில் தற்போதுள்ள சட்டங்கள் எல்லோருக்கும் சமமாக அமைய வேண்டும் என நான் கூறுகின்றேன். தற்பொழுது பார்த்தால் ஏழைக்கு ஒரு சட்டம் பணக்காரனுக்கு ஒரு சட்டம் என்ற நிலை காணப்படுகின்றது. அதனால் இந்தக் கோஷம் வெளிப்படையில் அழகியதாக தென்பட்டாலும் அதன் உள்ளடக்கம் பச்சைப் பொய்யானது.

இது இனவாதக் கோணத்தில் அணுகப்படுகின்றது. அவர்களுடைய உள்நோக்கம் முஸ்லிம் தனியார் சட்டத்தையும் தேச வழமைச் சட்டத்தையும் சிதைத்துவிடுவதாகும். ஆனால் நாம் அதற்கப்பால் சென்று சிந்தித்துப் பார்க்க வேண்டும் இந்நாட்டில் சட்டவாதிக்கம், சட்டம் ஒழுங்கு என்பன காணப்படுகின்றதா என்று. எம் அனைவரது வாழ்வில் தாக்கம் செலுத்துகின்ற தனியார் சட்டமும் தேச வழமைச் சட்டமும் பொதுச் சட்டமும் எமக்கு நியாயமான முறையில் கிடைக்கின்றதா என்பது தொடர்பில் நாம் எல்லோரும் போராட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21/4 க்குப் பிந்திய நிலைமைகள் - சமூகத்தின் முன்னுள்ள பணி என்ன ?

• இயான் மிஷல்

மழை விட்டும் தூறல் விடாத பாடாக ஈஸ்டர் தாக்குதலுக்குப் பிந்திய நிலைமைகள் முஸ்லிம் சமூகத்தின் மீது வக்கிரத்தைத் தீர்த்துக் கொள்ளும் விதமாகத் தொடருகின்றன. முஸ்லிம் சமூகத்தினர் மீது அத்துமீறும் செயற்பாடுகள் நாள் தவறாமல் ஆங்காங்கே நடைபெற்றுக் கொண்டு தான் இருக்கின்றன. விகாரமகாதேவி பூங்காவில் இருந்த இரண்டு இளைஞர்களை இராணுவத்தினர் முஸ்லிம் என்பதைத் தவிர வேறு காரணம் இன்றி விசாரணைக்கென அழைத்துச் சென்றுள்ளனர்.

சவூதி அரேபியாவில் இருந்து சுற்றுலாப் பயணிகளாக வந்த முகமூடிப் பெண்களுக்கு விமான நிலைய அதிகாரிகளால் தொந்தரவு ஏற்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பு நாலந்தாக் கல்லூரியில் பரீட்சை வினாத்தாள் திருத்தும் பணிக்காகச் சென்றிருந்த ஆசிரியர் ஒருவர், பௌத்த பாடசாலையான நாலந்தா வளவில் இருந்து தனது தொலைபேசியில் புகைப்படம் எடுத்ததற்காக பல மணி நேரம் தடுத்து வைக்கப்பட்டு விசாரிக்கப்பட்டிருக்கிறார்.

கொழும்புக்கு வந்த சமயம் தனது கடவுச் சீட்டை தொலைத்த கிண்ணியா பெண்மணி தெமட்டகொட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ய வந்த போது அவரது ஊரைக் கேட்டறிந்து கொண்ட பொலிஸ் உயரதிகாரி, சிங்களம் தெரியாதவர்கள் எல்லாம் இந்த நாட்டில் இருக்க முடியாது. நீ கிண்ணியாவாக இருந்தால் ஸஹ்ரானின் தங்கையாகக் கூட இருக்கலாம், போய் உங்களது பிரதேசத்தில் முறைப்பாடு செய் என விரட்டி அடிக்கப்பட்டிருக்கிறார்.

இப்படி நாளொரு நிகழ்வும் பொழுதொரு சம்பவமுமாக முஸ்லிம் சமூகத்தின் மீது பெரும்பான்மைச் சமூகத்தின் சிறுபான்மையினர் எகிறிப் பாய்வது தொடர்கிறது. இதனை இப்படியே வளர விட்டால் இதுவே இவர்களின் பண்பாக மாறிப் போவதும், ஒடுக்கு முறைக்குக் கீழால் வாழ்வதற்கு முஸ்லிம் சமூகம் தாழ்ந்து போவதும் இயல்பாக மாறி விடும். இதனால் ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னரான முஸ்லிம் சமூகத்தின் வாழ்வொழுங்கு எப்படி அமைய வேண்டும் என்ப்து பற்றி முஸ்லிம் சமூகத்தின் தலைமைகள் ஆராய்ந்து வழி காட்ட வேண்டும்.

ஐஎஸ் ஆதரவாளர் என சிறையில் அடைக்கப்பட்டுள்ள அப்பாவி ஒருவர், சிறைக்குப் பார்வையிட வருபவர்களிடம் தயவு செய்து எங்களுக்கு ஐஎஸ் என்றால் என்னவென்று சொல்லித் தாருங்கள். எங்களுக்குத் தெரியாத விடயங்களில் எங்களைப் போட்டுக் குடைகிறார்கள் என முறைப்பட்டிருக்கிறார். இங்கு முஸ்லிம் சமூகத்துக்கு தீவிரவாதம் என்றால் என்ன, தீவிரவாத அமைப்புக்கள் என்னென்ன, அவற்றுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் உரிய உறவு என்ன என்பன போன்ற விடயங்கள் சொல்லித் தரப்பட வேண்டும்.

முஸ்லிம் சமூகத்துக்கு மத்தியில் உள்ள பிளவுகளை சிலர் தீவிரவாத அமைப்புக்களாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். தேசிய தௌஹீத் ஜமாஅத் தடை செய்யப்பட்டமைக்காக தௌஹீத் என்றாலே தடை செய்யப்பட்ட ஒன்று என சிலர் நினைக்கிறார்கள். தொப்பி போடாத அனைவரையும் வஹாபிகளாகப் பார்ப்பவர்களும் இருக்கிறார்கள். எனவே தௌஹீத், வஹாபிஸம் என்பவை பற்றி முஸ்லிம் சமூகத்துக்கும் ஏனைய சமூகங்களுக்கும் விளங்கப்படுத்த வேண்டியது அவசரமான விடயமாகும்.

அதே போல தடை செய்யப்பட்டுள்ள ஜமாஅதே மில்லது இப்ராஹீம், விலாயதுஸ் ஸைலானி தொடர்பிலும் மக்களிடம் போதிய அறிவு இல்லை. ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபைச் சட்டத்தின் கீழ் தேசிய தௌஹீத் ஜமாஅத், ஜமாஅதே மில்லது இப்ராஹீம், விலாயதுஸ் ஸைலானி ஆகிய மூன்று முஸ்லிம் அமைப்புக்கள் பெயர் குறிப்பிடப்பட்ட அமைப்புக்களாக (Designated Entities) வர்த்தமானி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளன. இந்த அமைப்புக்களுக்கு நிதி வழங்குவது, சொத்துக்கள் மற்றும் பொருளாதார மூலங்கள் வழங்குவது, பயங்கரவாதத்துக்கு உதவி செய்த குற்றத்துக்கு உள்ளாக்கப்பட முடியுமானவை. எனவே இவற்றிலிருந்து தவிர்ந்து கொள்ள வேண்டுமென்றிருந்தால் இந்த அமைப்புக்களைப் பற்றிய தெளிவு அனைவருக்கும் வழங்கப்பட வேண்டியிருக்கிறது. இது அநியாயமாக யாரும் கைது செய்யப்பட்டு அடைக்கப்படாமல், பாதுகாக்கப்படுவதற்கு உதவியாக அமையும்.

சமூகத்தில் நிலவும் தீவிரவாத சிந்தனைகள் பற்றிய தெளிவொன்று சமூகத்துக்கு வழங்கப்பட வேண்டும். இலங்கை முஸ்லிம்களுக்கு மத்தியில் அடிப்படைவாதக் கருத்தில் உள்ளவர்கள் இருக்கிறார்கள் என்பதை சமூகம் மெல்ல மெல்ல ஏற்றுக் கொள்ளத் துவங்கியிருக்கிறது. சக வாழ்வை மறுப்பவர்கள், அந்நிய நாட்டில் வாழ்வதை ஏற்றுக் கொள்ள மறுப்பவர்கள், நாட்டுச் சட்டத்துக்கு மதிப்பளிக்க வேண்டியதில்லை என்று சொல்பவர்கள், சகிப்புத் தன்மையுடனும் விட்டுக் கொடுத்தும் வாழ முடியாது என்று சொல்பவர்கள் இப்படியெல்லாம் சிந்தனையுள்ளவர்கள் நம்மில் இருக்கிறார்கள் என்பது சமூகத்தில் ஊடுருவிப் பார்க்கும் போது புலப்படுகிறது. எனவே முஸ்லிம் சமூகத்துக்கு மத்தியில் இருப்பவற்றில் எது தீவிரவாதச் சிந்தனை, எது அடிப்படைவாதம் என்பதை மக்களுக்கு எடுத்துச் சொல்ல வேண்டும். அடிப்படைவாதம் தீவிரவாத்துக்கு இட்டுச் செல்கிறது. தீவிரவாதம் தான் பயங்கரவாதமாக மாறுகிறது. எனவே அடிப்படைவாதச் சிந்தனைகளை ஆரம்பத்திலேயே இனங்கண்டு கொள்ளும் வகையில் சமூகம் வழிகாட்டப்பட வேண்டும்.

நாட்டில் இருந்து பயங்கரவாதத்தை ஒழித்துக் கட்டுவதில் அரசாங்கமும் அரச படைகளும் பல முயற்சிகளை முன்னெடுத்து வருகின்றன. இவற்றுக்கு முஸ்லிம் சமூகம் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். ஸஹ்ரானுடைய விடயத்தில் அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா இராணுவத் தரப்புக்கு ஏற்கனவே சுட்டிக் காட்டியிருந்தமை தான் ஸஹ்ரானுடைய அறிவீனம் முஸ்லிம் சமூகத்தின் மீது சுமத்தப்படாமல் பாதுகாத்தது. (இதே விதமாக முஸ்லிம் சமூகத்திடமும் இந்த இயக்கம் தொடர்பான ஆபத்தை வெளிப்படுத்தி இருந்தால் பலரும் இதனுடன் தொடர்புபடுவதில் இருந்தும் தவிர்ந்திருக்கலாம்) இதுபோல இராணுவம் தங்களிடம் வேண்டும் போதெல்லாம் தங்களைப் பற்றி முன்வைக்க முடியுமான அளவுக்கு ஒவ்வொரு தனி நபரும், அமைப்புக்களும் தம்மைத் தயார் படுத்திக் கொள்ள வேண்டும்.

முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் நிலவிய நிலவுகின்ற பிளவுகளின் விபரீதங்கள் இந்த ஈஸ்டர் தாக்குதலின் பின்னரான சூழலில் நன்றாகவே வெளிப்பட்டன. தமக்குப் பிடிக்காதவர்களையெல்லாம் பயங்கரவாதிகளாகப் போட்டுக் கொடுக்கும் நிலை முஸ்லிம் சமூகம் பற்றி அடுத்த சமூகங்கள் கொண்டிருந்த நற்பெயரையெல்லாம் இடித்துத் தள்ளும் வகையில் அமைந்திருந்தன. ஆண்டாண்டு காலமாக உள்ளத்தில் [illegible] பட்டு வந்த பகையை வெளிப்ப[illegible] கான சந்தர்ப்பமாக சிலர் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டனர்.

தம்முடன் கொள்கை ரீதியாக முரண்பட்டவர்கள், தீர்வு காணப்பட முடியாத சட்டப் பிரச்சினைகளில் மோதி விரக்தி அடைந்திருந்தவர்கள், அடுத்த கொள்கையைச் சேர்ந்தவர்களுடைய மோசமான விமர்சனங்களை எல்லாம் மனதில் போட்டுப் புதைத்து வைத்திருந்தவர்கள் இவைகள் எல்லாமே ஸஹ்ரானுடைய குண்டுடன் வெடித்து வெளிப்படத் தொடங்கின. இப்படியான 'வெறுப்புக்கள் மனங்களில் உறைந்து போக முன்னர் தவிர்த்திருக்கப்பட வேண்டியவை என்றாலும் இதற்கான தீவிர முயற்சிகள் எடுக்கப்பட்டு அவை சாத்தியமாகாமல் போன நிலைகள் வரவில்லை. சில சில முயற்சிகள் இரு தரப்புக்களுக்கிடையே மட்டும் நிகழ்ந்தவைகளாக உள்ளனவேயன்றி முரண்பட்டிருப்பவர்களை சமூகமாக ஒன்று சேர்ந்து இணக்கப்பாட்டுக்குக் கொண்டு வரும் நிகழ்வுகள் சமூகத்துக்குள்ளால் நடந்தேறவில்லை. ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் வாய்த்திருக்கின்ற சூழலில் இதற்கான முயற்சிகள் நடக்க வேண்டும்.

முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் நிலவுகின்ற தனிப்பட்டவர்களுக்கிடையிலான பிரச்சினைகளை மத்தியஸ்தம் வகித்துத் தீர்ப்பதற்கான பொறிமுறை ஒன்றை உருவாக்குவதில் முஸ்லிம் சமூகம் விட்ட தவறு, ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னரான சூழலை அவர்களுடைய தனிப்பட்ட விவகாரங்களைத் தீர்த்துக் கொள்வதற்கான களமாக மாற்றியது. தனிநபர்களுடைய விவகாரங்களைக் கையாள்வதில் முன்னர் போல பள்ளிவாசல்கள் தலையிடுவதில்லை. அதற்காகப் பொலிசுக்குப் போய் முறையிட்டால் சமூகத்தைக் காட்டிக் கொடுத்தவன் போல ஊர்களில் கணிக்கப்படுவதனைப் பயந்து பாதிக்கப்பட்டவர்களால் பொலிசை நாடவும் முடியவில்லை. இதனால் தனது பாதிப்பைப் பொறுத்துக் கொண்டிருந்தவர்கள் அதனை போட்டுக் கொடுப்பாக வெளியிட்டிருக்கிறார்கள். தனக்குக் கடன் தர வேண்டியவர்கள், தன்னுடன் காணிப் பிரச்சினையில் மோதியவர்கள், தனக்கு வர்த்தகப் போட்டியாக மாறுபவர்கள், தான் குளிப்பதை படம் எடுத்தவர்கள் என தன்னை முன்னிலைப்படுத்தி தனக்கு எதிரானவர்களை பயங்கரவாதிகளாக போட்டுக் கொடுப்பதற்கு சமூகத்தில் சிலர் தலைப்பட்டது இதனால் தான். இந்த நிலை இனியும் தொடராமல் பள்ளிவாசல்கள் பள்ளிவாசல்களைக் கட்டுவதையன்றி சமூகத்தைக் கட்டியெழுப்புகின்ற பணிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். இணக்க சபைகள், நியாய சபைகளை உருவாக்கி மக்களின் மனங்களில் 'தேங்கிப் போயிருக்கின்ற பிரச்சினைகளை வளரவிடாமல் ஒரே சமூகமாக வாழ்வதனை வலியுறுத்தும் வகையில் ஊர்த் தலைமைகள் செயற்பட வேண்டும். ஊர்த் தலைமைகளை அரசியல் வாதிகளின் கைகளில் கொடுக்காமல் பள்ளிவாசல்கள் அந்த இடத்தை மீளப் பெற வேண்டும்.

தெல்கஹுகொட பிரதேசத்தில் புத்தர் [illegible] கள் உருவாகி வருகிறார்கள் என்பதை தெல்கஹுகொட மக்களில் பலரும் அறியாமல் இருந்தார்கள். காத்தான்குடியில் ஸஹ்ரானுடைய தேசிய தௌஹீத் ஜமாஅத் இந்தளவு தீவிர மனப்பான்மையுடன் இருந்திருக்கிறது என்பதை காத்தான்குடி மக்களில் பலரும் தெரியாமல் இருந்தார்கள். தெரிந்திருந்தால் அவர்கள் அதனைத் தடுத்திருப்பார்கள். இந்த நிலை உருவாவதற்கு ஊர்களில் நிலவுகின்ற கட்டுக் கோப்பிலான குறைபாடும் காரணமாகும்.

ஊர்களில் பள்ளிவாசல்கள் பெருகியதால் ஒவ்வொரு பள்ளிவாசலும் தமது பாட்டில் தனித்தியங்கும் நிலை தான் பெரும்பாலான ஊர்களில் இருக்கிறது. இதனால் அடுத்த தரப்பில் என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ளாமல் ஊரில் ஒவ்வொரு தரப்பும் அந்நியமாகிப் போகிறார்கள். இதனால் ஊரில் புதிதாக உருவாகி வளருகின்ற அமைப்புக்கள் கண்ணிலிருந்து மறைந்து போகின்றன. இவை தனது இஷ்டத்தில் இயங்கி தங்களுக்குச் சரியானது எனப்பட்டதை நடைமுறைப் படுத்தத் துவங்கினால் அதனால் வருகின்ற பாதிப்பு ஒட்டு மொத்த சமூகத்திலும் தாக்கம் செலுத்துகிறது.

எனவே பள்ளிவாசல்களை மையப் படுத்தி ஊரின் தலைமையை அமைத்துக் கொள்ளும் போது அதிலே ஊரிலுள்ள அனைத்துத் தரப்பும், இயக்கங்களும், நிறுவனங்களும் என ஒன்று விடாது இணைத்துக் கொள்ளப்பட வேண்டும். இந்த தலைமைத்துவ சபையினூடாக ஒவ்வொரு அங்கத்தினதும் செயற்பாடுகள் அவதானிக்கப்பட வேண்டும். முரண்பட்டுச் செல்லும் யாரையும் ஒதுக்கி விடாமல் அவர்களுடன் உடன்பாட்டுக்கு வருவதற்கான வழிவகைகளைக் கையாள வேண்டும்.

ஈஸ்டர் தாக்குதலுக்குப் பின்னர் வகை தொகையின்றி கைது செய்யப்பட்டு பல மாதங்களாக சிறைகளில் அடைக்கப்பட்டிருப்பவர்கள் பலர் இருக்கிறார்கள். பெரும்பாலும் வீட்டுத் தலைவனாக இருந்து வீட்டுக்கு வருமானம் உழைத்துக் கொடுத்துக் கொண்டிருந்தவர்களும் சிறைகளில் இருக்கிறார்கள். இவர்களில் அநியாயமாக சிறையில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் பலர் இருக்க முடியும். இவர்களுடைய குடும்பங்கள் வேறு வாழ்வாதாரங்கள் இன்றி கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இவர்களுக்கு உதவுவதற்கு சமூகமும் கூட முன்வருவதில்லை. பயங்கரவாதத்துக்குத் துணை போனதாக தாங்களும் கைதுசெய்யப்பட்டு விடுவோமா என்று அவர்கள் அஞ்சுகின்றனர். இதற்கு மேலதிகமாக சிறையிலிருப்பவர்களை வெளியில் கொண்டு வருவதற்காக இவர்கள் இலட்சக் கணக்கில் செலவழிக்க வேண்டியுமிருக்கிறது. அன்றாடத் தீனிக்கே வழியில்லாத நிலையில், சிறையிலிருக்கும் சீவனோபாயத்தையும் வெளியில் எடுக்க முடியாத நிலையில் அவர்கள் சொல்லொணாத் துயரத்தை அனுபவித்து வருகிறார்கள். ஊர்களில் இருந்து மானசீகமாக ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் தங்களது துயரங்களை யாரிடமும் வெளியிட முடியாமல் ஒடுங்கிப் போயிருக்கிறார்கள். முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் என்பதனாலேயே இவர்கள் இந்தத் துன்பங்களை அனுபவிக்கிறார்கள் என்ற வகையில் இவர்களின் துயரங்களைக் களைவதற்கு முஸ்லிம் சமூகம் போதுமான பொறிமுறை ஒன்றை வகுக்க வேண்டும். அண்மையில் ஸம்ஸம் நிறுவனம் இப்படியான சில குடும்பங்களைத் தெரிவு அவர்களுக்குத் தேவையான பண்டங்களின் பொதியொன்றை வழங்கி வைத்தமையை ஒரு முன்னுதாரணமாகக் கொள்ள முடியும். தலைமைத்துவப் பயிற்சி முகாமுக்குச் சென்றதையும் குற்றமாகக் கருதி பதின்பருவ மாணவர்கள் கூட சிறைச்சாலைகளில் இருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. இவர்களை வெளியில் கொண்டு வருவது சம்பந்தமாகவும் இவர்களது எதிர்காலம் சம்பந்தமாகவும் சமூகம் செயற்பட வேண்டும்.

ஈஸ்டர் தாக்குதலுக்கு முன்னர் சமூகத்தின் வளிமண்டலம் பயான்களாலும் உரைகளாலும் நிரம்பி வழிந்தது. தாக்குதலுக்குப் பின்னர் ரமழான் காலம் கூட நிம்மதியாகத் தான் கழிந்தது. அவசரகாலச் சட்டம் நீக்கப்பட்டதன் பின்னர் இவை மீண்டும் பழைய நிலையை எட்டிப் பார்க்க முடியும். இவ்வாறான உரைகள் எதை நோக்கி அமைகின்றன, என்ன கருத்தைச் சொல்ல வருகின்றன, தீவிரவாதக் கருத்துக்களை அவை உள்ளடக்கியிருக்கின்றனவா போன்ற விடயங்கள் எல்லாம் இனி அவதானிக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் இப்படி இல்லாமல் அம்போ என்று விட்டதனால் தான் பௌத்தர்களின் மும்மணிகள் தொடர்பிலும், புத்தர் நரமாமிசம் உண்டது தொடர்பிலும் முஸ்லிம் சமூகத்தில் இருந்து பயான்கள் வெளிவரத் துவங்கின. பயான்கள் மட்டுமன்றி எழுதப்படும் ஆக்கங்களும் வடிவமைக்கப்படும் ஒலி அலை வடிவங்களும் அவதானத்துக்கு உட்படுத்தப்பட முடியுமான பொறிமுறை ஒன்று வகுக்கப்பட வேண்டும்.

பொதுவாக முஸ்லிம்கள் நாட்டுச் சட்டத்தை மதிப்பதில்லை என்றொரு கருத்துப் போக்கை பரவலாக்குவதற்கு பல பிரயத்தனங்கள் செய்யப்பட்டன. வெளிப்படையாகத் தெரிகின்ற ஹெல்மட் அணியாமல் மோட்டார் சைக்கிளில் செல்வது தான் இதற்கென எடுத்துக் காட்ட முடியுமாக இருந்தது. போகப் போக இதன் பரப்பு அதிகமாகிச் செல்வதான ஒரு கருத்தே சிங்கள சமூகத்தின் மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு வருகிறது. இந்தக் கருத்தை மாற்றியமைக்கின்ற பணி முஸ்லிம் சமூகத்துக்குள்ளால் நடைபெற வேண்டும். சுங்கத் தீர்வையில் தப்புதல் முதல் வாகனங்களை ஓட்டுவது முதல், அரசாங்க சேவையில் கடமை புரிவது முதல் அரசியல்வாதிகளின் செயற்பாடுகள் வரை அனைத்தும் நாட்டுச் சட்டத்துக்குள்ளால் இயங்குவதை உறுதிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

இன்றைய இளைஞர்களில் பெரும்பாலானவர்கள் சமூக ஊடகங்களினால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறார்கள். இது சுதந்திரமாகக் கையாளப்பட முடியுமான ஊடகமாகும். அந்த வகையில் முஸ்லிம் சமூகத்துக்கு எதிராக யாரும் இந்த ஊடகங்களைப் பயன்படுத்த முடியும். இவற்றினால் தமக்கு வருகின்ற ஊடகச் செய்திகளினால் உணர்ச்சிவசப்படாத அளவுக்கு இளைஞர்களை அறிவூட்ட வேண்டும்.





(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகத்திரை (நிகாப்)

## ஓர் இஸ்லாமிய சட்டப் பார்வை



Dr. எம். எம். நயீம்

இன்று இலங்கையில் சர்ச்சைக்குள்ளாகி இருக்கும் முகத்திரை பற்றிய விரிவானதொரு சட்ட விளக்கத்தை வழங்குவது அவசியமாக இருக்கின்றது. முகத்திரை குறித்து இஸ்லாமிய சட்ட அறிஞர்களுக்கு மத்தியில் உடன்பாடானதொரு கருத்து இல்லை. அதில் மிக நீண்ட வாதப்பிரதி வாதங்கள் ஆரம்ப காலம் தொட்டே இருந்து வருகின்றது.

ஒரு சாரார் முகம், மணிக்கட்டு வரையான கை உட்பட பெண் முழுமையாக அவ்ரத்தாகும், ஆகவே விதிவிலக்கின்றி முழுமையாக அவள் தன்னை மறைப்பது வாஜிபாகும் எனக் கருதுகின்றனர்.

அடுத்த பிரிவினர் முகம், மணிக்கட்டு வரையான கைகள் விதிவிலக்கானது என கருதுகின்றனர். இரு தாப்பினரும் தமது ஆதாரங்களை பின்வருமாறு முன்வைக்கின்றனர்.

முகம், மணிக்கட்டு என்பன அவ்ரத் அல்ல எனக் கருதுவோர் இன்னுமொரு விடயத்திலும் கருத்து முரண்பட்டுள்ளனர். அதாவது அவை இரண்டும் பொதுவாக பார்ப்பதற்கு ஆகுமானவையா அல்லது வரையறைகள் இருக்கின்றனவா என்பதிலும் கருத்து முரண்பாடு நிலவுகின்றது. இதில் ஒரு பிரிவினர், பித்னாவுக்கு அஞ்சும் நிலை ஏற்படாத வரை முகம், மணிக்கட்டு ஆகியன பார்ப்பதற்கு ஆகுமாகும் எனவும், அடுத்த பிரிவினர், பித்னாவுக்கு அஞ்சாவிட்டாலும் பொதுவாக பார்க்கக் கூடாது, தேவைக்கு மாத்திரமே , பார்க்க வேண்டும் எனவும் கருதுகின்றனர். இதுவே ஓரளவு பலமான கருத்தாகும். பித்னா நிகழும் என அஞ்சும் நிலையில் பார்ப்பது ஹராமாகும் என்பது ஏகோபித்த கருத்தாகும்.

முகத்திரை வாஜிபானது என்பது ஹம்பலி மத்ஹபின் சில இமாம்களின் பலமான கருத்தாகும். இமாம் இப்னு குதாமா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்கள்: ''எமது சில இமாம்கள் முகம், இரு கைகள் ஆகியன அவ்ரத் எனக் கருதுகின்றனர்'' (முக்னி).

இதற்கவர்கள் பின்வரும் ஆதாரங்களை முன் வைக்கின்றனர்:

1. நபியே! நீர் உம் மனைவிகளுக்கும், உம் பெண் பிள்ளைகளுக்கும், ஈமான் கொண்டவர்களின் பெண்களுக்கும், அவர்கள் தங்கள் தலைமுந்தானைகளைத் தாழ்த்திக் கொள்ளுமாறு கூறுவீராக, அவர்கள் (கண்ணியமானவர்கள் என) அறியப்பட்டு நோவினை செய்யப்படாமலிருக்க இது சுலபமான வழியாகும். மேலும் அல்லாஹ் மிக மன்னிப்பவன்; மிக்க அன்புடையவன்.

இங்கு ஜலாபீப் என்பது உச்சந்தலை முதல் முகம் உட்பட கால் வரை மறைக்கும் ஆடை என விளக்கமளித்தனர். கண்களில் ஒன்றை மாத்திரம் பார்ப்பதற்காக திறக்க முடியும் என சலுகை வழங்கினர். இது இப்னு அப்பாஸ் (றழி) அவர்களின் விளக்கமாகும்.

2. ''இன்னும் முஃமினான பெண்களுக்கும் நீர் கூறுவீராக அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும்; தங்கள் அலங்காரத்தை அதில் (சாதாரணமாக வெளியில்) தெரியக் கூடியதைத் தவிர (வேறு எதையும்) வெளிக் காட்டலாகாது. இன்னும் தங்கள் முந்தானைகளால் அவர்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும்.''

'தங்கள் அழகலங்காரத்தை அதில் (சாதாரணமாக வெளியில்) தெரியக் கூடியதைத் தவிர' என்பது வெளியில் தெரியும் ஆடையைக் குறிக்கும், முகம், கைகள் உட்பட அனைத்து உடலும் மறைக்கப்பட வேண்டும் என விளக்கமளித்தனர்.

3. ''நபியுடைய மனைவிகளிடம் ஏதாவது ஒரு பொருளைக் கேட்டால், திரைக்கு அப்பாலிருந்தே அவர்களைக் கேளுங்கள். அதுவே உங்கள் இருதயங்களையும் அவர்கள் இருதயங்களையும் தூய்மையாக்கி வைக்கும்''

இது உம்மஹாதுல் முஃமினீன்களை நோக்கி பேசினாலும் அவர்களுக்கு மட்டுமுரியதல்ல, ஏனைய முஃமினான பெண்களுக்குமாகும். அவர்களும் திரைக்குப் பின்னாலிருந்தே ஆண்களிடம் எதையாவது கேட்க வேண்டும். ஆகவே முகம் கை உட்பட அனைத்தும் மறைக்கப்பட வேண்டுமென்பதை இது காட்டுகின்றது.

4. 'இன்னும் தங்கள் முந்தானைகளால் அவர்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும்''

இந்த வசனம் இறங்கிய போது பெண்கள் தமது ஆடைகளின் கீழ்ப்பகுதியை கிழித்து முந்தானைகளை (கிமார்) அமைத்துக் கொண்டனர், கிமார் என்பதற்கு முகத்திரை என விளக்கமளித்தனர், இதனை இமாம் இப்னு ஹஜ்ர் குறிப்பிடுகின்றார்கள்.

5. திர்மிதியில் வரும் ஹதீஸில், இறைதூதர் (ஸல்) அவர்கள் நவின்றதாக இப்னு மஸ்ஊத் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

'பெண் அவ்ரத்தாகும், அவள் வெளியேறினால், ஷைத்தான் அவளை நெருங்குகின்றான்'' (திர்மிதி)

இதில் பெண் அவ்ரத்தானவள் என்பது முகம், கை உட்பட அனைத்தையும் உள்ளடக்கும் என விளக்கமளித்தனர்.

6. புஹாரியில் வரும் ஹதீஸில் இப்னு உமர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு மனிதர் எழுந்து, அல்லாஹ்வின் தூதரே, இஹ்ராமில் எந்த ஆடையை அணியுமாறு எமக்கு கட்டளையிடுகின்றீர்கள்? என வினவினார், அதற்கு நபி (ஸல்) அவர்கள்... பெண்கள் முகத்திரை அணிய வேண்டாம்..'' (புஹாரி).

இதில் இஹ்ராம் அணியும் பெண் விஷேடமாக முகத்திரை அணியக் கூடாது என ஈண்டு குறிப்பிட்டதானது ஏனைய நேரங்களில் அணிய வேண்டும் என்பதைக் காட்டுகின்றது.

7. ஆயிஷா (றழி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்: நாம் இஹ்ராம் அணிந்திருக்கும் நிலையில் றஸூலுல்லாஹ்வுடன் இருப்போம், அப்போது பயணிப்போர் எம்மைக் கடந்து செல்வார்கள், எமக்கு நேராக அவர்கள் வரும் போது எங்களில் ஒவ்வொருவரும் தமது தலையின் மேலிருந்து முகத்திரையை எடுத்து முகத்தை மறைப்பார்கள், அவர்கள் எம்மைக் கடந்து சென்று விட்டால் நாம் முகத்தைத் திறப்போம்''. (அஹ்மத்).

இவை போன்ற இன்னும் பல ஹதீஸ்களையும் ஆதாரமாகக் குறிப்பிடுகின்றனர். அவற்றில் எதுவும் திட்டவட்டமாக முகம், கை என்பன அவ்ரத் எனக் குறிப்பிடவில்லை. மாறாக வழங்கப்படும் விளக்கங்களினடிப்படையிலேயே முகம் மற்றும் கைகள் என்பன அவ்ரத் என உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

இரண்டாவது சாரார் முகம், மணிக்கட்டு தவிர்ந்த பெண்களின் ஏனைய உடல் முழுமையாக அவ்ரத்தானதாகும் எனக் கருதுகின்றனர். இது ஆயிஷா (றழி), இப்னு அப்பாஸ், இப்னு உமர் போன்ற ஸஹாபாக்களினதும், ஹனபி, மாலிகி, ஷாபி மத்ஹபினர் உள்ளிட்ட பெரும்பாலான சட்ட அறிஞர்களின் கருத்துமாகும். இன்னும் இமாம் இப்னு அப்துல் பர், அல் காஸானி (ஹனபி), இப்னு குதாமா (ஹம்பலி), அல் தர்தயிர் (மாலிகி) ஸகரியா அல் அன்ஸாரி (ஷாபி) போன்ற இமாம்கள் இக்கருத்தை பலப்படுத்தி எழுதியிருக்கின்றனர்.

முகத்தைத் திறப்பதனால் 'பித்னா'வுக்கு உட்படும் சூழல் இருப்பின் அதனை மறைக்க வேண்டும் என்பதும் இவர்களின் கருத்தாகும்.

பெண்களின் முகம் மற்றும் மணிக்கட்டு வரையான கைகள் அவ்ரத் அல்ல என்பதற்கு பின்வரும் ஆதாரங்களை முன்வைக்கின்றனர்:

1. சூரத்து அல் நூர்-31,

''இன்னும்; முஃமினான பெண்களுக்கும் நீர் கூறுவீராக அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக்காத்துக் கொள்ள வேண்டும்; தங்கள் அழகலங்காரத்தை அதில் (சாதாரணமாக வெளியில்) தெரியக் கூடியதைத் தவிர (வேறு எதையும்) வெளிக் காட்டலாகாது. இன்னும் தங்கள் முந்தானைகளால் அவர்கள் தங்கள் மார்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும்.''

இதில் ''(சாதாரணமாக வெளியில்) தெரியக் கூடியதைத் தவிர'' என்பது முகம், மணிக்கட்டு வரையுமான கைகள் என விளக்கமளித்தனர். பைஹகியில் வருகின்ற அறிவிப்பில் இப்னு அப்பாஸ் (றழி) அவர்கள் இதனைக் குறிப்பிட்டார்கள்.

2. சூரத்துல் அல் நூர் 30

''(நபியே!) முஃமின்களான ஆண்களுக்கு நீர் கூறுவீராக அவர்கள் தங்கள் பார்வைகளைத் தாழ்த்திக் கொள்ள வேண்டும்; தங்கள் வெட்கத் தலங்களைப் பேணிக் காத்துக் கொள்ள வேண்டும்; அது அவர்களுக்கு மிகப் பரிசுத்தமானதாகும்; நிச்சயமாக அல்லாஹ் அவர்கள் [illegible]

ஆண்கள் பார்வையை தாழ்த்த வேண்டும் என இந்த வசனம் குறிப்பிடுகின்றது. பெண்களின் முகம் மூடியிருப்பின் எதனை விட்டும் பார்வையைத் தாழ்த்துவது என்ற கேள்வி எழுகின்றது. பெண்களின் முகத்தை பார்க்கும் போது, அது அழகானதாகத் தென்படும் போது அதனைத் தாழ்த்த வேண்டும் என்பதே இதன் பொருள் என்றனர். அதனால்தான் நபி (ஸல்) அலி (றழி) அவர்களைப் பார்த்து; அலியே! ஒரு தடவை பார்த்தால் அதனைத் தொடர்ந்து மீண்டும் பார்க்காதே! முதல் பார்வை உனக்குரியதாகும், அடுத்தவை உனக்குரியதல்ல'' எனக் குறிப்பிட்டார்கள்.

3. முஸ்லிமில் வரும் ஆயிஷா (றழி) அவர்களின் அறிவிப்பில் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்: ''முஃமினான பெண்கள் தமது தலைகளை மறைத்த நிலையில் இறைதூதர் (ஸல்) அவர்களுடன் பஜ்ர் தொழுகையில் கலந்து கொண்டிருந்தனர். பின்னர் தொழுகை முடிந்தபோது தமது விடுகளுக்கு திரும்பிச் செல்வார்கள், அதிகாலை இருளின் காரணமாக அவர்கள் அறியப்பட மாட்டார்கள்''. (முஸ்லிம்)

அதிகாலை இருளின் காரணமாகவே அவர்கள் அறியப்படவில்லை, முகத்தை மூடியிருந்ததன் காரணமாக அல்ல, முகத்தை மூடியிருந்தால் இப்படிக் குறிப்பிட வேண்டிய அவசியம் இருக்காது.

4. முஸ்லிமில் வரும் அறிவிப்பில் ஜாபிர் (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஒரு பெருநாள் தினத்தில் நபி (ஸல்) அவர்கள் தொழுத இடத்தில் பெண்களுக்கு உரை நிகழ்த்தினார்கள், அங்கு ஆண்களும் பெண்களும் இருந்தனர். அதில்: (பெண்களே!) ஸதகா செய்யுங்கள், உங்களில் அதிகமானோர் நரகத்தின் எரிபொருளாகும்'' என்றார்கள். அதற்கு அங்கு பெண்கள் மத்தியில் அமர்ந்திருந்த கன்னம் சிவந்திருந்த ஒரு பெண்: ஏன் நாம் நீங்கள் வர்ணித்தது போன்று இருக்க வேண்டும்? என வினவ, நபி (ஸல்) அவர்கள்: கணவரின் உரிமைகளை மறுக்கின்றீர்கள், உங்களுக்காக செய்யப்படுபவற்றை நன்றியுணர்வின்றி, மறுதலித்து முறைப்படுவதை கைக்கொண்டிருக்கின்றீர்கள்'' என நவின்றார்கள்.

இதன் அறிவிப்பாளர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்: அவர்கள் தமது ஆபரணங்களில் இருந்து ஸதகா செய்தனர். இங்கு கேள்வி என்னவென்றால், கேள்வி எழுப்பிய பெண் முகத்தை மூடியிருப்பின் அப்பெண்ணின் கன்னங்கள் சிவந்தது என எப்படி ஹதீஸ் அறிவிப்பாளர் கண்டார்? முகம் திறந்து இருந்தமையே அதற்குக் காரணமாகும்.

மற்றுமொரு அறிவிப்பில்: அவர்கள் நகைகளை பிலால் (றழி) விரித்திருந்த ஆடையில் போடும் போது அவர்களின் கைகளைக் கண்டேன் என அறிவிப்பாளர் குறிப்பிடுகின்றார். இது கைகளும் அவ்ரத் அல்ல என்பதைக் காட்டுகின்றது.

5. பெண்கள் இஹ்ராம் அணியும் போது முகத் திரை அணிவதை தடை செய்தமை, ஏனைய நேரங் களில் அணிய வேண்டும் என்பதைக் காட்டுகின்றது எனக் கருத்துக் கொள்வது தவறானதாகும். அப்படியாயின், ஆண்களுக்கு இஹ்ராமின்போது தலையை மறைக்க வேண்டாம் என வந்திருப்பது ஏனைய நேரங்களில் தலையை மறைக்க வேண்டும் என்பதைக் காட்டாது. தலையை விரும்பியவர் மறைக்கலாம், விரும்பியவர் திறக்கலாம்.

பெண்களின் முகம், மற்றும் கைகள் என்பன அவசியம் மறைக்கப்பட வேண்டிய அவ்ரத் ஆக இருந்திருந்தால் அதனை மக்கள் மத்தியில் ஹஜ் சந்தர்ப்பத்தில் திறக்குமாறு நபி (ஸல்) அவர்கள் ஏவியிருக்க மாட்டார்கள்.

இன்னும், வியாபாரம், கொடுக்கல் வாங்கல் என்பவற்றின் போது முகத்தைத் திறப்பதற்கான தேவை இருக்கின்றது. (முக்னி, இப்னு குதாமா, 1/60).

6. 'இன்னும் தங்கள் முந்தானைகளால் அவர்கள் தங்கள் [illegible] மறைத்துக் கொள்ள வேண்டும்''

இந்த வசனம் முகம் அவ்ரத் அல்ல என்பதையே காட்டுகின்றது. தமது முந்தானைகளால் மார்பகங்களை மறைக்க வேண்டும் என்றே வந்துள்ளது, முகத்தை மறைப்பது இஸ்லாமிய அடையாளங்களில் ஒன்றாக இருந்திருப்பின் முகங்களை மறைக்குமாறு தெளிவாக வந்திருக்க வேண்டும். அப்படி வந்தால் கண்ணும் மறைக்கப்படும், அது பற்றி இங்கு குறிப்பிடப்படவுமில்லை. ஆகவே முகத்தை மறைப்பதற்கும் இந்த வசனத்துக்கும் தொடர்பு எதுவும் இல்லை.

முகம் மறைக்கும் வழக்கம் ஜாஹிலிய்யக் காலத்திலும் இருந்து வந்த வழக்காகும், அதற்கு இபாதத் அந்தஸ்து வழங்கப்படக்கூடாது.

7. உம்மு கல்லாத் (றழி) அவர்கள் இறைதூதர் (ஸல்) அவர்களிடம் முகத்திரை அணிந்து கொண்டு வந்து ஒரு போராட்டத்தில் கொல்லப்பட்ட தனது மகனைப்பற்றி வினவ வந்தார்கள். அதற்கு சில நபித்தோழர்கள்: நீங்கள் நிகாப் (முகத்திரை) அணிந்த நிலையிலா உங்கள் மகன் பற்றி விசாரிக்க வந்திருக்கின்றீர்கள்? என (ஆச்சரியத்துடன்) வினவினார்கள்.

முகத்திரையையிட்டு ஸஹாபாக்களின் ஆச்சரியம் நிகாப் இபாதத்துடன் தொடர்பான ஒன்றல்ல என்பதைக் காட்டுகின்றது.

8. ஆயிஷா (றழி) அவர்கள் குறிப்பிடுகின்றார்கள்: நாம் றஸூலுல்லாஹ்வுடன் இஹ்ராம் அணிந்திருக்கும் நிலையில் பயணிப்போர் எம்மைக் கடந்து செல்வார்கள், எமக்கு நேராக அவர்கள் வரும் போது எங்களில் ஒவ்வொருவரும் தமது தலையின் மேலிருந்து முகத்திரையை எடுத்து முகத்தை மறைப்பார்கள், அவர்கள் எம்மைக் கடந்து சென்று விட்டால் நாம் முகத்தைத் திறப்போம்''. (அஹ்மத்).

முகத்தை மறைப்பதற்கு ஆதாரமாகக் காட்டப்படும் இந்த ஹதீஸ், சட்டம் வகுப்பதற்கு தகுதியற்றளவு மிகவும் பலவீனமானது.

9. ஆயிஷா (றழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: அஸ்மா (றழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களிடம் வந்தார்கள், அவர்கள் மீது மென்மையான ஆடை இருந்தது. அப்போது இறைதூதர் (ஸல்) அவர்கள் தனது முகத்தைத் திருப்பிக் கொண்டு ''அஸ்மாவே, பெண் பருவமடைந்து விட்டால் அவளிடமிருந்து இதனையும் இதனையும் தவிர (முகத்தையும் கையையும் சுட்டிக்காட்டினார்கள்) வேறு எதுவும் தென்படக்கூடாது'' எனக்கூறினார்கள். (அபூதாவுத்). இது பலவீனமான ஹதீஸ், எனினும் இது பற்றி வந்துள்ள இன்னும் பல ஹதீஸ்கள் இணைந்து இதனைப் பலப்படுத்துகின்றது என அல்பானி (றஹ்) குறிப்பிடுகின்றார்கள்.

இன்னும் பல ஆதாரங்களை இக்கருத்தைப் பலப்படுத்த இமாம்கள் குறிப்பிடுகின்றனர்.

இக்கருத்துக்களில் முகம் மணிக்கட்டு என்பன அவ்ரத் அல்ல என்பதுவே ஆதாரத்தில் பலமானது என்பது தெளிவாக விளங்குகின்றது. ஆனால் முகத்தை மறைப்பவர்களும் ஒரு மார்க்க சட்ட அடிப்படையிலேயே அதனைச் செய்கின்றனர் என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இஸ்லாமிய சட்டத்தில் இருக்கின்ற கருத்து முரண்பாடுகளை அணுகும் முறைமையை இங்கும் கடைப்பிடிப்பது அவசியமாகும், மாற்றுக் கருத்துக்கள் மதிக்கப்பட வேண்டும்.

தனது கருத்தே சரியானது என வாதிட்டு அடுத்தவர்களின் மீது திணிக்க முடியாது.

இமாம் மாலிகிடம் கலீபா அபூ ஜஃபர் அல் மன்ஸூர் மக்கள் அனைவரையும் முஅத்தாவை பின்பற்றுமாறு ஏவி அதனை அப்பாஸிய அரசின் அனைவருக்குமான சட்டமாக ஆக்கப் போவதாக கூறிய போது இமாம் மாலிக் பின்வருமாறு கூறினார்கள்: நபித்தோழர்கள் கிளை விடயங்களில் கருத்து முரண்பட்டுள்ளனர், அவர்கள் பல நாடுகளிலும் வியாபித்துள்ளனர், அவர்களின் தெரிவுக்கே அவர்களை விட்டு விடுங்கள் என்று கூறி அக்கருத்தை மறுத்தார்கள்.

இத்தகைய முன்மாதிரிகள் எமது காலத்தின் தேவையாகும்.

இன்னும் முஸ்லிம்கள் சிறுபான்மை யாக வாழும் பல்லின சமூகத்தில் நிகாப் பற்றிய இரண்டாவது கருத்தை ஏற்றுக் கொள்வது சமகால சமூக சூழலுக்கு பொருத்தமாக இருக்கின்றது. இமாம் ஷாபி ஈராக்கில் இருக்கும் போது வழங்கிய சட்டத் தீர்ப்பை எகிப்துக்கு வந்த போது மாற்றி புதிய தீர்ப்பை வழங்கியமைக்கு இதுவே காரணமாக அமைந்தது. ஷாபி மத்ஹபில் ஒரே பிரச்சினையில் பழைய தீர்ப்பு, புதிய தீர்ப்பு என இரு பத்வாக்கள் காணப் படுவது அம்மத்ஹபின் தனிப் பண்பாகும்.

சர்வதேச ரீதியில் இஸ்லாம் குற்றவாளிக் கூண்டில் நிற்க வைக்கப்பட்டுள்ள இக்கால கட்டத்தில் முகத்தை பெண்கள் மறைப்பது குற்றச்சாட்டுக்கு இன்னும் இடமளிப்பதாக அமையலாம்.

ஆகவே, கருத்து முரண்பாட்டின் போது பலமான ஆதாரங்கள் கொண்டதும், சமூக சூழலுக்கு பொருத்தமுமான கருத்தையே சட்ட அறிஞர் மேலானதாக தெரிவு செய்ய வேண்டும். அந்த வகையில் பெண்களின் முகம் மற்றும் மணிக்கட்டு வரையான கைகள் அவ்ரத் அல்ல, அவை மறைக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பது இக்காலத்தின் பத்வாவாக அமைய முடியும்.

அல்லாஹு அஃலம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கம்பஹா மாவட்ட முஸ்லிம் கல்வி – 07

# சாதாரண தரத்திற்குப் பிந்திய மாணவர் இடைவில்கல்

**கலாநிதிப் பட்டத்திற்காக றவூப் ஸெய்ன் மேற்கொண்ட கம்பஹா மாவட்ட இடைநிலைப் பாடசாலை மாணவர் இடைவிலகல் எனும் தலைப்பிலான ஆய்வின் அறிக்கை முக்கியத்தும் கருதி இங்கு பிரசுரிக்கப்படுகின்றது.**



ஆய்வுப் பரிமாற்று வசதிக்காக சாதாரண தரத்தின் பின்னர் அதாவது க.பொ.த. சா.ஃத பரீட்சையைத் தொடர்ந்து உயர் தரத்திற்குச் செல்லாமல் இடைவிலகும் மாணவர்களின் எண்ணளவுப் பெறுமானம் தனியாக நோக்கப்பட்டது. இடாப்பிலிருந்து இதற்குத் தேவையான தரவுகள் தனியாகத் திரட்டப்பட்டு அட்டவணைப்படுத்தப்படுகின்றது. தெரிவுசெய்யப்பட்ட 18 பாடசாலைகளில் 05 பாடசாலைகள் இங்கு மாதிரியாகக் கொள்ளப்படுகின்றது. பெரும்பாலும் உயர் தரத்துக்குத் தகுதி பெறாத மாணவர்களே இவ்வாறு 13 ஆண்டு கால முறைசார் கல்வியைப் பூரணப்படுத்தாமல் இடைவிலகிச் செல்கின்றனர். இதற்கான காரணங்கள் இவ் ஆய்வில் தனியாக கலந்துரையாடப்படுகின்றது.

(பார்க்க அட்டவணை -1)

சாதாரண தரத்தில் தோற்றும் மாணவர்களில் எத்தனை பேர் உயர் தரத்தில் தோற்றுகின்றனர் என்பதும் அவர்களின் வீதாசாரமும் மேலே உள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது. இறுதி நிரலில் சாதாரண தரத்திற்குப் பின்னர் இடைவிலகிச் சென்றோர் வீதமும் தரப்பட்டுள்ளது. எடுத்துக் காட்டாக, 2012 இல் 105 பேர் சாதாரண தரத்தில் தோற்றியுள்ளனர். அவர்களில் 63 பேரே உயர் தரத்தில் தோற்றியுள்ளனர். இது 60 வீதமாகும். 40 சதவீதமான மாணவர்கள் சாதாரண தரத்திற்குப் பின்னர் இடைவிலகியுள்ளனர் என்பதை மேலே உள்ள அட்டவணைக் காட்டுகின்றது. இம் மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் அல் முபாரக் தேசிய பாடசாலையில் சாதாரண தரத்திற்குப் பிந்திய இடைவிலகல் சராசரி வீதம் 28.54 ஆக உள்ளது. இதுவே இம்மாவட்டத்திலுள்ள சாதாரண தரத்திற்குப் பிந்திய ஆகக் குறைந்த மாணவர் இடைவிலகல் வீதமாகும்.

(பார்க்க அட்டவணை -2)

கம்பஹா வலயத்திலுள்ள 1AB தர அல் அஸ்ஹர் மத்திய கல்லூரியில் சாதாரண தர பரீட்சையைத் தொடர்ந்து உயர் தரத்திற்குச் செல்லாமல் இடைவிலகும் மாணவர்களின் சாராசரி வீதாரசாரம் 32.97 ஆக உள்ளது. அல் முபாரக் தேசிய பாடசாலையோடு ஒப்பிடும்போது இது அதிகமாகும்.

(பார்க்க அட்டவணை -3)

களனி வலயத்தைச் சேர்ந்த ஹுனுபிட்டிய ஸாஹிராவில் சாதாரண தரத்திற்குப் பின்னர் இடைவிலகும் மாணவர்களின் சாராசரி வீதாசாரம் 65.40% ஆக உள்ளது.

(பார்க்க அட்டவணை -4)

கம்பஹா மாவட்டத்திலுள்ள உயர் தர வகுப்பறைகளைக் கொண்ட பாடசாலைகளில் மினுவாங்கொட வலயத்திற்கு உட்பட்ட அல் அமான் வித்தியாலத்திலேயே சாதாரண தரத்திற்குப் பின்னர் இடைவிலகும் மாணவர் களின் சாராசரி வீதாரசம் ஒப்பீட்டு ரீதியில் மிக அதிகமாக உள்ளது. இப்பாடசாலையில் சாதாரண தரத்திற்குப் பிந்திய மாணவர் களின் சராசரி இடைவிலகல் வீதம் 68.86ஆ மாகும்.

(பார்க்க அட்டவணை -5)

சாதாரண தரத்திற்குப் பின்னர் மாபோல அல் அஷ்ரப் மகா வித்தியாலத்தில் உயர் தரத்திற்குச் செல்லாமல் இடைவிலகும் மாணவர் சராசரி வீதாசாரம் 65.25% ஆக உள்ளது. அதாவது சாதாரண தரத்தில் தோற்றும் மாணவர்களில் 34.78 சதவீத மாணவர்களே உயர் தரத்தில் தோற்றுகின்றனர்.

**அல் முபாரக் தேசிய பாடசாலை.**

| ஆண்டு | (சா/த) இல் தோற்றியோர். | ஆண்டு | (உ/த) இல் தோற்றியோர். | (உ/த) இல் தோற்றியோர் வீதம் | சட.த. பின்னர் இடைவிலகியோர் வீதம் |
|---|---|---|---|---|---|
| 2012 | 105 | 2015 | 63 | 60% | 40% |
| 2013 | 110 | 2016 | 77 | 89% | 11% |
| 2014 | 106 | 2017 | 62 | 63.72% | 36.28% |
| 2015 | 107 | 2018 | 75 | 77.04% | 22.96% |
| 2016 | 102 | 2019 | 66 | 67.32% | 32.68% |

(பார்க்க அட்டவணை -1)

**அல் அஸ்ஹர் மத்திய கல்லூரி**

| ஆண்டு | (சா/த) இல் தோற்றியோர். | ஆண்டு | (உ/த) இல் தோற்றியோர். | (உ/த) இல் தோற்றியோர் வீதம் | சட.த. பின்னர் இடைவிலகியோர் வீதம் |
|---|---|---|---|---|---|
| 2012 | 140 | 2015 | 104 | 74.28% | 25.85% |
| 2013 | 162 | 2016 | 103 | 63.58% | 36.42% |
| 2014 | 159 | 2017 | 105 | 66.03% | 33.97% |
| 2015 | 160 | 2018 | 108 | 67.05% | 32.49% |
| 2016 | 180 | 2019 | 115 | 63.88% | 36.12% |

(பார்க்க அட்டவணை -2)

**அல் அமான் மு.ம.வி**

| ஆண்டு | (சா/த) இல் தோற்றியோர். | ஆண்டு | (உ/த) இல் தோற்றியோர். | (உ/த) இல் தோற்றியோர் வீதம் | சட.த. பின்னர் இடைவிலகியோர் வீதம் |
|---|---|---|---|---|---|
| 2012 | 28 | 2015 | 11 | 39.28% | 60.72% |
| 2013 | 26 | 2016 | 12 | 46.15% | 53.85% |
| 2014 | 33 | 2017 | 14 | 42.42% | 57.58% |
| 2015 | 24 | 2018 | 02 | 8.33% | 91.67% |
| 2016 | 41 | 2019 | 08 | 19.51% | 80.49% |

(பார்க்க அட்டவணை -4)

**மாபோல அல் அஷ்ரப்**

| ஆண்டு | (சா/த) இல் தோற்றியோர். | ஆண்டு | (உ/த) இல் தோற்றியோர். | (உ/த) இல் தோற்றியோர் வீதம் | சட.த. பின்னர் இடைவிலகியோர் வீதம் |
|---|---|---|---|---|---|
| 2012 | 25 | 2015 | 12 | 48.00% | 52.00% |
| 2013 | 26 | 2016 | 11 | 42.30% | 57.70% |
| 2014 | 33 | 2017 | 10 | 30.30% | 69.70% |
| 2015 | 24 | 2018 | 13 | 24.00% | 76.00% |
| 2016 | 41 | 2019 | 12 | 29.26% | 70.74% |

(பார்க்க அட்டவணை -4)

**ஹுனுப்பிட்டிய ஸாஹிரா ம.வி.**

| ஆண்டு | (சா/த) இல் தோற்றியோர். | ஆண்டு | (உ/த) இல் தோற்றியோர். | (உ/த) இல் தோற்றியோர் வீதம் | சட.த. பின்னர் இடைவிலகியோர் வீதம் |
|---|---|---|---|---|---|
| 2012 | 15 | 2015 | 05 | 33.33% | 66.67% |
| 2013 | 20 | 2016 | 04 | 20.00% | 80.00% |
| 2014 | 17 | 2017 | 07 | 41.17% | 58.83% |
| 2015 | 16 | 2018 | 07 | 43.75% | 56.25% |
| 2016 | 23 | 2019 | 08 | 33.70% | 65.30% |

(பார்க்க அட்டவணை -5)

# போதைப்பொருள் பாவனையால் ஏற்படும் கோளாறுகள் (Drug Abuse Disorders)






**மதுப் பாவனை (Alcoholism)**

சமூக உளவியல் ஆய்வுகளில் மதுப் பாவனை அல்லது அது தொடர்பான பிறழ்வு நடத்தைகள் Alcoholism என்றே அறியப்பட்டது. சமகால நடத்தை உளவியல் இதனை மதுபாவனையினால் ஏற்படும் நடத்தை ஒழுங்கீனம் (Alcohol use disorder) என்று இப்பிரச்சினையை அடையாளப்படுத்துகின்றது. Jellinek எனும் சமகால பிறழ்வு உளவியல் ஆய்வாளர் மதுபாவனை மாதிரிகளைப் பொறுத்து அதனை ஐந்தாக வகைப் படுத்துகிறார்.

**1. Alpha Alcoholism**

உடல் மற்றும் உயிரியல் சார்ந்த வேதனைகளிலிருந்து விடுதலை பெறுவதற்கும் மன ஆறுதல் பெறுவதற்கும் மது பயன்படுத்தப்படுகிறது. தற்போது மதுப் பாவனையிலிருந்து தவிர்ந்திருக்கக் கூடிய நிலையிலேயே குறிப்பிட்ட பாவனையாளர் இருக்கின்றார். அதாவது மதுப்பாவனையை கட்டுப்படுத்துகின்ற ஆற்றல் இந்நிலையிலிலுள்ள பாவனையாளர்களுக்கு உள்ளது.

**2. Beta Alcoholism**

இந்நிலையும் மதுவுக்கு அடிமையான நிலை என்று கருதுவதற்கில்லை. உடலிலுள்ள நரம்பு மண்டலம் பாதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அளவுக்கதிமாக மதுவை சிலர் பாவிக்கின்றனர். மதுவின்றி வாழவே முடியாது என்ற நிர்ப்பந்தம் இப்பாவனையாளர்களுக்கு இல்லை.

**3. Gamma Alcoholism**

உளவியல் ரீதியாக மதுவுக்கு அடிமையாகும் நிலையே இது. தனது கட்டுப்பாட்டுக்கு வெளியே இத்தகைய நடத்தை பிறழ்வு இடம்பெறுகின்றது. உளவியல் ரீதியாக மதுவில் தங்கியிருப்பதனால் அதிலிருந்து விடுபடுவது கடினமாக உள்ளது.

**4. Delta Alcoholism**

மதுபானம் இன்றியும் வாழ முடியும். ஆனால், மிகவும் கடினமானது. குடிக்கும் அளவைக் கட்டுப்படுத்த முடியாது. இந்நிலையிலுள்ள மதுப் பாவனையாளர்களினால் சமூகத்திற்கு ஏற்படும் தீங்கு ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது.

**5. Epsilon Alcoholism**

இது கட்டாயக் குடி எனவும் அழைக்கப்படுகிறது. இதனால் உடனடியாக ஏற்படும் விளைவு Dipsomania எனப்படுகிறது. மது இன்றி உடல் இயங்க முடியாத நிலைக்குப் பாவனையாளர்கள் உட்படுகின்றனர். மதுவின் அளவைக் குறைப்பதோ கட்டுப்படுத்துவதோ கடினமானது. உயிரியல் ரீதியிலும் உளவியல் ரீதியிலும் மதுவின் மீது தங்கியிருக்கின்ற நிலையே இது. இது குறிப்பிட்ட பாவனையாளரின் உடல் நிலமைகளை மிக மோசமாகப் பாதிப்பதோடு காலப் போக்கில் சிந்தனை ஆற்றலையும் பாதிக்கின்றது.

பெரும்பாலான இளைஞர்கள் மதுப் பாவனையை ஒரு பாரம்பரிய நடைமுறையாகவும் குற்ற உணர்வின்றிய வழக்கமாகவுமே கருதுகின்றனர். மதுப் பாவனையின் உளவியல் தாக்கங்களிலிருந்து விடுபடுவதே இவர்கள் எதிர்நோக்கும் அடிப்படைப் பிரச்சினையாகும். ஹெரோயின் போன்ற போதைவஸ்துப் பழக்கம் உள்ளவர்களிடமும் மதுப் பாவனை இன்னும் உள்ளமை கண்டறியப்பட்டது. ஒப்பீட்டு ரீதியில் மதுப்பாவனை ஒரு சாதாரண நடத்தையாகவே இளைஞர்களால் கருதப்படுகின்றது. இதற்கான பிரதான காரணம் அதி நவீன போதைவஸ்துக்கள் மதுபானத்தின் இடத்தை நிரப்பியிருப்பதே.

பின்வரும் காரணிகள் மதுப்பாவனைக்கு அடிமையாவதை ஊக்குவிக்கின்றன.

1. உளவியல் காரணிகள் (Psychological Factors) 15%
2. சமூகப் பண்பாட்டுக் காரணிகள் (Socio Cultural Factors) 60%
3. சாத்தியமான பரம்பரைக் காரணிகள் (Possible Genetic Factors) 5%
4. பொருளாதாரக் காரணிகள் (Economic Factors) 5%
5. உயிரியல் இரசாயனக் காரணிகள் (Bio-chemical Factors) 15%

## அன்னை ஆயிஷா (றழி) அவர்களின் வாழ்வியல் – 13

# மு:.மின்களின் தாய்

### நபிகளாரின் பலதார மணம்

ரஸூலுல்லாஹ் பல பெண்களைத் திருமணம் முடித்தமையும் அறேபியத் தீபகற்பத்தில் காணப்பட்ட பல்வேறு கோத்திரங்களைச் சேர்ந்தவர்களாக அவர்கள் இருந்தமையும், அதன் மூலம் பல்வேறு பட்ட உறவுகள் வளர்ச்சியடைந்தமையும் அல்லாஹ்வின் ஏற்பாடாக இருக்கக் கூடும். அதன் மூலம் மார்க்கத்திற்கும் தஃவாவிற்கும் மிகப் பெரும் நன்மைகள் கிட்டின.

ஆயிஷா (றழி) அவர்களை இள வயதில் திருமணம் முடித்தமையிலும் அல்லாஹ்வின் ஏற்பாடு இருந்துள்ளது. ரஸூலுல்லாஹ் வோடு சேர்ந்திருக்கும் பாக்கியத்தை பல நூற்றுக்கணக்கான ஆண்கள் பெற்றார்கள். அவர்களது மார்க்க ஞானத்தைப் பெற்று ஆன்மீக ஊற்றிலிருந்து பருகினர். இருளிலிருந்து ஒளியை நோக்கி நகர்ந்தனர். கண்ணியம், மகிழ்ச்சி என்பவற்றின் உச்சத்தை அடைந்தனர்.

பெண்களைப் பொறுத்தமட்டில், இந்தப் பாக்கியம் அவர்களுக்கு வாய்க்கவில்லை. ரஸூலுல்லாஹ்வோடு சேர்ந்திருப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டவில்லை. இயல்பு வேறுபாடுகளே இதைத் தடுத்தன. ஆண்களோடு ஒப்பிடும்போது பெண்கள் நபிகளாரோடு இருப்பதற்கான வாய்ப்பு எப்படியும் இருக்கவில்லை. ஆனால், இந்த வாய்ப்பு நபிகளாரின் தூய மனைவிமார்களுக்கு அல்லாஹ்வினால் வழங்கப்பட்டது. இது அவர்களுக்குக் கிடைத்த பெரும் அருளாகும். அதன் மூலம் அல்லாஹ் அவர்களை மகத்துவமான உள அமைதியைக் கொடுத்து கண்ணியப்படுத்தினான்.

இந்த மகிழ்ச்சியையும் மனஅமைதியையும் அவர்கள் பெண் குலத்திற்குப் பரவச் செய்து இஸ்லாத்தின் தூதை எத்திவைத்தார்கள். பெண் உலகத்திற்கான தூதுவர்களாக மாறினார்கள். ஒரு தூய வாழ்வியலை அடுத்த தலைமுறைக்கு அளித்தனர். வஹி இறங்கிக் கொண்டிருந்த நேரத்தில் அதன் ஒளிக்கீற்றுக்களை அவர்கள் உள்வாங்கிக் கொண்டிருந்தனர்.

நபிகளாரை மணம் முடித்த அவர்களது மனைவிமார்கள் நுபுவ் வத்தின் அறிவுப் பொக்கிஷங்களால் பயனடைந்தனர். மிகக் குறிப்பாக ஆயிஷா (றழி) அறிவைத் தேடும் வயதில் திருமணம் முடித்து அதன் மூலம் மிகப் பெரும் பாக்கியம் பெற்றார்கள். நுபுவ்வத்தின் பள்ளியில் படிக்கும் வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது. அவரது உயர்ந்த ஆளுமையை வெளிப்படுத்துவதற்கு சந்தர்ப்பம் வாய்த்தது. நேர்வழியினதும் ஒளியினதும் கோபுரமாக அவர் மாறினார். நன்மைகளினதும் அருளினதும் ஊற்றாகவும் ஆயிஷா திகழ்ந்தார். ஆயிஷாவிடம் பெண்கள் தமது சந்தேகங்களை நிவர்த்தித்து மார்க்க அறிவை வளர்த்துக் கொண்டனர்.

ஆயிஷாவின் தந்தை அபூபக்ர் ஸித்தீக் (றழி) தனது குடும்ப உறவுகளை மிகவுமே அறிந்து வைத்திருந்த குறைஷித் தலைவராக வும் கவிதைகளில் நாட்டமுள்ளவராகவும் இருந்தார். இஸ்லாமிய கவிஞர்களுக்கு அறேபியர்களின் குல வழியை அறிவிப்பதில் ஆலோசகராக இருந்த அபூபக்ர் கவிஞராகவும் விளங்கினார். அவரது பாசறையில் பயின்ற ஆயிஷா, தனது தந்தையிடமிருந்து குலவழி அறிவைப் பெற்றதோடு, கவிதைத் துறையிலும் ஈடுபாடு காட்டி னார். எனினும் அவர் மதிநுட்பமும் அபார விளங்கும் ஆற்றலும் கொண்டிருந்தார். அவரது சமகாலப் பெண்களை மட்டுமன்றி, ஆண்களை விடவும் இந்த அபார மதிநுட்பம் அவரை வேறுபடுத்திக் காட்டியது. செய்திகளை, குலவழியை நினைவில் வைத்திருப்பதில் அபூர்வ ஆற்றல் அவரிடமிருந்தது. மொழியிலும் தனித்த பாணியைக் கையாண்டார். அறேபிய மூலாதாரங்களிலிருந்து அவர்கள் பற்றிய செய்திகளை நன்கு அறிந்து வைத்திருந்தார். இது அவரது தந்தையிடமிருந்து அவர் பெற்றவை எனலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21/4க்குப் பிந்திய.... (11 ஆம் பக்கத் தொடர்)

அதேபோல அவர்களது இடுகைகளினால் என்னென்ன பாதிப்புக்கள் வரப் போகின்றன, அதனுடைய அபாயங்கள், விபரீதங்கள் என்ன என்பது பற்றி இளைஞர்களுக்கு தொடர்ச்சியாக ஞாபகப்படுத்த வேண்டும். சமூக ஊடகங்கள் இளைஞர்களிடமிருந்து பிரிக்க முடியாத அங்கமாக இருப்பதனால் அதனை எப்படி ஆக்க பூர்வமாகப் பயன்படுத்துவது என்பது தொடர்பில் அவர்களை விழிப்பூட்ட வேண்டும். சமூக ஊடகங்களில் மூழ்கிப் போனவர்கள் பொய்யான உலகிலேயே வாழ்கிறார்கள். அவர்களை சமூகத்துடன் பழக விட்டு சமூகப் பிரக்ஞை உள்ளவர்களாக மாற்றுவது இதற்கான நிரந்தரத் தீர்வாக அமைய முடியும்.

பொதுவாக முஸ்லிம் சமூகத்திலுள்ள இளைஞர்களிடம் தங்களது எதிர்காலம் பற்றிய சிநதனை அதிகமாகவே தலையெடுக்கத் தொடங்கியுள்ளது. கல்வி பெறுதல், பின்னர் கல்விக்கேற்ற தொழிலொன்றைப் பெறுதல் என்பன போட்டித் தன்மையாக மாறிப் போனதால் சிலருக்கு இவை எட்டாக்கனியாகவும் மாறியிருக்கிறது. இது இளைஞர்களை விரக்தி நிலைக்குக் கொண்டு செல்ல முடியும். விளிம்பு நிலையில் உள்ள இளைஞர்கள் வித்தியாசமான செயல்களில் ஈடுபடுவதற்குத் தூண்டப்படுவதற்கான வாய்ப்பு அதிகமாகவே இருக்கிறது. அதனால் இளைஞர்களை வழிப்படுத்துவதிலும், அவர்களிடம் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதிலும் அவர்களைச் சமூக விவகாரங்களில் பங்கெடுக்கச் செய்வதிலும் அதிக அக்கறை காட்ட வேண்டும். இளைஞர்களுக்கு சார்பு நிலையில் சிந்திக்கச் செய்யக் கூடியவாறான நிகழ்ச்சிகளையும் வழிகாட்டல்களையும் வழங்குதலும் பொருத்தமானதாக அமையும்.

ஊர்களிலே சிலரிடம் பணப்புழக்கம் திடீரென அதிகரிக்கும் பொழுது அது தொடர்பில் தேடிப்பார்ப்பது முக்கியமானது. அதே போல வெளி இடங்களில்




இருந்து ஊர்களுக்கு குடியிருப்புக்காக வருபவர்கள் மீது ஒரு கண் இருப்பதும் முக்கியமானது.

இலங்கை முஸ்லிம் சமூகம் பொதுவாக மூடுண்ட சமூகமாகவே வாழப் பழகியிருக்கிறது. இது தான் தனது நம்பிக்கையைப் பாதுகாப்பதற்கான சிறந்த வழி என அது நினைக்கிறது. இஸ்லாம் போற்றி வளர்க்கப்பட்ட பூமியில் அது தனித்து வளர்க்கப்படவில்லை என்பதை அது மறந்து விடுகிறது. இதனால் கலந்து வாழ்ந்தால் கரைந்து போய் விடுவோம் என்ற பயத்தில் அது ஒதுங்கியே வாழ நினைக்கிறது. தமது மதத்தை மிஷனரிகளிடம் இருந்து பாதுகாக்கும் நோக்கில் ஆங்கிலம் படிப்பதைத் தவிர்ப்பதற்கு முன்னைய தலைவர்கள் எடுத்த முடிவையே அது இன்றும் நடைமுறைப்படுத்தப் பார்க்கிறது. இதனால் அடுத்த சமூகத்தில் வாழ்பவர்களைப் பற்றி அது அறியாமல் வாழ்கிறது. தமது வாழ்வொழுங்கைப் பற்றி அடுத்தவர்களுக்குப் புரிய வைக்காமல் மறைந்து வாழ்கிறது. இதற்கு முக்கிய காரணம் கலந்து வாழ்வதன் ஊடாக தாம் தமது மத நம்பிக்கைகளில் இருந்து தூரமாகி விடுவோம் என்பது தான். தம்மில், தாம் ஏற்றுக் கொண்டிருக்கின்ற நம்பிக்கையில் தமக்கு விசுவாசம் இல்லை என்பதையே இது உணர்த்துகிறது. இந்தத் தடையை முஸ்லிம் சமூகம் தாண்ட வேண்டும். ஏனைய சமூகங்களுடனும் கலந்து வாழும் ஒழுங்கை அவர்கள் அமைத்துக் கொள்ள வேண்டும். தங்களது விவகாரங்களில் அடுத்த சமூகத்தாரையும் பங்கு கொள்ள வைக்க வேண்டும். அடுத்த சமூகங்களினது நிகழ்வுகளிலும் முஸ்லிம் சமூகம் பங்கெடுக்க வேண்டும். மதரீதியான பாடசாலைகளை இல்லாதொழிப்பதற்கு முன்னர் எமது பாடசாலைகளை நாங்கள் எவ்வளவு தூரம் நாட்டின் இன நல்லுறவுக்குப் பயன்படுத்தி இருக்கிறோம் என்று சிந்திக்க வேண்டும். பாடசாலை விளையாட்டுப் போட்டி என்று வரும் போது கூட பக்கத்தில் உள்ள சிங்களப் பாடசாலைகளைத் தவிர்த்து தூர இடங்களில் உள்ள முஸ்லிம் பாடசாலைகளில் இருந்து மத்தியஸ்தர்களைக் கொண்டு வரும் நிலையிலேயே முஸ்லிம் சமூகம் இருக்கிறது. பக்கத்தில் உள்ள பாடசாலைகளுடன் உறவைப் பேணுவதற்கான வழிமுறைகளை முஸ்லிம் பாடசாலைகள் வகுக்க வேண்டும்.

பெரும்பான்மை பௌத்தர்கள் இது பௌத்த நாடு என்று சொல்லும் போது மனதுக்குள் நெருடுவது போல இந்த நாட்டை முஸ்லிம் நாடு போல முஸ்லிம் சமூகம் கருதிச் செயற்பட்டால் அது அடுத்தவர்களை நெருடத் தான் செய்யும். இது பல்லினங்கள் வாழுகின்ற நாடு என்பதை மனதளவில் முஸ்லிம் சமூகம் ஏற்று அதற்கேற்ப தனது வாழ்வொழுங்கை அமைத்துக் கொள்வதன் ஊடாக முஸ்லிம் சமூகம் ஒரு போதும் நாட்டுக்கு எதிராக பயங்கர வாதத்தை கட்டவிழ்த்து விடாது என்பதையும், அதற்குத் துணை போகவும் மாட்டாது என்பதையும் எடுத்துக் காட்ட வேண்டும். இந்தச் சந்தேகத்தைப் போக்க முடியுமென்றால் முஸ்லிம் சமூகம் இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதில் பெரும் பங்கு வகிக்க முடியும்.

## தேர்தலில்.... (01 ஆம் பக்கத் தொடர்)

கடந்த 2006 ஆம் ஆண்டு தொடக்கம் தேர்தல் கண்காணிப்பு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது. இதன் வேலை குறிப்பாக பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் பற்றியமாகும். 2019 தேர்தலுக்கு அப்பால் 25 மாவட்டங்களுக்கும் தனித் தனியாக கண்காணிப்பாளர்களும் தேர்தல்கள் கண்காணிப்பாளர்களும் 180 பேரும் இத்தேர்தல் கண்காணிப்புகளில் ஈடுபடுகின்றனர்.

TISL சகல வேட்பாளர்களுக்கும் அரசியல் கட்சிகளுக்கும் பொது அவலுவலர்களையும் தேர்தல் ஆணைக்குழுவால் வழங்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகக்கும் ஏற்ப செயற்படுமாறு வேண்டுகிறது. குறிப்பாக 2141/52 எனும் விசேட வர்த்தமானி அறிவித்தலிலுள்ள விதிகள் பற்றி மேலதிக அவதானம் செலுத்தப்பட வேண்டும். அதன் படி அரச உத்தியோகத்தர்களது நடவடிக்கைகளுக்காக அரசுக்குச் சொந்தமான வாகனங்களை பாவித்தல், விசேட பொது நிகழ்வுகளை ஏற்பாடு செய்தல் என்பன இதில் அடங்கும்.

TISL நிறைவேற்றுப் பணிப்பாளர் அசோக்க ஒபேசேக்கர தெரிவிக்கையில், சகல உள்ளூராட்சி மன்றங்கள் தொடக்கம் அரச முதலீட்டு கூட்டுத்தாபனங்கள் வரையிலான சகல அரச ஊழியர்களும் தேர்தல் சட்டத்தை மீறினால் ஏற்படும் தண்டனைகள் தொடர்பாக அறிந்திருப்பது மிகவும் அவசியமாகும் என தெரிவித்தார். தேர்தல் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட சட்டதிட்டங்களுக்கு அமைவாகச் செயற்படாத பட்சத்தில் அரசியலமைப்பின் உறுப்புரை 104 GG இன் பிரகாரம் மூன்று வருடங்கள் வரை சிறைத் தண்டணை விதிக்கக்கூடிய குற்றமாகும்.

கடந்த காலங்களில் சிரேஷ்ட அரச அதிகாரிகள் உள்ளிட்டவர்கள் குற்றம் சாட்டப்படுவதற்கும் காரணமாய் அமைந்திருந்தது. ஆகையால், தேர்தல் காலங்களின் போது பொதுச் சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யும் சம்பவங்கள் குறித்து அரச அலுவலர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்க வேண்டும். இதுபோன்ற நிகழ்வுகள் மீண்டும் நிகழாமல் தடுக்க இந்த எடுத்துக்காட்டுகள் உதவும் என்று நாம் நம்புவதோடு அரசியல் தலையீட்டிலிருந்து தங்களை பாதுகாத்துக்கொள்ள அரச ஊழியர்களுக்கு இவை உதவும் என்றும் அவர் தெரித்தார்.

## திகன... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்தத் தாக்குதல்களின் போது அரச படைகள் இனவாதிகளுக்குச் சார்பாக நின்று முஸ்லிம் சமூகத்தின் மீது அத்துமீறியமைக்கான பல சான்றுகளை தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்கள் சேகரித்துள்ளனர். இந்தத் தாக்குதல்களின் பின்னணியில் அரசாங்கம் இருந்திருப்பதாக அவர்கள் சந்தேகிக்கின்றனர். இதனால் அரசாங்கத்திடம் முறையிடுவதால் பயனில்லை என்ற நிலையில் அவர்கள் இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தனர்.

சம்பவம் நடந்து ஒரு வருடம் கடந்த நிலையில் மீள்பார்வை இது தொடர்பில் வினவியபோது, மாவனல்லை புத்தர் சிலை உடைப்பு விவகாரத்தையும் சேர்த்து அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக மனித உரிமைகள் ஆணைக் குழுவினால் அறிவிக்கப்பட்டது.

தற்பொழுது ஒன்றரை வருடங்கள் கடந்தும் இந்த அறிக்கை வெளிவராதிருப்பது தொடர்பில் விசாரித்த போது ஈஸ்டர் தாக்குதல்களையும் சேர்த்து அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

## முஸ்லிம் சமூகம்... (07 ஆம் பக்கத் தொடர்)

செல்வதைத் தடுத்தாலும் ஐ.தே.க. வாக்குகள் அண்ணளவாக 37% இற்குள் மட்டுப்படுத்தப்பட பெரமுன வாக்குகள் 40% வீதத்தை தாண்டும். அது தன் வெற்றியை உறுதிசெய்யும் என்று நம்புகிறார்கள்.

**முஸ்லிம் வேட்பாளர் ஒருவர் களமிறங்கியிருப்பது முஸ்லிம்களது வாக்குகளில் எவ்வகையான மாற்றங்களை ஏற்படுத்தும் என நீங்கள் கருதுகிறீர்கள்?**

முஸ்லிம்கள் தனித்துப் போட்டியிடுவது கொள்கை ரீதியாக பிழையான விடயமல்ல. அவ்வாறாயின் அனைத்துக் கட்சிகள், அமைப்புகள் ஒன்றிணைந்து இதய சுத்தியோடு சமூகத்திற்காக ஒரு தீர்மானத்தை எடுத்து இரண்டாம் வாக்கை பொருத்தமான ஒருவருக்கு வழங்கலாம். அது வேறு விடயம். ஆனால் ஒரு தரப்பின் கைக்கூலியாக வந்து முஸ்லிம்களின் வாக்குகளைக் கூறு போட்டு முஸ்லிம்களுக்கு அநியாயம் செய்து தான் தனது தனிப்பட்ட நலன்களை அடைய முற்படுவது மனவேதனையளிக்கிறது.

முஸ்லிம் வாக்குகள் சுமார் 15 லட்சம் இருக்கின்றன. இதில் வாக்குகளை கூறு போட நினைப்பவர்கள் மூன்று லட்சம் வாக்குகளையாவது பெற வேண்டும் என இலக்கு வைக்கிறார்கள். இது இவர்களது எஜமானர்கள் சொல்லிக் கொடுத்தது. மூன்று லட்சம் என்பது 10% முஸ்லிம் வாக்குகளில் 2% ஆகும். அளிக்கப்படும் செல்லுபடியான வாக்குகளில் சுமார் 3% ஆகும். இன்னுமொரு 2% நேரடியாக அந்தத் தரப்புக்கு போனாலும் முஸ்லிம்களின் 10% வாக்குகளில் 5.10% வீத வாக்குகள் பிரிக்கப்பட்டு விட்டன. எனவே ஐதேகவின் வாக்குகளில் 5.10% உடைக்கப்பட்டுவிட்டதாகி விட்டது. இது போன்று ஓரளவு தமிழ் மற்றும் மலையக தமிழ் வாக்குகளையும் பிரிக்க முடியுமானால் இலக்கை இலகுவாக அடையலாம்.

எனவே, நமது கண்களை நமது விரல்களை கொண்டு குத்துவதற்கு நம்மவர்களே துணைபோய்க் கொண்டிருக்கிறார்கள். இவர்களின் திட்டம் சரியாக வேலை செய்யாவிட்டால் இவர்களே ஆட்களைப் போட்டு மறைமுகமாக ஜேவிபிக்கு ஆதரவளிக்க முஸ்லிம்களைத் தூண்டத் தயங்க மாட்டார்கள். சகல விடயங்களையும் சீர்தூக்கி ஆராய்ந்து முஸ்லிம் சமூகம் ஒன்றுபட்டு தீர்மானிக்க வேண்டிய சமயத்தில் உள்ளனர்.

## காவியைக்... (01 ஆம் பக்கத் தொடர்)

ஆயுதப் போராட்டம் மௌனித்த பின்னர் தமிழ் மக்கள் அநாதரவாக விடப்பட்டார்கள் என சிங்கள பௌத்த பிக்குகள் நினைக்கிறார்கள் போலுள்ளது. ஒருசில பௌத்த மதகுருமார் காவி உடை அணிந்து தமிழ் இனத்தை மிக மோசமாக நடத்த முயற்சிக்கின்றனர். எம்மைப் பொறுத்தமட்டில் காவி உடை புனிதமானது. காவி உடையைக் களைந்து விட்டு ஞானசார தேரர் சண்டித் தனத்தைக் காட்டட்டும் பார்க்கலாம் என அவர் சூளுரைத்தார்.

## ஒரே நாடு... (01 ஆம் பக்கத் தொடர்)

தொடர்பில் தேசிய மக்கள் சக்தியின் பங்காளியான நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் தவிசாளரிடம் மீள்பார்வை கேள்வி எழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் நாங்கள் அனுர குமார திசாநாயக்கவிடம் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அவர் இதற்கு இணங்கி வரக் கூடிய நிலையில் இருக்கிறார். பகிரங்க ஆவணங்களில் அவர்கள் இந்தக் கருத்தை எப்படி வெளியிடப் போகிறார்கள் என்பது தெரியாது. இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்துடனும் கலந்துரையாடியிருக்கிறோம் எனவும் அவர் தெரிவித்தார்.

## 21/4 தாக்குதல்... (01 ஆம் பக்கத் தொடர்)

இனங்காட்டுதல், முன்கூட்டியே சட்ட நடவடிக்கை எடுக்கத் தவறிய அதிகாரிகளை இனங்காணுதல், தாக்குதலின் பின்னர் சொத்துக்கள் மற்றும் நபர்களுக்கு சேதங்களை விளைவித்து, அதன் மூலம் பொதுமக்கள் மத்தியில் அமைதியின்மையை ஏற்படுத்திய பொது ஆர்ப்பாட்டங்கள், நாசகாரச் செயல்களுடன் சம்பந்தப்பட்ட ஆட்கள் மற்றும் நபர்களை இனங்காணுதல், நாட்டில் இனவாத, மதவாத குழப்பங்களை ஏற்படுத்துவதற்கு உடந்தையாய் இருந்தவர்களை இனங்காணுதல், ஈஸ்டர் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு நிதி மற்றும் ஏனைய உதவிகளைச் செய்தவர்களை இனங்காணுதல் போன்ற விடயங்கள் தொடர்பில் இந்த ஆணைக் குழுவிடம் முறைப்பாடு செய்ய முடியும்.

முறைப்பாடுகளை பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டிய முகவரி - 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இடம்பெற்ற குண்டு வெடிப்புகள் தொடர்பாக புலனாய்வு செய்து விசாரணைகளை மேற்கொண்டு அறிக்கையிடுதல் அல்லது தேவையான நடவடிக்கைகளை எடுத்தலுக்கான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு, முதலாம் மாடி, புளொக் இல 05, பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம், பௌத்தாலோக்க மாவத்த, கொழும்பு 07. தொலைபேசி 0112 669135, தொலைநகல் 0112 677673, மின்னஞ்சல் iiirpci@gmail.com

## முகத்திரை... (12 ஆம் பக்கத் தொடர்)

இன்னும் முஸ்லிம்கள் சிறுபான்மையாக வாழும் பல்லின சமூகத்தில் நிகாப் பற்றிய இரண்டாவது கருத்தை ஏற்றுக் கொள்வது சமகால சமூக சூழலுக்கு பொருத்தமாக இருக்கின்றது. இமாம் ஷாபி ஈராக்கில் இருக்கும் போது வழங் கிய சட்டத் தீர்ப்பை எகிப்துக்கு வந்த போது மாற்றி புதிய தீர்ப்பை வழங்கி யமைக்கு இதுவே காரணமாக அமைந்தது. ஷாபி மத்ஹபில்

ஒரே பிரச்சினையில் பழைய தீர்ப்பு, புதிய தீர்ப்பு என இரு பத்வாக்கள் காணப்படுவது அம்மத்ஹபின் தனிப் பண்பாகும்.

சர்வதேச ரீதியில் இஸ்லாம் குற்றவாளிக் கூண்டில் நிற்க வைக்கப்பட்டுள்ள இக்கால கட்டத்தில் முகத்தை பெண்கள் மறைப்பது குற்றச்சாட்டுக்கு இன்னும் இடமளிப்பதாக அமையலாம்.

ஆகவே, கருத்து முரண்பாட்டின் போது பலமான ஆதாரங்கள் கொண்துடம், சமூக சூழலுக்கு பொருத்தமான கருத்தையே சட்ட அறிஞன் மேலானதாக தெரிவு செய்ய வேண்டும். அந்த வகையில் பெண்களின் முகம் மற்றும் மனிக்கட்டு வரையான கைகள் அவ்ரத் அல்ல, அவை மறைக்கப்பட வேண்டிய அவசியம் இல்லை என்பது இக்காலத்தின் பத்வாவாக அமைய முடியும்.

அல்லாஹு அஃலம்.

## பௌத்தமும்... (07 ஆம் பக்கத் தொடர்)

**மங்கள சமரவீர**

இந்தப் பின்னணியில் தனது வாக்கு வங்கியையும் பொருட்படுத்தாது, பிக்குகளை சந்தோஷப்படுத்துவதையும் எதிர்பார்க்காது நிதியமைச்சர் மங்கள சமரவீர பேசி வருவது அவரை விஷேடமானவராக இனங்காட்டி வருகிறது. இலங்கை ஒரு பௌத்த நாடல்ல, அது இலங்கையர் அனைவருக்கும் உரித்தான நாடு. அதில் பெரும்பான்மையாக சிங்கள பௌத்தர்கள் வசிக்கிறார்கள் என அவர் கூறியிருக்கிறார்.

இந்த நாட்டில் கிறிஸ்தவர்கள், கத்தோலிக்கர்கள், இந்துக்கள், முஸ்லிம்கள் உட்பட பல இனத்தவர்களும் வாழ்கிறார்கள். சிங்கள பௌத்தர்களுக்குரிய அனைத்து உரிமைகளும் இவர்களுக்கும் இருக்கின்றன. சிங்கள பௌத்தர்கள் பெரும்பான்மையாக இருப்பதன் காரணமாக அவர்களுடைய கருத்தை அடுத்தவர்கள் மீது திணிக்க முடியாது எனவும் அவர் கூறியிருக்கிறார்.

சில ஒப்பீடுகளையும் அவர் எடுத்துக் காட்டுகிறார். எங்களில் பலரும் வெளிநாடுகளுக்கு பயணம் சென்றிருப்போம். அல்லது எங்களது உறவினர்கள் அங்கு இருப்பார்கள். இத்தாலிக்கோ பிரித்தானியாவுக்கோ நீங்கள் சென்றால் அந்த நாட்டின் குடிகளாவே நீங்கள் உணர்வீர்கள். இரண்டாம் தரப் பிரஜைகள் என்ற ஒன்று அங்கில்லை எனவும் அவர் சுட்டிக் காட்டுகிறார்.

இன்று நாட்டின் பிரஜையாக மாறிய வருக்கும், ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் பிரஜையாகியவருக்கும் ஒரே அளவான உரிமை இருக்கிறது.

**காலம் பதில் சொல்லும்**

இது சிறுபான்மை மக்களின் காதுகளில் தேனாகப் பாய்ந்தாலும் சிங்கள சமூகத்தில் உள்ள பலரினதும் குறிப்பாக மேலாதிக்க உணர்வுள்ளவர்களிடம் நிச்சயமாக இது எரிச்சலைக் கிளப்பியிருக்கலாம். ஆனாலும் துதிபாடிக் கொண்டு முகஸ்துதியாய் நடந்து கொள்கின்ற ஏலத்தில் விடப்படுகின்றவர்களுக்கு மத்தியில் இந்தக் கூற்று கவனிக்கப்பட வேண்டியதாகும்.

மங்கள சமரவீரவும் அநுர குமார திசாநாயக்கவும் எடுத்திருக்கின்ற இந்த முன்னெடுப்புக்கள், பிக்குகளையும் பௌத்தத்தையும் உள்ளடக்கிச் செய்யப்படும் அரசியலுக்கு முன்னால் சிறந்ததொரு அத்திவாரமாக அமையும் என எதிர்பார்க்க முடியும். புத்தரின் போதனைகளுக்கேற்ப தமது கொள்கைகளையும் செயற்பாடுகளையும் கருத்துக்களையும் மீள வடிவமைத்துக் கொள்வதற்கு பௌத்த பிக்குகளுக்கு இது சிறந்த சந்தர்ப்பமாகும்.


மீள்பார்வை **உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661. People's Bank A/C: 056100153078164 (Branch: Sri Sangaraja Mawatha)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறைப்பாடு

| இல | பெயர் | முகவரி | வேறு பெயர்கள் | வயது | அங்கத்துவம் |
|---|---|---|---|---|---|
| 126 | முஹம்மத் இப்ராஹிம் முஹம்மத் நவுபர் | 144, அரக்யால, கெகுணகொல்ல | | 41 | NTJ |
| 127 | முஹம்மத் ஸவாஹிர் முஹம்மத் ஹஸன் | 99/1/1 மாளிகாவத்த வீதி, கொழும்பு 10 | | 26 | JMI |
| 128 | உமைர் மொஹமட் இக்பால் | 55, ஹரி ஜோன்ஸ் வீதி, மாத்தளை 34 ஏ, பாத்திய மாவத்தை, தெஹிவல | அபூ ஆபியா | 25 | JMI |
| 129 | முஹம்மது அக்ரம் ஹக்கம் | 186, கல்வல வீதி, தெஹிவல | | 24 | JMI |
| 130 | முயினுதீன் இன்சாம் அஹமட் | 213/3, கல்விஹார வீதி, பண்டாரநாயக்க மாவத்த, தெஹிவல | | 24 | JMI |
| 131 | முஹமட் இப்திகார் முஹமட் இன்சாப் | 73, மலிபன் வீதி, கொழும்பு 12<br>10/89, ஸ்ரீகல்யாணி கங்காராம வீதி, மட்டக்குலிய, கொழும்பு 15 | | 26 | JMI |
| 132 | அப்துல் காதர் மொஹமட் ஷாஸ்னி | ஏஎப் 137/9, எட்மன்ட் மாவத்த, மிலித்துவ, காலி 64, பொக்குன வீதி, கௌடான | | 30 | JMI |
| 133 | முஹம்மத் பாரூக் முஹம்மத் ஹிலாம் | 443, சென்ட் பீட்டர்ஸ் வீதி, தழுவ கொட்டுவ, கொச்சிக்கடை, நீர்கொழும்பு<br>7 ஏ, திருச்சபை வீதி, உடதலவின்ன மடிகே<br>18/5, உடதலவின்ன, பாததும்புர, கண்டி | அபூ ஹய்தம் | 33 | தகவல் கிடைக்க வில்லை |
| 134 | ஹுஸைனுல் ரிஸ்வி காலித் சமீர் | 30/26 ஏ, சத்தர்ம மாவத்த, மாளிகாவத்த, கொழும்பு 10 | | 24 | JMI |
| 135 | ஹயாது முஹம்மத் முஹம்மத் மில்ஹான் | 45/5, மௌலானா வீதி, காத்தான்குடி 03<br>45/5, எப்.சி.வீதி, காத்தான்குடி 03 | அபூஷிலா | 30 | JMI |
| 136 | முஹம்மத் இப்ராஹிம் சாஹித் அப்துல் ஹக் | டி/10/8, தெல்கஹகொட, ஹிங்குல | அபூபலா | 27 | த.கி. |
| 137 | முஹம்மத் இப்ராஹிம் சாதிக் அப்துல் ஹக் | டி/10/8, தெல்கஹகொட, ஹிங்குல | சாதிக் அப்துல்லா. அபூ உமர் | 30 | த.கி. |
| 138 | முஹம்மத் சரீத் ஆதம் லெப்பை | மீன்பிடி நிலைய வீதி, புதிய காத்தான்குடி 03<br>87/29, கடல் வீதி, புதிய காத்தான்குடி 03 | கபூர் மாமா/ அபூ ஹடீட் | 55 | த.கி. |
| 139 | மொஹமட் இன்பாஸ் இனாயதுல்லா | 4/128, கௌதான வீதி, தெஹிவல<br>13/2, மஹிந்தாராம வீதி, ரத்மலான | | 26 | JMI |
| 140 | அப்துல் லதீப் மொஹமட் ஷாபி | தல்கஹவெவ, ரபாவ | அபூ புர்கான் | 46 | JMI |
| 141 | மொஹமட் மன்சூக் மொஹமட் ரிலா | 522/பீ, ஸம்ஸம் வீதி, மருதமுனை | அபூலிபா | -- | த.கி. |
| 142 | சேகு முனாஜிது முஹிதீன் கானி | ஆடியபுளியங்குளம்,செட்டிக்குளம்<br>242, முதலியார்குளம், செட்டிக் குளம், வவுனியா | | 37 | த.கி. |
| 143 | முஹம்மட் சுஹைர் முஹம்மட் அரூஸ் | 340, பிரதான வீதி, பலாங்கொட 340, மஹவீதிய, பலகஹமுல, பலாங்கொட<br>182/45, துனுமடலகஹவத்த வீதி, கொரக்கமட, பலாங்கொட | அபூ ஏஷியா | 39 | NTJ |
| 144 | தாஜுதீன் மொஹமட் தவுசி | 11, 13 ஆவது தெரு, கொழும்பு 03<br>6, மல்லிகா மாவத்த, கொழும்பு 09<br>ஏ10/2/4, தேவீ திட்ட வீடு, மாளிகாவத்தை, கொழும்பு 10<br>6/3/1, மல்லிகாராம வீதி, கொழும்பு 09 | தவுசி தாஜுதீன் / மொஹமட் தவுசி தாஜுதீன் | 37 | த.கி. |
| 145 | இஷாக் அஹமட் முஹமட் முஹ்சீன் | 41, டீ.எம். கொலபாகே மாவத்த, கொழும்பு 05<br>3/2, குருந்துகொல்ல மாவத்த, கொழும்பு 05 | | 44 | த.கி. |
| 146 | யூசுப் மொஹமட் இப்ராஹீம் | 658/90, மஹாவில தோட்டம், கொழும்பு | | -- | த.கி. |
| 147 | அப்துல் காதர் பாதிமா ஹாதியா. | 382/3, கெக்குனகொல்ல, கட்டுபொத்த | சித்தியா | 24 | த.கி. |
| 148 | மொஹமட் ரமீன் மொஹமட் சாஜிக் | 50/9, கிரிங்கதெனிய, மாவனல்ல | அபூ நஜா | 27 | த.கி. |
| 149 | முஹம்மது மன்சூர் மொஹமட் பைரூஸ் | மத்திய வீதி, 5 ஆவது கொலனி, புதிய காத்தான்குடி 03 | | 38 | NTJ |
| 150 | மொஹமட் இஸ்மாயில் ஹுஸ்னி முபாரக் | 326, லீடர் அஷ்ரப் வீதி, மருதமுனை 03<br>427, பிரதான வீதி, மருதமுனை 06 | | 31 | த.கி. |
| 151 | முஹம்மது அமீஸ் முஹம்மத் ஆதில் | 75, எஸ்.எம்.வீதி, தர்கா டவுன் | | 24 | த.கி. |
| 152 | மொஹமட் ஹமாஸ் மொஹமட் ஹஸீம் | 210, மொஹிடீன் மஸ்ஜித் வீதி, கொழும்பு 10 | | 25 | த.கி. |
| 153 | பாதிமா சிபானா ஒமார் காத்தா | 125/23, லன்சியாவத்த, வெல்லம்பிட்டிய | | 32 | த.கி. |
| 154 | அப்துல் அஸீஸ் ரூமி | 9/14/3, சமகி இடம், சரிக்கமுல்லை, பானந்துரை | | 48 | த.கி. |
| 155 | மொஹமட் பவுமி ஷப்னம் மினாஷா | 14/1, திஸ்ஸ மாவத்த, கல்வல வீதி, தெஹிவல<br>298 ஏ, கடவத வீதி, நெதிமால, தெஹிவல | | 28 | த.கி. |
| 156 | மொஹமட் இமாத் இப்திசாம் பகீர் | 14/1, திஸ்ஸ மாவத்த, கல்வல வீதி, தெஹிவல<br>298 ஏ, கடவத வீதி, நெதிமால, தெஹிவல | | 33 | த.கி. |
| 157 | மொஹமட் யுனைஸ் மொஹமட் அமீன் | 58/10, துடுகெமுனு வீதி, பேலியாகொட அவுஸ்திரேலியா | | 45 | NTJ |
| 158 | மொஹமட் பஷீர் மொஹமட் பஷான் | 93, எஸ்.எம்.வீதி, தர்கா நகர், அளுத்கம | | 25 | த.கி. |
| 159 | மொஹமட் சுஹைர் மொஹமட் ரிஸ்வான் | 24/26, ஆரச்சிகே வத்த, மாபோல, வத்தளை | | 38 | த.கி. |
| 160 | மொஹமட் சரூக் மொஹமட் மனாசிர் | 455/6, கால்லெகம, ககுனுகொல்ல, கடுபொத | | 27 | த.கி. |
| 161 | தென்னவளவ்வேகெதர ஐதுரூஸ் நிஜாம்டீன் மொஹமட் சஹீ | 01, ஈஎஸ்எம் வத்த, அநுராதபுர வீதி, புத்தளம் | | 35 | த.கி. |
| 162 | மொஹமட் ராசிக் மொஹமட் ரிஸ்வி | 863, பாத்திமா அரிசி ஆலை வீதி, கனேதன்ன, ஹிங்குல | | 39 | த.கி. |
| 163 | மொஹமட் முஸ்தபா மொஹமட் ரிஸ்வான் | 23, தெல்கஹகொட, ஹிங்குல | | 42 | த.கி. |
| 164 | மொஹமட் அன்சார் மொஹமட் ரினாஸ் | டீ 42/5/1, நயாவல, மாவனல்லை | | 30 | த.கி. |
| 165 | ராஜகோபால முதியான் சேலாகே இஸ்மாயில் முஹம்மது நசீர் | 217, நிகபிடிய, மண்டபால, ஹெட்டிபொல | | 41 | த.கி. |
| 166 | முஹம்மது முக்தார் ஆஷிக் ரஷாத் | 97 பீ, தவுலுகல வீதி, எழுகொட, ஹேன்தெனிய, பேராதனை | | 29 | த.கி. |
| 167 | ஷாஹுல் ஹமீத் ஹிஸ்புல்லாஹ் | பதுரியா வீதி, சில்மியாபுர, வெலிமட | | 21 | த.கி. |
| 168 | மொஹமட் தாஜுதீன் ஆஷிப் அஹமட் | 55/1, வில்பொல வீதி, திப்பிட்டிய, அரநாயக்க | | 20 | த.கி. |
| 169 | மொஹமட் அன்வர் மொஹமட் ரிஸ்கான் | 12/24, 2 ஆவது ஒழுங்கை, சுபாரதிபுர, குளியாப்பிட்டி | அபூ தாரிக் | 44 | த.கி. |
| 170 | மொஹமட் மன்சூர் மொஹமட் சனஸ்தீன் | ஏ 45, தர்காவத்த, கம்பொல | அபூ மிசான் | 38 | த.கி. |
| 171 | அப்துல் மனாஸ் முஹம்மது பிர்தௌஸ் | கடல்வீதி, புதிய காத்தான்குடி 03 | அபூ குதாபா | 35 | த.கி. |
| 172 | ஹம்ஸா மொஹிதீன் மொஹமட் இம்ரான் | எம்.ஜே.எம்.தெரு, புதிய காத்தான்குடி 03, காத்தான்குடி தெற்கு | முறைப் பாடு | 31 | த.கி. |
| 173 | அபூ ஹனிபா முஹம்மத் முபீஸ் | 53, 3 வது லேன், மன்னார் வீதி, புத்தளம் | அபூ தடா | 25 | த.கி. |
| 174 | அமீர் ஹம்ஸா மொஹமட் ஹமாஸ் | 51, 1 ஆவது லேன், ஸ்பில் வீதி, புத்தளம் | அபூ ஷாபியா | 25 | த.கி. |
| 175 | ரஷீத் மொஹமட் இப்ராஹிம் | டீ 10/8, தெல்கஹகொட, ஹிங்குல, மாவனல்லை | அபூ அப்துர் ரஹ்மான் | 56 | த.கி. |
| 176 | மொஹமட் ஷாபி மொஹிடீன் அப்துல் கதீர் | 25, ரிதீதென்ன, புனானி, வாழைச்சேனை | அபூ சுலைமான் | 48 | த.கி. |
| 177 | மொஹமட் ஹனிபா செய்னுல் ஆப்தீன் | ஏ 123/5, ஹொன்தெனியகொட, மாவனல்லை, ஹிங்குல் ஓய | அபூ கினா | 52 | த.கி. |
| 178 | நஸ்ரால் ரஹ்மான் மொஹமட் ஸஹ்ரான் | 19/1, மட்டாவ வீதி, வரக்காமுறை | அபூ ஹுதைபா | 21 | த.கி. |
| 179 | மொஹமட் முஸ்தபா மொஹமட் ஹரிஸ் | 105/2/1, ஹுஸ்கன்பொல, சியம்பலாகஸ்கொடுவ, நாரம்மல | அபூ நஜ்ஜார் | 46 | த.கி. |
| 180 | அப்துல் ஹமீத் மொஹமட் ரிபாஸ் | 63 பீ, மொஹமட் ஹாஜியார் ஒழுங்கை, காத்தான்குடி 4 | அபூ அப்பாஸ் | 39 | த.கி. |
| 181 | அப்துல் காதர் மொஹமட் அன்சார் | கெக்குனுகொல்ல | | 29 | த.கி. |
| 182 | பாத்திமா சீனத் அக்பார் | 41, டீ.எம். கொலம்பகே மாவத்த, கொழும்பு 05 | | 37 | த.கி. |
| 183 | மொஹமட் முஹுசின் ஸர்பாஸ் நிலாம் | முதலாவது ஒழுங்கை, குருந்துகொல்ல, வெரெல்லகம<br>பூசாரி நிலம், குருந்துகொல்ல, வெரெல்லகம<br>6, மல்லிகாராம வீதி, கொழும்பு 09<br>58/13 ஏ 1/2, 4 வது ஒழுங்கை, டீ.எம்.கொலம்பகே மாவத்த, கொழும்பு 05 | | 42 | த.கி. |
| 184 | தாஜுல் ஜுடி தாஜுதீன் | ஏ 1022/4, வீடமைப்புத் திட்டம், மாளிகாவத்தை, கொழும்பு 10<br>6, மல்லிகாராம வீதி, கொழும்பு 09<br>6/3/1, மல்லிகாராம வீதி, கொழும்பு 09 | | 36 | த.கி. |
| 185 | பாதிமா ரவுசி தாஜுதீன் | 6, மல்லிகாராம வீதி, கொழும்பு 09<br>ஏ10/2/4, தே.வீ. திட்டம், மாளிகாவத்த , கொழும்பு 10<br>6/3/1, மல்லிகாராம வீதி, கொழும்பு 09 | | 59 | த.கி. |
| 186 | சுஹிரா சின்னத்தம்பி உதுமா லெப்பே | 6, மல்லிகாராம வீதி, கொழும்பு 09 | | 63 | த.கி. |
| 187 | சீனதுல் அரபா பாரூக் | 11, 13 ஆவது லேன், கொழும்பு 3 | | 38 | த.கி. |
| 188 | தாஜுதீன் தஸ்கீர் அஹமட் | 6, மல்லிகாராம வீதி, கொழும்பு 09 | | 32 | த.கி. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CALENDAR 2020

# மனித நேயம்

**என்ற தொனிப்பொருளில் 12 பக்க வர்ண காலண்டர்கள்**
**உங்களது நிறுவனத்தின் பெயரில் பிரசுரித்துத் தரப்படும்**

**அரபுக் கல்லூரிகள், மதரஸாக்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கங்கள், பழைய மாணவர்கள் மற்றும் தமக்கான நிதி திரட்டலுக்கு இந்த வாய்ப்பை பயப்படுத்திக் கொள்ள முடியும். வர்த்தக நிறுவனங்களுக்கும் ஓர்டர் செய்ய முடியும்.**

minimum Order 200 Copies.
Contact : 077 7798096, 077 077 9492




Salamah Talks நிகழ்ச்சித் தொடரின் மற்றொரு நிகழ்வு 8-10-2019 அன்று "வாக்களிப்பும், அடிப்படை உரிமையும்" என்ற தொணிப்பொருளில் ஸலாமா கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. இதில் பிரதம பேச்சாளராக கொழும்பு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் சட்டத்தரணி ஏ.ம். ஹக்கீம் அவர்கள் கலந்து கொண்டார்கள். நிகழ்வுக்கு ஸலாமாவின் தலைவர் அஷ்ஷெய்க் ஆஸாத் அப்துல் முஈத் அவர்கள் தலைமை தாங்கினார். சகோதரர் பாஹிம் பைரூஸ் நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்.



முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வரின் இரண்டாவது ஞாபகார்த்த நிகழ்வு-கொழும்பு வை.எம்.எம்.ஏ. மண்டபத்தில் நடைபெற்றது. ஈரான் மற்றும் பலஸ்தீன் நாட்டுத் தூதுவர்களோடு அமைச்சர் ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். நினைவுப் பேருரையை பேராசிரியர் அனஸ் நிகழ்த்தினார். அமைச்சர் அஸ்வரின் பேரில் வறிய மாணவர்கள் சிலருக்கு பாடசாலை உபகரணப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.




அகில இலங்கை முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் 49 ஆவது பேராளர் மாநாடு கொழும்பு தபால் தலைமையகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்கு குழுவின் தலைவி கலாநிதி தீபிகா உடுகம விசேட பேச்சாளராகவும் இலங்கைக்கான துருக்கித் தூதுவர் மேதகு துஞ்சா ஷுஹதார் பிரதம அதிதியாகவும் கலந்து கொண்டனர். தலைமைப் பொறுப்பிலிருந்து ஓய்வுபெறும் கலாநிதி பீ.எம். பாரூக்கினால் அதிதிகளுக்கு நினைவு மலரும் நினைவுச் சின்னங்களும் வழங்கி வைக்கப்பட்டன.



ஐக்கிய அரபு எமிரேட்ஸின் இலங்கைக்கான தூதர் அஹ்மத் அலி அல்-முஅல்லா அவர்கள், கொழும்பில் உள்ள இலங்கை தேசிய வைத்தியசாலையின் துணை பணிப்பாளர் நாயகம் குமார விக்ரமசிங்க அவர்களைச் சந்தித்து, ஐக்கிய அரபு எமிரேட்ஸின் முஹம்மத் பின் ராஷித் அல் மக்தூம் நலன்புரி நிறுவனத்தால் அன்பளிப்பு செய்யப்பட வைத்தியசாலைக்கு அவசியமான மருத்துவ உபகரணங்களை கையளித்தார்கள்.

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org